DHAKSHINADHYA KALANIDHI
MAHAMAHOPADHYAYA

Dr. V. Swaminatha Aiyar

A SYMPOSIUM

COMPILED AND EDITED

BY

L. ANANTAIYAR
Editor, The "Hindu Nesan", Madras

AND

T. S. KOTHANDARAMA AIYAR, B. A.,
of the "Swadesamitr n" & Educationist", Madras.

FIRST EDITION.

MADRAS.
The "HINDU NESAN" Office
65, ARMENIAN STREET
GEORGETOWN
1933

1
1 90

ights Reserved.] [*Price* **As. 8.**

DHAKSHINADHYA KALANIDHI

MAHAMAHOPADHYAYA

Dr. V. Swaminatha Aiyar

A SYMPOSIUM

COMPILED AND EDITED

BY

L. ANANTAIYAR

Editor, The "Hindu Nesan", Madras

AND

T. S. KOTHANDARAMA AIYAR, B.A.,

of the "Swadesamitran" & "Educationist", Madras.

FIRST EDITION

MADRAS.

The "HINDU NESAN" Office

65, ARMENIAN STREET

GEORGETOWN

1933

Rights Reserved.] [*Price* As. 8.

DHAKSHINADHYA KALANIDHI
MAHAMAHOPADHYAYA

DR. V. SWAMINATHA AIYAR

A SYMPOSIUM

BY

1. Sriman L. ANANTAIYAR,
Editor, The "*Hindu Nesan*," Madras.

2. " V. V. SRINIVASA AIYANGAR, B.A., B.L.,
(Retd. Judge, High Court), Madras, &
Editor, "*Everyman's Review*", Madras.

3. " The Hon'ble Diwan Bahadur,
Justice K. SUNDARAM CHETTIAR, B.A., B.L.,
Puisne Judge, High Court, Madras.

4. " '*Bhasha Bharatha Dhurantharar*'
M. V. RAMANUJACHARIAR,
Rd. Pandit, Govt. College, Kumbakonam.

5. " T. S. KOTHANDARAMA AIYAR, B.A.,
Rd. Sub Editor, The "*Swadesa-Mitran*,"
Madras.

6. Diwan Bahadur Sir K. Ramunni Menon,
Vice-Chancellor, University of Madras.

7. " T. S. RAMACHANDRA AIYAR, B.A.,
Managing Editor, "*Kalaimagal*", Madras.

8. " K. G. SESHA AIYAR, B.A., B.L.,
(Retd. Judge, High Court), Trivandram.

9. " V. Muthuswami Aiyar, M.A., L.T.,
Dy. Inspector of Schools, Polur.

10. " T. S. KOTHANDARAMA AIYAR, B.A.,
Editor, The "*Educationist*", Madras.

தாக்ஷிணாத்ய கலாநிதி

மஹாமஹோபாத்தியாய

டாக்டர் வே. சாமிநாதய்யர்.

வியாசத்திரட்டு

உபகாரிகள் :

1. ஸ்ரீமான் ல. அனந்தய்யர் அவர்கள்,
   "இந்துநேசன்" பத்திராதிபர், மதராஸ்.
2. „ வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள், பி.ஏ., பி. எல்.,
   (ரிடயர்டு ஜட்ஜு, ஐக்கோர்ட்) மதராஸ்.
3. „ ஆனரபிள் திவான் பகதூர்
   கே. சுந்தரம் செட்டியாரவர்கள், பி. ஏ., பி. எல்.,
   ஜட்ஜு, ஐக்கோர்ட், மதராஸ்.
4. „ "பாஷா பாரத துரந்தரர்"
   எம். வீ. ராமாநுஜாசாரியார் அவர்கள்,
   ரிடையர்டு பண்டிட், காலேஜ், கும்பகோணம்.
5. „ டி. எஸ். கோதண்டராமய்யர் அவர்கள், பி.ஏ.,
   ரிடயர்டு பிரதம சப் எடிடர், "சுதேசமித்திரன்,"
   மதராஸ்.
6. „ திவான் பகதூர் ஸர் கே. ராமுண்ணி மேனன்,
   வைஸ்-சான்ஸலர், மதராஸ் யூனிவர்ஸிடி.
7. „ டி. எஸ். ராமசந்திரய்யர் அவர்கள், பி.ஏ.,
   மானேஜிங் எடிடர், "கலைமகள்," மதராஸ்.
8. „ கே. ஜி. சேஷய்யரவர்கள், பி.ஏ., பி.எல்.,
   (ரிடயர்டு ஜட்ஜு, ஐக்கோர்ட்), திருவனந்தபுரம்.
9. „ வி. முத்துசாமி ஐயர் அவர்கள், எம்.ஏ.,எல்.டி.,
   பால பாடசாலை பரிசோதகர், போளூர்.
10. „ டி.எஸ். கோதண்டராமய்யர் அவர்கள், பி.ஏ.,
    எடிடர், "எடுகேஷனிஸ்ட்", மதராஸ்.

முகவுரை.

"நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று."

தமிழ்த் தெய்வத்தின் பெயர் வாய்ந்து தமிழ்த்தரு வெனத்தழைத்து நின்று தம்மைச் சார்ந்தார் பலருக்கும் களைதீர நிழலளித்து, ஆவலடங்கத் தமிழமுதூட்டி, அனைவரும் அருந்தி மகிழ்வுற அரிய நூல் களென்னும் இனிய கனிகளை அவ்வப்போது இன்புற ஈந்து, அருந்தவச் செல்வமும் ஆசார சீலமும் அன்பும் பூத்துப் பொலிகின்ற பெரியாரை அனுதினமும் நினைத்து நன்றி பாராட்டாதார் இலரென்பதே எமது துணிபு. ஆதலால், இக்குரவரது குணங் குறிகளை அவரவரும் நினைப்பதற்குச் சிறிய ஸ்தூல சாதனமாக இச்சிறு புத்தகம் அமைந்துள்ளது. இது பெரு நன்றிவாய்ந்தார் பலர் பல்வேறு அமயங்களில் வாயுரையாக மொழிந்த வியாஸங்களின் தொகுதியாகும். இம்மகானின் உருவப் படமும் இதனில் அமைந்துள்ளது.

"இந்து நேசன்" ஆபீசு
சென்னை
7, டிசம்பர் 1933.

ல. அனந்தய்யர்

DHAKSHINADHYA KALANIDHI
MAHAMAHOPADHYAYA

DR. V. SWAMINATHA AIYAR

தாக்ஷிணாத்ய கலாநிதி
மஹாமஹோபாத்தியாய
டாக்டர் வே. சாமிநாதையர்.

Mahamahopadhyaya

Brahma Sri V. SWAMINATHA AIYAR

மகாமகோபாத்தியாய

பிரமஸ்ரீ வே. சாமிநாதய்யர்

By Mr. L. ANANTAIYAR,

Editor, The "Hindu Nesan," Madras.

இந்தக் கோடை விடுமுறைக்கு முன்னேயே இச்சென்னைப் பிரெஸிடென்ஸி காலேஜில் தமிழ்ப் பண்டிதராயிருந்து வந்த மகாமகோபாத்தியாய வே. சாமிநாதய்யரவர்கள் வேலையினின்று நீங்கிப் பென்ஷன் பெற்றுக்கொண்டு விட்டார். அவர் கும்பகோணம் காலேஜில் மட்டும் தான் நீண்ட காலம் தமிழ்ப் போதகராயிருந்து வந்தாரென்று சொல்லுவதற்கில்லை. பிரெஸிடென்ஸி காலேஜிலும் அவர் 15 வருஷங்களுக்கு மேலாகவே தமிழ்ப் போதகராயிருந்ததுண்டு. அவரை நாம் மற்றத் தமிழ்ப் பண்டிதர்களை யொப்ப ஒரு சாமானிய பண்டிதராகவே கருதி அவர் தமிழ்ப்பண்டிதர் பதவியினின்றும் நீங்கி விட்டாரென்று சொல்லுவதோடு நிறுத்தி விடுவதற்கில்லை. அவர் தமிழ்ப்பாடம் மட்டுமே

சொல்லிவந்தாராலும், தாய்ப்பாஷைப் பாடங்களல்லாத மற்ற பாடங்களைச் சொல்லி வந்த போதகர்களின் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்தை யுடைய ஒரு போதகராய் மதித்து, அவரைப் பாராட்ட நாம் கடமைப்பட் டிருக்கிறோம். ஆகவே இச்சந்தர்ப்பம் அவரைப் பற்றி நமக்குத் தெரிந்ததை வெகு சுருக்கமாய் நாம் இந்'நேச'னில் வெளியிடுகிறோம்.

மகாமகோபாத்தியாய வே. சாமிநாதய்யர் அவர்கள் கும்பகோணத்துக்கு மேற்கே 10 மைல் தூரத்திலுள்ள உத்தமதானபுரம் என்ற ஒரு சிறிய கிராமத்தைச் சேர்ந்தவர். ஐயரின் தகப்பனார் ஸ்ரீ வேங்கடசுப்பையர் என்னும் திருநாமத்தைப் பூண்ட ஒரு பெரிய சிவ பக்தர். அத்தந்தையாருக்கு அந்நாளில் நமது ஐயரை ஆங்கிலம் படிக்க வைக்க வேண்டுமென்ற யோசனை யுண்டாக வில்லை. அவருக்குத் தமது பிள்ளையைச் சங்கீதம் கற்கும்படி செய்ய வேண்டுமென்ற ஆவல் மிகுதியு மிருந்ததாய்க் காண்கிறது. ஏனெனில், நமது ஐயருக்கு முதலில் சங்கீதமும் தமிழும் ஒருங்கே சொல்லிவைக்கப்பட்டு வந்ததாய்த் தெரிந்தவர்கள் சொல்லக் கேட்டுள்ளோம். ஆனால் தமிழ்ப்பாஷையும், பழைய தமிழ் நூல்களும் செய்திருந்த அதிர்ஷ்ட வசத்தால் ஸ்ரீ வேங்கடசுப்பையர் தமது குமாரரைத் தமிழையே முக்கியமாய் வாசிக்கச் சொல்வதாய்த் தீர்மானித்து அன்னாரைத் தமிழ் கற்பதற்காகத் திருவாவடுதுறை மடத்திற் கொண்டுபோய் விட்டார். அம்மடம் கும்பகோணத்துக்கு அருகாமையிலுள்ளது. அம்மடத்தின் ஆதரவில் பண்டை நாளில் தமிழ் வாசித்தவர்கள் பலர்; அன்னாருள்

நமது ஐயர் விசேஷ கியாதி பெற்றிருந்தவர்; அவர் வாசிக்கும்போது அம்மடத்து வித்துவானுகவும் ஆசிரியராகவுமிருந்தவர் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள். ஆகவே அம்மடத்திலேயே ஐயருக்கு முன் பிள்ளையவர்களிடம் படித்தவராகிய கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் போதகர் ஸ்ரீ தியாகராஜ செட்டியார் தாம் அந்தக் காலேஜை விட்டு நீங்கிப் பென்ஷன் பெறுஞ் சமயத்தில் தமது ஸ்தானத்தில் கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் போதகராய் நம் ஐயர் அவர்களையே வைத்துவிட்டுப் போகவேண்டுமென்ற கருத்துக்கொண்டு, தமது கருத்தை அச்சமயம் காலேஜ் தலைவராயிருந்த ராய் பகதூர் T. கோபாலராயரிடம் தெரிவித்தார். அதற்கு ராயர் அவர்கள் உடன்பட்டு ஸ்ரீ தியாகராஜ செட்டியார் ஸ்தானத்துக்கு ஐயர் அவர்களை நியமித்தல் தகுதி யுடையதாகுமென்று கல்வி இலாகாத் தலைவருக்குச் சிபார்சு செய்தார். அந்தச் சிபார்சு அங்கீகரிக்கப் பட்டு அந்தக் காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக நமது ஐயர் நியமிக்கப்பட்டார்.

இது 1880-ம் வருஷத்தில் நிகழ்ந்தது. அது முதல் 23 வருஷகாலம் இடைவிடாமல் அந்தக் காலேஜிலேயே தமிழ்ப் போதகரா யிருந்து வந்தார். ஆனுல் எவ்வளவு காலந்தான் அவர் தமிழ்ப் போதகராயிருந்துவரும் ஏக தேச உரிமையைக் கும்பகோணம் காலேஜ் பெற்றிருக்க கூடும்? 1903-ம் வருஷத்தில் அச்சமயம் கல்வி இலாகாத் தலைவராயிருந்த மிஸ்டர் ஸ்டூவார்ட், ஐயர் அவர்களை அக் காலேஜை விட்டு இச்சென்னை ராஜதானிக் கலாசாலைக்குத் தமிழ்ப் போதகராய் மாற்றினுர். ஏனெனில், மிஸ்டர்

ஸ்டுவார்ட் கும்பகோணம் காலேஜ் தலைவராயிருந்தபோதே ஐயரின் திறமையை விசேஷமாய் அறிந்து கொண்டவர். அவர் ஐயரை சென்னைப் பிரெஸிடென்ஸி காலேஜில் தமிழ்ப் போதகராய் வைத்துத் தம் கண்ணுள்ளபோதே பார்க்க வேண்டுமென்ற ஆசை மேலிட்டவரா யிருந்தது பற்றி, அவர் தக்க சமயம் வாய்ப்பதை யெதிர் பார்த்துக் கொண்டே யிருந்து, அவரை 1903-ல் இச்சென்னைப் பிரெஸிடென்ஸி காலேஜுக்கு மாற்றியே தீர்த்தார். ஆகவே அந்தக் காலேஜிலும் கும்பகோணம் காலேஜிலுமாக 39 வருஷகாலம் ஐயர் அவர்கள் வேலை பார்த்தார். அவரது தமிழ்த் திறமையையும், தமிழ்ப் பாடஞ் சொல்லுந் திற மையையும், மாணவர்களை மரியாதையாய் நடத்தும் திறமை யையும், அன்னாருடைய மரியாதைக்குத் தம்மை உரியராக் கிக்கொள்ளுந் திறமையையும் பற்றி நாம் இங்கு பேசுதல் அநாவசியமாகும். ஆங்கில பாஷை பயிற்றுவிக்கும் போத கர்கள் மதிக்கப்படுவதைவிட அதிகமாகவே ஐயர் அவர்கள் மாணாக்கர்களால் மதிக்கப்பட்டார். அவருடைய தமிழ் வகுப்புகளில் ஒழுங்குத் தப்பான செய்கைகளைப்பிள்ளைகள் ஒருபொதுஞ் செய்யமாட்டார்கள். அவர் பாடஞ் சொல் லுவதை நிறுத்துகிறாரே யென்று சில சமயங்களில் பிள்ளை கள் உண்மையிலேயே வருந்துவார்கள்.

நமது ஐயர் அவர்கள் கும்பகோணம் காலேஜுக்கு நிய மனமாய் வந்தபோதே தமிழ் பழைய நூல்களின் ஆராய்ச் சிக்கு முகூர்த்தம் கொள்ளப்பட்டுப் போனதாய்ச் சொல்ல லாம். ஏனெனில், காலேஜ் போதகரா யிருந்துகொண்டே தமிழ்ப்பெருங் காப்பியங்களாகிய சீவக சிந்தாமணி, சிலப்ப

திகாரம், மணிமேகலை இவைகளை ஆராய்ச்சி செய்து ஏட்டுப் பிரதிகளிலிருந்து எடுத்து அச்சிடுவிக்க அவர் தொடங்கினார். முதலில் அவர் சிந்தாமணியை அச்சிட்டு வெளியிடுவதை மேற்கொண்டார். அதனை அச்சிட்டு வெளியிட அவர் பட்ட சிரமம் சொல்லுந்தர மின்று. ஏட்டுப் பிரதிகளை வைத்துக்கொண்டு பழைய நூலொன்றைச் சோதித்துப் பெயர்த்தெழுதி போதிய குறிப்புகளுடன் அச்சிடுவிக்கும் சிரமம் பெரிதாகும். ஏட்டுப் பிரதிகளில் சிதைந்தும் உருமாறியும், அடிகளே மாற்றப்பட்டும் கிடக்கும் பாடல்களை யொத்துப் பார்த்து ஆக்கியோன் செய்த பாடல்கள் இம்மாதிரிதா னிருக்கவேண்டு மென்று நிச்சயித்து அவற்றைப் பெயர்த் தெடுத் தெழுதுவதிலும், மேற் கோள்கள் இன்ன நூல்களிலிருந் து எடுக்கப்பட்டிருக்கின்றன வென்று கண்டு பிடிப்பதிலும் உள்ளகஷ்டம் சாமானியமான தன்று ; பழைய நூலாராய்ச்சியில் பழகியவர்களுக்கே அக்கஷ்டம் இத்தன்மையதாகு மென்பது தெரியவரும். இவ்வளவு கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டு ஐயர் அவர்கள் உழைத்துவர ஜீவக சிந்தாமணியும் அச்சாய் வெளிவந்தது. இதற்குப் பிறகு சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையையும், ஏனைய நூல்களையும் ஐயர் அவர்கள் காலக்கிரமத்தில் அச்சிட் டுதவினர். சிந்தாமணியை அச்சிட்டு வெளியிட ஐயரைத் தூண்டியவர் காலஞ்சென்று விட்ட சேலம் ராமசாமி முதலியார் ஆவர். அவரைப்போலவே உற்ற துணையாய் நின்று ஐயருக்கு அந்நாட்களில் தைரிய மூட்டி வந்தவர்களாக காலஞ்சென்று விட்ட ராய்பகதூர் பூண்டி

ரங்கநாத முதலியாரையும், ராவ் பகதூர் சாது சேஷய்யாவையும் நாம் குறிப்பிடலாம்.

ஐயரைப்பற்றி நாம் எழுத முன் வந்த இச் சுருக்க வரலாற்றை இரண்டொரு வார்த்தைகளுடன் நாம் நிறுத்திக் கொள்வோம். ஐயர் அவர்கள் பிரெஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் போதகராயிருந்து வந்தபோது அவருக்கு மகாமகோபாத்தியாய பட்டஞ் சூட்டப்பட்டது. ஐயருக்கு முன் எந்தத் தமிழ்ப் பண்டிதருக்கும் அப்பட்டம் சூட்டப் பட்டதில்லை. அதனைப் பெற்றதில் ஐயர் தமக்குத்தாமே நிகராவார்.

—" இந்துநேசன், " மதராஸ் —1919.

MAHAMAHOPADHYAYA

V. Swaminatha Iyer

BY

Mr. V. V. SRINIVASA AIYANGAR, B.A., B.L.,
(Rtd. Judge, High Court), Madras.

In an unpretentious house in the South Main Street, in Tiruvatteswaranpet, at Madras, there lives a great man, one of the greatest that South India has produced. He is now 64 years of age. But he looks quite ten years younger. Rather dark-brown in complexion with a broad face and forehead, with clear-cut features, he is of medium height and size. In appearance he is a modest *Smartha* brahmin gentleman of a rather retiring temperament. He carries no striking distinction about him in figure or features, manners or dress. But if you should succee in making him speak to you on any serious subject for a few moments, you begin to realise that you are in the presence of an uncommon personality. A few moments more and you sit or stand charmed and hypnotised by the soft and musical accents of a gentle and persuasive speaker, by the simple and sweet articulation in Tamil language of a clear and correct thinker, by the unpedantic wealth of well-digested learning of a profound scholar, by the sim plicity and serenity of a great soul and, above all, by the i mpress of a high and nobly disciplined character. And you begin

to wonder at the greatness of the spirit, glowing hidden behind such an unpretentious exterior. But thuat is the East.

Mahamahopadhyaya Swaminathier, for he is the man, retired from his place as Tamil Pandit of the Presidency College in April last. You expect that in his well-earned retirement he is enjoying rest. If so, you cannot be more mistaken. Morning, noon and evening, and far into the silent hours of the night, you see him at work in the midst of his books and notes, of manuscripts of paper and palm-leaf piled all round, and with or without a number of scribes copying or writing down to his dictation. During the last quarter of a century and more, day after day, he has sighed that there should only be twenty-four hours in a day and that so many of them should easily have to be wasted in the ways of the world. The older he grows, the more does he seem to be spurred to a redoubling of his efforts, under a painful sense of the coming on of the night, in which no man can work. So much to do and so little done, has been almost his life-long exclamation, articulate and inarticulate.

To see him at work would be a tonic to any young man. During the last thirty years at least, he has lived the patient, strenuous life of laborious days. But he almost looks younger for it. Work would seem to agree with him wonderfully. He thrives on it. It is true he is careful and consents to sleep and eat. But he does not believe in any fads about physical exercise. He plays no games and can play none. Work is his food. Work is his worship. Work is his estate. Work is the breath of his life.

The gentle and effective way in which he reminds one that there is such a thing as Time and such a thing as waste of it, is a study in fine manners. He does not draw out his gold watch, fuss about his engagements and rush off after a vigorous shake of the hand, to impress you with a sense of his superiority. He is afraid of giving offence and anxious you should not think ill of him. As soon as the business is over, he kindly reminds you of it, begs to be excused and persuades you to give or take leave, as the case may be. You wish to continue the interview not because you have any purpose, but because you find his company exalting and edifying. But he is merciless in the matter of time.

Next to his devotion to work and sense of time, comes, if at all next, the thoroughness and accuracy of all his work. It is a great characteristic. To fix up a correct reading he would go miles, starve for days, wade through hundreds of fusty palm-leaf manuscripts, would—to use the language of that hackneyed phrase—beg, borrow or steal as many copies or versions as are to be had anywhere near or far, would consider no trouble too much and no time as wasted. The Tamil classics, with the discovery and publication of which his name and fame will for ever be associated, are marvels of stupendous painstaking. There is an introduction embodying the result of his scholarly and historic research, there are glossaries of out-of-the way words : there are indexes elaborately and carefully prepared : there are annotations and criticisms : there are notes in which all the various readings are set forth and considered : there are bibliographies which could be prepared by no ordinary scholar : there are references and cross

references to other works which simply amaze you: and above all, there is a beautifully got-up book with few errors or printer's devils. Each word in the printed book represents the result of special attention paid to it, of scholarly examination, of delicate weighing of numerous other words considered and rejected, of a definite and deliberate thought behind it. To appreciate such a work suitably one must also know how it is done.

Truly has it been said that the world knows nothing of its truly great. Military conquerors loom large in public imagination. Financial magnates are worshipped for their wealth. Platform orators are cheered for their eloquent platitudes. But the scholars and thinkers of every nation are relegated to a comparative obscurity. In India it used not to be so. It was the one and only country in the world where poverty was an ideal and where high thinking and high character were greatly esteemed. But the influence of the West has changed all this in modern India. I venture to think that in no other country in the civilised world would a scholar of the eminence of Mahamahopadhyaya Swaminathier have been allowed to retire without some worthy public recognition of his transcendent service to Tamil language and literature. In no other country in the world would a man of such true greatness be allowed to carry on his favourite work in an unknown house, in a little known part of Madras, without any interruption from streams of visitors and admirers. Thanks to indifferent Madras and South India, the great Pandit is permitted by the public to do his work in peace and quiet. And because so little is known of him, it is perhaps as well that the public should know a little of him.

He was born in February 1855, in his maternal grand father's house in the village called *Suryamoolai*, situate about twelve miles from Kumbhakonam. He was the eldest son of Venkatasubbier who was a musician attached at first to the *Udayarpalayam* and then to the *Ariyalur Zamin Samasthanam*. The father was known also for his great piety and scholarship in Tamil. Swaminathier's mother bore the appropriate name of Saraswati.

He was at first a pupil in the pial school of his family village of *Uttamadanapuram*. Like most boys of those days he began learning both in Sanskrit and in Tamil. He learnt singing from his father. A suggestion which appears to have been made at the time that he should be taught English was fortunately or unfortunately rejected by the paternal authority. For some years the boy studied some rare Tamil works and practised singing under one Satagopachariar, the State-Pandit of *Ariyalur*. In his fourteenth year he was betrothed to a girl belonging to a neighbouring village. After this for a few years Swaminathier's education was literally peripatetic. In those days there were no centralised organisations where all that there was to be learnt in Tamil could be studied. Each Pandit was known as a proficient in some particular book and the eager student had to go round from village to village studying under each for the necessary period.

But the great teacher under whom Swaminathier imbibed his scholarship was Pandit Minakshi Sundaram Pillai, who was a scholar of great repute in the Tamil land. In those days the Saiva Mutts of South India which were non-brahman foundations still retained their original character as *Universities* for the dissemination of

Tamil learning. The Mutt at *Thiruvavaduthurai* was at that time presided over by Sri Ambalavana Desigar, himself a great scholar and by him Minakshi Sundaram Pillai had been appointed as the *Vidvan* of the Mutt. For some generations past in South India, no one would be easily accredited as a Tamil scholar who could not trace his scholarship to *Maha-Vidvan* Minakshi Sundaram Pillai or lineally to some one who studied under him. When Swaminathier was barely sixteen, it was said that any further education in Tamil language and literature was possible for him only under Minakshi Sundaram Pillai who was then presiding over his famous seminary at Mayavaram. Thither Venkatasubbier took his son and entrusted him to the special care of the great teacher. The father and son had never been separated before and when at the parting, tears dripped from the father's eyes the teacher asked him to feel no concern about the young man saying " Divine grace will protect him." At Mayavaram young Swaminatha persevered not only in his Tamil studies but coming into contact with Gopalakrishna Bharathi—the great composer of that wonderful storehouse of exalted and thrilling music, called *Nandan Charitram*—began to practise as a vocalist under him till Minakshi Sundaram forbade it, as interfering with the singlemindedness with which the studies in Tamil classics were required to be prosecuted. Thus by the command of the respected *Guru* was put an end to, for ever, Swaminatha's inherited hankering for music. Even now one feels the subtle charm of the musical manner in which the Pandit reads aloud and renders Tamil poetry, the subdued and repressed music

shining like the soul imprisoned in the beauty of embodied words.

Mahamahopadhyaya Swaminathier of to-day is perhaps the greatest standing illustration of the greatness and glory of the ancient Indian Educational system. In that system the pupil's mind and character not only had a chance but were under a daily necessity to come into vital contact with the mind and character of the teacher. That system had nothing of the cold Gramaphone teaching of the present day. It is true we are passing thousands through the so-called schools and content to receive them at the other end of the machine, with the hall-mark of the University. But it is obvious that the change has not at all been gain. A pause, a look, a smile, a little hiss of disapproval from the great teacher sitting in front was calculated to guide, inform and inspire as numerous lectures closely followed and noted will not and could not. What is more, the scholars of old believed in diving deep and in thorough searching for meanings. They understood and appreciated words and weighed them as we do our diamonds. They attacked each phrase and sentence and made it yield up all that it had to give. They were not in a hurry to be done with. They lingered in large leisure not without a smack of relish and renewed enjoyment. They knew the value of such study for culture and discipline of the mind.

In such a school and under such a teacher was young Swaminatha reared. The teacher and pupils, they were really an assemblage of scholars, a University of Professors, living in a radiant atmosphere created by themselves.

Every day they had their intellectual feats and feasts. Impromptu verses were composed and criticised. And the comradeship in culture made for profundity and supreme value in the creative and critical aspects of literary art.

It was also about this period that Minakshi Sundaram Pillai composed many of his great works in Tamil. Most of them were dictated by him to his pupils who engraved them not only on the palm leaf but in their splendid memory. It is a great pity that at the present day people are perforce made to neglect the incomparable value of assimilating by means of memory the best in literature both for purposes of scholarship and for the supreme delights of literary rumination.

About that time Sri Subramania Desigar had succeeded to the headship of the Mutt and on his invitation Minakshi Sundaram Pillai went over to *Tiruvavaduthurai* and began teaching pupils there. Tyagaraya Chettiar who was in those days the chief Tamil Pandit at the Government College, Kumbhakonam, had been one of the pupils of Meenakshi Sundaram Pillai. The former during holidays used to pay visits to his old master at *Tiruvavaduthurai*. It was during these visits that Swaminathier became acquainted with Chettiar. It was this acquaintance that led later on to Swaminathier being appointed to succeed Chettiar as the Tamil Pandit of the Kumbhakonam College.

The year 1876 saw the death of Meenakshi Sundaram Pillai at *Tiruvavaduthurai*. His death was felt as a great blow by Swaminathier who was then barely twenty-one. Sri Subramania Desigar seeing him so stricken with grief

undertook himself to teach Swaminathier in future, built him a house, found his comforts and set him also to teach others in his turn. Sanskrit and Tamil scholars and renowned musicians used annually to visit the Mutt for receiving presents. Zamindars and wealthy men and even educated gentlemen in high stations used to visit the Mutt for worship. As Swaminatha was a sort of exhibition scholar, during such visits, he became, in course of time, acquainted with many notable men in South India.

When the Desigar went on a pilgrimage to Madura, Swaminathier also accompanied him and received at the conclaves held in various places, numerous presents in recognition of his great talents, his wide and deep learning, his facility in poetical composition and his powers of fluent and clear exposition. It was during this trip that he became acquainted with the Chiefs and Magnates of the Pandya Country. In brief, it was Swaminathier's intimate association with the head of the Mutt who was himself a scholar of no mean order and also a liberal patron of letters, that afforded him unique opportunities for acquiring high culture aud for laying the foundation of a great literary reputation. And unlike most men Swaminatha, young as he was, utilised the opportunities of his life.

In the year 1880, Tyagaraya Chettiar retired from the College. Rai Bahadur T. Gopal Rau, the renowned educationist of South India, was then the Principal of the College. He had asked Chettiar himself to recommend a successor and he having probably long before made his choice, went to the Mutt and prevailed on the Desigar and

Swaminathier to consent to the latter taking his place in the College. The choice was hailed with great satisfaction by the late Sadhu Seshier, the late R. V. Srinivasier and other educationists. It proved a most popular appointment. The pupils of the College rejoiced over it. The professors themselves often wished to attend his classes. Thus it was in February 1880, that Swaminathier entered the educational service under the Government in the College at Kumbakonam, that Cambridge of South India as it was justly reputed in those decades.

Mahamahopadhyaya Swaminathier cherishes with warm gratitude to this day the memory of his benefactor Tyagaraya Chettiar. The house of Swaminathier at Tiruvatteswaranpet is called "Tyagaraya Vilas."

He soon became not only a popular and great teacher in the College, but famous in all South India, and loved and respected by the public. On the occasion of Rai Bahadur T. Gopal Rau leaving Kumbhakonam for Madras, he gave public expression to his admiration for the capacity and scholarship of Swaminathier and pointed out how different his position and prestige might have been had it been in the days of Tamil Rajahs. The pay in the College was mere allowance for maintenance and the Pandit's real work was done out of College. Following faithfully the admonitions of Tyagaraya Chettiar, his successor began in earnest the career of research into the classical period of Tamil literature. Then began the life of laborious days which is evento-day his unique distinction and characteristic. The writer of this sketch still remembers the small room upstairs in the house at Kumba-

konam where Swaminathier, seated on a broad bench next to the window overlooking the river Cauvery, would pour over books and manuscripts for hours and hours.

A few years after he was attached to the College, the late Salem Ramaswamy Mudaliar, M.A., B.L., a gentleman *par-excellence*, of quiet and noble manners, of fine culture and wide reputation, was posted as District Munsiff at Kumbhakonam. It was he that gave the first manuscript of "*Jeevaka Chintamani*" to the Pandit and asked him to study it himself and afterwards expound it to him. When Salem Ramaswamy Mudaliar resigned judicial service and with a view to revert to the Bar was leaving Kumbhakonam, he made a parting request to the Pandit that he should bring out a correct edition in print of that great Tamil classic. It was this that in the early eighties of the last century Pandit Swaminathier was set on what has proved to be his great and life-long service to the renaissance of Tamil literature.

At this distance of time it is not easy to estimate the peculiar difficulties under which the Pandit laboured in deciphering ill-written and moth-eaten manuscripts, in understanding the meaning of many words and expressions relating to the Jain and Buddhistic creeds and in determining the correct reading in a maze of conflicting manuscripts. It was often impossible to say where the text ended and where the note or commentary began. The Tamil language during its passage through twenty and more centuries has shed so many words and adopted many others and it was no easy task to familiarise oneself with all such words, to go to Buddhists and Jains and learn their cults

2

and the Tamil names for them and try and discover a little ray of meaning in that mass of defiant darkness of the manuscript.

The year 1887 was a great and memorable year in his life for it was then that he published *Jeevaka Chintamani*. It is a marvel of scholarship. It is a memorial of the infinite painstaking of a true lover and devotee of literature. It spread his fame all over the Tamil speaking world. It revived the hope and joy of many a Tamil scholar. Salem Ramaswamy Mudaliar was pleased beyond bounds. And old Tyagaraya Chettiar was in ecstasies. When success thus crowned the labours and strenuous efforts of Swaminathier, even though the help and recognition he received were far from adequate, it served to imbue him firmly with a faith in himself, in the potency of effort, and in the unconquerable nature of a resolved purpose.

It should not be supposed that Pandit Swaminathier had, in the successful achievement of such a beneficent and innocent object as the publication of an old classic accorded to him all fame and no blame whatever. Of course it was not to be. The world has been always the same. And detractors and enemies were not wanting. Some said it was full of faults. Some others condemned him for polluting himself by publishing a Jain work. And much else in the same vein.

In the case of some natures, misfortunes and difficulties serve as a spur for re-inforced effort and rare achievement. In the case of some others and in certain periods of a man's life, it is not failure but success that serves to sustain

and stimulate the moral nature, to further and better activity. Thus did it prove with Pandit Swaminathier. The splendid success that attended his first effort in the publication of a practically lost Indian classic would seem to have determined the devotion of all his time and talent, during the rest of his life, to the rescuing from oblivion all the scholary elucidation of Tamil classics alone.

In this connection, we may refer to a question that rises readily to our lips and which has often been asked, whether after all, it is worth the while of a great scholar and thinker exclusively to devote himself to the mere work of the publication of other people's writings, albeit they are classics and whether such a scholar and thinker does not owe it to himself, to his generation and to posterity, to express himself in some great original work. Such questions are as impertinent as they are unprofitable. Apart from God or Destiny, a man is in the ultimate his own measure of what is possible and proper. It is possible that the Pandit, if he had directed his labours and devoted his years to what is called original work, might have furnished us many volumes written in an altogether fresh style of prose, simple and vigorous, clear and accurate: and also perhaps a large quantity, not indeed of poetry, but of correct and pleasing verse. What he is capable of in these directions, we could see and admire in the introductory and elucidatory portion even of his published works. But all told, there can be little doubt that it is a matter for congratulation so far as the Tamil language and literature are concerned, that by a fortunate concatenation of circumstances or by his own deliberate choice, he should have circumscribed and concentrated his activities to the repro-

duction of the classics. For reproductions they certainly are in every sense of the word.

It was in this way, spurred on to further achievement by initial success that the Pandit went on in course of years to publish and present to the public a large number of such classics.

It was in the year 1888 that Sri Subramania Desigar, the friend and patron of the Pandit, departed life and this was a source of bereavement to him.

Pathu Pattu or the ten Idylls was the next book published by him. A rare collection of poems remarkable for the directness, vividness, detailed accuracy, freedom from exaggeration and picturesqueness in the description of natural scenery and the delineation of elemental emotions. The story of the discovery by him of that classic would read like a fairy tale. Many were the difficulties he encountered and had to overcome. But he persisted and persevered and brought out the publication in 1889.

The exquisite Tamil classic known as *Sillapathikaram* was issued in 1892 and in 1894 was published *Pura Nanuru*, a collection of 400 lyrics composed by the great poets and poetesses of the Sangam Age.

Meanwhile in 1893, Swaminathier lost his father: but these and other domestic bereavements and difficulties were not such as unduly to interfere with the steady and even course of his devoted work.

The great Buddhistic work of *Manimeghalai* was published by him in 1898. It was a great achievement.

The historical and other introductions in it are masterpieces of scholarship.

Between the publication of *Manimeghalai* and December, 1903, when he was translated to the Presidency College at Madras, he published various small works, more especially some of the compositions of his great teacher *Mahavidvan* Meenakshi Sundaram Pillai. After his advent to Madras, he brought out *Pathithru Pathu* and numerous smaller works, both ancient and modern, the latter being mainly the composition of either Pillai or Chettiar.

Many have been the marks of recognition by the Government of the great services rendered by the Pandit to the Tamil language. In January, 1903, he received a certificate of merit on the occasion of the coronation of our late King Emperor Edward VII. In 1905, a money grant of Rs. 1000 was made to him by the Government and in January, 1906, the distinction of *Mahamahopadhyaya* was conferred on him. His reputation has not been confined to the limits of South India. It has spread to every place and person having any connection however remote with the Tamil language. Men like the Professor Ranganadha Mudaliar in South India held him in great regard. The leaders of Tamil in Ceylon like the Hon'ble Mr. P. Ramanathan and Sir P. Arunachalam were glad to recognise his great services. Enthusiasts of Tamil language and literature in Europe lavished their praises on him for his fine scholarship and record of memorable work. It was only the other day that Rabindranath Tagore paid a visit to the Pandit to see his library and the scene and surroundings of his unremitting literary labours.

Nevertheless one is inclined to regret how inadequately the work and worth of *Mahamahopadhyaya* Swaminathier is recognised by his own countrymen in South India. It is not for his sake that the regret is felt. For, it must be said of him that he has not been insensible to public recognition and appreciation. He has never sought mere fame. To honour our great is to honour ourselves. Due and discriminative appreciation is worth having as the greatest incentive to the work of every workman. In the case of Tamil language and literature he has toiled for decades and is still toiling. He has deserved well of all the people of the Tamil land.

He found the damsel of Tamil language with all her jewels lost and neglected and uncared for. He adopted her as his own daughter, cared for her, nursed her and has recovered not only many small jewels but three out of the five of her chief ornaments she was proud and fond of. He has decked her again with her *Chudamani* or head ornament in the shape of *Jeevaka Chintamani*, he has again clasped round her waist her beautiful waist-band in the shape of *Manimeghalai*, he has adorned her feet once more with her tinkling anklets in the shape of *Silappathikaram*. He is still looking for *Valaiyapathi* her wristlets and *Kundalakesi* her ear-rings. Let us hope that he may find them also soon for her.

—" *Everymans Review*," *August 1919.*

UNVEILING OF THE PORTRAIT OF

MAHAMAHOPADHYAYA

V. SWAMINATHA AIYAR

By The Hon'ble Diwan Bahadur

Justice K. SUNDARAM CHETTIAR, B.A., B.L.,

Puisne Judge, High Court,

MADRAS.

In response to the call of my esteemed friend Dr. Savoor, that high-souled gentleman, I am here to-day to take part in the pleasant function of unveiling the portrait of the great Pandit. As the spokesman of you all, I have the privilege of paying a tribute to one who has so well earned the affection, regard, and love of generations of students. I believe that the idea of installing a portrait on the occasion of the Diamond Jubilee is a well-conceived one, inasmuch as a portrait puts us in memory of the character, achievement, and personality of the original and the college authorities have to be congratulated on having arranged for it.

You are perpetuating the memory of a great man. His portrait will be a reminder to many an aspirant after

proficiency in Tamil Language and Literature. Having spoken about the utility of installing his picture in the College Hall, let me give you a brief sketch of his career. Mr. Aiyar was born in a village near Papanasam. His father was a pious and a learned gentleman with great attainments in music. Under his fostering care, Mr. Aiyar had training in Tamil Language and Literature, and later he came under the direction of the great *Vidwan* Minakshi Sundaram Pillai. He was the *Samasthana Vidwan* of the Tiruvavaduthurai Mutt, and it is a matter for congratulation that the Mutt extended its patronage and support to such a great scholar. In this respect, I should think it has fulfilled one of the purposes, for which these institutions were founded. Mr. Aiyar was also a favourite disciple of the late Mr. Thyagaraja Chettiar who occupied the Tamil Chair in this college and it was a rare coincidence that the pupil stepped into the shoes of his *Guru*, in 1880 or so. As a Pandit, he filled the post for nearly a quarter of a century and performed his duties not only to the satisfaction of others but what is more difficult, to the satisfaction of his inner self. I am told that by his exemplary character, sweet manners, and great proficiency in Tamil he would keep students spell-bound while listening to his discourses. I may be pardoned if I just tell you that there used to be a tendency among some students in those days to look askance at Vernacular classes. But the unique abilities of Pandits like Mr. Aiyar, drew the admiration of even such recalcitrant students. His merit was so well recognised by the higher authorities that, after his successful career in this College, he was taken over to the Presidency College where he performed his

duties and rendered meritorious service for about a decade and a half. Thereafter he went into retirement, full of knowledge, experience and years. During the long course of his professorship in both Colleges, Mr. Aiyar did not confine his attention to the mere routine of College teaching but devoted much of his time to what I may call research work in Tamil Literature. I need hardly tell you that such work is no easy one. With untiring patience and assiduous care, he devoted his time and attention to the work of editing the great classics of Tamil Literature. I may here mention a few of them, *Jeevaka Chintamani*, *Silaepathikaram*, *Manimeghalai*, *Pathu Pattu* and others. In this respect I consider that he has laid the public under a debt of gratitude. To him I may well apply the saying of the poet, "still achieving, still pursuing."

Having spoken something about the career of the great Tamil Pandit whom all of you are here to honour, it is not improper for me to say a few words about the greatness of Tamil Literature. I do not profess to have any deep knowledge of it, but as a student learning that Vernacular, I venture to make a few observations. Are we not proud of having in Tamil Literature that immortal, monumental work, Thirukkural, which has won universal fame? Are there not great philosophical poets who have expressed their high views for the good of humanity in the *Thevarams*, the *Prabandhams* of saints and in the immortal songs of Pattinathar?

Mr. Aiyar has done excellent service for the cause of Tamil research. So we should with devotion unveil his portrait. Many a patriot has done his best for the advance-

ment of Tamil Literature. Need I mention to you the name of one gentleman whose munificence is phenomenal and who has rendered substantial help to the cause of higher education in this Presidency by the establishment of the Annamalai University in the sacred place of Chidambaram where the dance of the God Nataraja symbolises the energising of the universe? It would not seem presumptuous on my part if I appeal to philanthropic gentlemen of that stamp to extend their generosity in the matter of the improvement of Tamil Literature.

Gentlemen, I have to tell you that Mr. Swaminatha Aiyar whose portrait I have the privillege of unveiling to-day was honoured with the title of Mahamahopadhyaya by the Government, and it is also a matter for gratification that His Holiness the Sankaracharya of Kumbakonam conferred on him the title of Dhakshinadhya Kalanidhi. We all feel proud of Mr. V. Swaminatha Aiyar who now in his advanced age can justly review his life with pride and complacence. I wiil now, with the permission of the President, unveil his portrait.

MAHAMAHOPADHYAYA

V. SWAMINATHA AIYAR

BY

BHASHA BARATHA DHURANTHARAR

MR. M. V. RAMANUJA CHARIYAR.

ஜனனமும் ஆரம்பக்கல்வியும்.

மகாமகோபாத்தியாய வே. சாமிநாத ஐயரவர்கள் இந்தத் தஞ்சை ஜில்லா பாபநாசத்திற்குப் பக்கத்திலுள்ள உத்தமதானபுரம் என்னும் கிராமத்தில் உத்தமமான ஒரு பிராம்மண குடும்பத்தில் உத்தமரான ஸ்ரீ வேங்கடசுப்ரமணிய ஐயர் என்பவருக்கும், உத்தமியான ஸரஸ்வதி அம்மாள் என்பவருக்கும், 1855-ம் வருஷத்தில் திருக்குமாரராக அவதரித்தார்கள். அவர்களுடைய பிதா, சங்கீதத்தில் மிகப் பிரஸித்திபெற்ற கனம் கிருஷ்ணையர் என்பவருடைய மூத்த ஸஹோதரியின் தௌஹித்திரரும் மாணுக்கருமாவர்; ஸங்கீதத்தில் சிறந்த பண்டிதர்; கனம், நயம், தேசிகம் என்கிற மூன்றில் கனம் என்னும் வழியில் மிக்க பயிற்சி யுடையவர்கள். அவர்களுடைய முதிய பிராயத்தில் அவர்களுடைய ஸங்கீதத்தை நான் கேட்டிருக்கிறேன். அப்பொழுது அவர்களுக்கிருந்த சாரீரத்தின் நயத்தையும், பாட்டின் திருத்தத்தையும் பார்த்து, 'இவைகள் இவர்களுடைய இளமையில் எப்படி இருந்திருக்குமோ' என்று

மிக ஆச்சரியமடைந்தேன். அவர்கள் தமிழில் மிக்க பிரீதியும், பழக்கமும் உடையவர்கள். அநேகம் பெரியோர்கள் இயற்றிய கீர்த்தனங்கள் அவர்களுக்குப் பாடமுண்டு. சிவபக்தியிற் சிறந்தவர்கள். அவர்களுக்கு உடையார்பாளையம், அரியிலூர் முதலிய சமஸ்தானங்களில் மான்யங்கள் இருந்தமையால் அங்கே அவர்கள் அதிகமாக வசித்ததுண்டு.

ஐயரவர்கள் மிக்க இளமைப் பருவத்திலேயே தமது பிதாவினிடத்தில் சதகம் முதலிய நூல்களைப் படித்த தோடு, சங்கீதத்திலும் பயின்று வந்தார்கள். ஐயரவர்களுக்குச் சங்கீதத்தில் தெளிவான ஞானம் உண்டு; அவர்களுடைய சாரீரம் மிக இனிமையா யிருக்கும். அவர்கள் பாடல் சொல்லும்போது தமிழை, 'இசைத் தமிழ்' என்றும், 'தீந்தமிழ்' என்றும் சொல்வது பொருந்துமென்று தோன்றும். இப்படிக் கல்வி பயின்று வருகையில், அவர்களுடைய பெற்றோர்கள் அரியிலூரில் சிலகாலம் வசித்தார்கள். அந்தக் காலத்தில் பரம்பரை வித்வானும், தமிழில் நல்ல பண்டிதரும் வைணீகருமான சடகோபா சாரிய ரென்று ஒரு பெரியவர் அங்கேயிருந்தார். அவர்களிடத்து நமது ஐயர் அவர்கள் திருவரங்கத் தந்தாதி, வேங்கட வெண்பா முதலிய பிரபந்தங்களைப் பாடங் கேட்டார்கள். ஐயரவர்களுடைய பிதா, அந்தப் பக்கத்திலிருந்த பண்டிதர்களில் யார் யாருக்கு எந்த எந்த நூலில் நல்ல பரிசயமோ அவரவர்களிடத்தில் அந்த அந்த நூலை ஐயரவர்கள் பாடங் கேட்கும்படி அங்கங்கே போய் வசித்துவந்தார்கள். அந்த முறையில் நமது ஐயரவர்கள்

பல வித்வான்களிடம் பல நூல்களைக் கற்றுக்கொண்ட பிறகு, யாப்பிலக்கணம், அதாவது, செய்யுள் இலக்கணம் கற்பதற்காக, அந்த இலக்கணத்திற் சமர்த்தரும் பெரும் புலியூர் தாலூகா செங்கணம் என்னும் ஊரில் வசித்தவரு மான விருத்தாசல ரெட்டியார் என்பவரிடத்தில் போய் யாப்பிலக்கண முழுதும் படித்தார்கள். அவர்கள் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் நல்ல ஆராய்ச்சி யுள்ளவர்கள். அவர்கள் தமக்குண்டான பல அரிய சந்தேகங்களை, மகா வித்வான் ஸ்ரீமான் மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களைச் சந்தித்தால் கேட்க வேண்டுமென்று தனியே எழுதிவைத் திருந்தார்களாம். அவர்கள் கற்பிக்கும் விஷயங்களை சந்தேகத்திற் கிடமில்லாமல் திருத்தமாக எளிதில் விளங்கும்படி சொல்லுவார்கள். அவர்கள் நமது ஐயரவர் களுடைய புத்தி நுட்பத்தையும் விஷயங்களை அறிந்து கொள்ளும் சக்தியையும் இவர்கள் அதுவரையில் படித் திருந்த நூற்பரப்பையும் பார்த்து, நமது ஐயரவர்களின் பிதாவை நோக்கி, 'ஐயா, தங்கள் குமாரருக்குப் பாடஞ் சொல்லத் தகுதியுடையவர்கள் இந்த நாட்டில் ஒருவரு மில்லை. தஞ்சை ஜில்லாவில் மாயூரத்தில் மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் என்று ஒரு மகா வித்வான் இருக்கிருர் கள். அவர்களே தங்கள் குமாரருக்குப் பாடம் சொல்லத் தக்கவர்கள். தங்கள் குமாரரை அவர்களிடம் அழைத்துப் போய்ப் படிக்கச் செய்யுங்கள்,' என்று வற்புறுத்திச் சொன்னுர்களாம்.

பிள்ளை அவர்களிடம் படித்தது.

அதன்மேல், நமது ஐயரவர்களை அவர்களுடைய பிதா அழைத்துக்கொண்டு அரியிலூர் வழியாக வருகையில், ஐயரவர்கள் அங்கே பிள்ளையவர்கள் செய்த நாகைப் புராணப் பிரதி யொன்றைப் பார்த்தார்கள். அதைப் படித்துப் பார்க்கையில் எதுகை மோனை முதலியவற்றின் அழகையும், பொருளின் ஆழத்தையும், சொல்லின் வனப்பையுங் கண்டு, 'இப்படிப்பட்டப் பாடல்களைச் செய்யவல்ல மஹா வித்வானிடத்தில் நாம் படிக்கப் போகிறோம்' என்று ஐயரவர்களுக்கு ஒரு பெரிய மகிழ்ச்சி உண்டாயிற்றாம். இப்படிப் பேருவகையுடன் மாயூரம் வந்தார்கள். அங்கே, பிதா அவர்கள், பிள்ளையவர்களைக் கண்டு தம் குமாரரை அவர்களிடம் ஒப்புவித்துச் சில நாள் அங்கேயிருந்து தங்களுக்குத் தெரிந்த ஒரு வீட்டில் ஐயரவர்களுக்கு ஜாகை செய்து வைத்துவிட்டு, அதுவரையில் தம்மைவிட்டு ஒரு நிமிஷமும் பிரியாத தம் குமாரரைத் தனியே ஒரு புதிய இடத்தில் விட்டுவருவதில் தைரியமில்லாமல் மனக்கலக்கத்துடன் ஸ்ரீமாயூர நாதரையும், ஸ்ரீ அபயாம்பிகை அம்மையையும் பிரார்த்தித்துக்கொண்டு தமது சொந்த ஊரான உத்தமதானபுரத்திற்கு வந்தார்கள். ஐயரவர்களுடைய பிதா மிக்க மனக் கலக்கத்துடன் பிரிகையில், 'தங்கள் குமாரர் விஷயத்தில் சிறிதும் கவலைப் படவேண்டாம்' என்று பிள்ளையவர்கள் தைரியம் சொன்னார்களாம். அப்பொழுது ஐயரவர்களுக்கு சுமார் 16 அல்லது 17 பிராய மிருக்கலாம். பிள்ளையவர்கள் ஐயரவர்களுடைய இளம் பிராயத்தையும் தாம் பலருக்குப்

பாடம் சொல்லவேண்டி யிருத்தலையும் உத்தேசித்து, தம்மிடம் படித்துக்கொண் டிருந்தவர்களுள் ஒருவரை ஐயரவர்களுக்குப் பாடம் சொல்லும்படி நியமித்தார்கள். அவர் சிலநாள் பாடம் சொல்லிவருகையில், ஐயரவர்களுக் குண்டான சந்தேகங்களை நிவிர்த்திக்கக் கூடிய சக்தி அவருக்குப் போதவில்லை. அவரைக் காட்டிலும் ஐய ரவர்கள் பல நூல்கள் பாடங் கேட்டிருந்தார்கள்; 'கங்கைக் கரையை யடுத்தும் கிணற்று நீரைக் குடிப்பது' போல, பிள்ளையவர்களிடத்தில் வந்தும் அவர்களிடத்தில் பாடங் கேளாமல் வேறு ஒருவரிடத்தில் பாடம் கேட்கவேண்டி யிருந்தாலும் பிள்ளையவர்களுடைய நோக்கத்திற் கிணங்கிச் சிலநாள் படித்துக்கொண்டு வந்தார்கள். ஒருநாள், ஐய ரவர்கள் சந்தேகங் கேட்பதையும், பாடம் சொல்லு கிறவர் சந்தேகத்தை நிவிர்த்திக்கச் சக்தி யில்லாதவரா யிருத்தலையும் பார்த்து, அடுத்தநாள் முதல் பிள்ளை அவர்கள் நமது ஐயரவர்களுக்குத் தாமே பாடஞ் சொல் லத் தொடங்கினார்கள். அந்தத் தினமே பிற்காலத்தில் ஐயரவர்களுக் குண்டான பெருமைகளுக்கெல்லாம் கார ணமான நல்ல தினம். ஐயரவர்கள் மாணாக்கர்களுக் குச் சொல்லிய இலக்கணப்படி, பிள்ளையவர்களை விட்டு ஒரு நிமிஷமும் அகலாமல் பல நூல்களைப் பாடங் கேட்டார்கள். பிள்ளை அவர்கள் மாயூரத்திலிருந்து திருவா வடுதுறைக்கு அடிக்கடி வந்து போவதுண்டு. அந்த சமயங்களில் அவர்களுடன் கூட நமது ஐயரவர்களும் வருவார்கள். அப்பொழுது, ஆதீனத் தலைவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களும், தம்பிரான்களும்,

மற்றவர்களும் ஐயரவர்களுடைய நற்குண நற்செய்கைகளையும், அவர்களுடைய படிப்பின் மிகுதியையும், அவர்களுடைய பழக்கங்களையும் கண்டு பெரிதும் மகிழ்ந்து அவர்களிடத்தில் பேரன்பு பாராட்டத் தொடங்கினார்கள்.

திருவாவடுதுறை மடத்துக்கு வந்தது.

சிலகாலத்திற்குப் பிறகு, பிள்ளையவர்கள் அப்பொழுதிருந்த தம்பிரான்களுக்குப் பாடஞ் சொல்லுவதற்காகத் திருவாவடுதுறையிலேயே வந்து வசித்தார்கள். திருப்பனந்தாள் ஆதீனத் தலைவராக இருந்த ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரானவர்களும், திருவண்ணாமலை ஆதீனத் தலைவராக இருந்த ஸ்ரீமத் ஆறுமுக தேசிகரவர்களும், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரானவர்களும், ஸ்ரீமத் பழனிக் குமாரத் தம்பிரானவர்களும், ஸ்ரீமான் மேலகரம் சண்பகக் குற்றாலக் கவிராயரவர்களும், முதலாகப் பலபேர் அந்தக் காலத்தில் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டுக்கொண்டிருந்தமையால், அவர்களோடு ஐயரவர்களும் பாடம் கேட்க அனுகூலமாக இருந்தது. பாடம் கேட்கும் காலத்திலும், சபைகளில் பாடல் சொல்லும் காலத்திலும் ஐயரவர்களே படிப்பதும் சொல்வதும் வழக்கம். ஐயரவர்கள் பிள்ளையவர்களுடைய நிழல்போல அவர்களை விட்டு ஒரு நிமிஷமும் நீங்காது உடனிருந்து அவர்களுக்கு உவகையுண்டாகும்படி நடந்து அவர்களிடத்துப் பல நூல்களைக்கற்றுத் தெளிந்தார்கள். பிள்ளையவர்களுக்கு ஐயரவர்களிடத்து விசேஷமான அன்பு உண்டாயிற்று.

இப்படிச் சில வருஷமானவுடன், பிள்ளையவர்கள் யுவ வருஷம் தை மாதத்தில் சிவபதமடைந்தார்கள். அப்பொழுது, ஐயரவர்களுக்கு உண்டான கவலைக்கும் மன வருத்தத்துக்கும் அளவில்லை. அந்த சமயத்தில் ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகரவர்கள் ஐயரவர்களுக்கு மிக்க தைரியங் கூறி, ' நீங்கள் சிறிதும் கவலைப்படவேண்டாம்; மேலே படிக்கவேண்டிய இலக்கண பாடங்களை நாமே சொல்லுகிறோம்; இங்கே படிக்க வருபவர்களுக்கு நீங்கள் பாடஞ் சொல்லிக்கொண் டிருக்கலாம்; இங்கே வேண்டிய ஸௌகரியங்கள் செய்விக்கிறோம்' என்று சொல்லித் திருவாவடுதுறையிலேயே ஒரு வீடு கட்டிக் கொடுத்ததல்லாமல், அங்கே வசித்து வந்த வரையில் வருஷாசனமும் ஐயரவர்களுக்குக் கொடுத்து வந்தார்கள். சில அச்சுப் புஸ்தகங்களில் ஐயரவர்களுடைய பெயருக்கு முன் திருவாவடுதுறை என்பது சேர்ந்தேயிருக்கும். ஐயரவர்கள் ஒரு நிமிஷமும் ஓய்வில்லாமல் பலதரப்பட்ட மாணுக்கர்களுக்கும், பல வகைப்பட்ட நூல்களைப் பாடம் சொல்லிக்கொண்டு ஆதீனத்தலைவர்களுக்கும், தம்பிரான்களுக்கும், மற்றவர்களுக்கும் பரமதிருப்திகரமாக நடந்து வந்தார்கள். படித்தவர்களான பல தம்பிரான்களும் கற்றுத் தேர்ந்த மற்றும் பல சைவ வித்வான்களும் நிறைந்திருக்கிற ஒரு சைவ ஆதீனத்தில் மிக்க இளமைப் பிராயமுள்ள ஐயரவர்கள் நிர்வகித்து வந்தார்கள் என்றால் ஐயரவர்களுடைய படிப்பின் ஆழ அகலத்தையும் அவர்களிடத்து ஆதீனத் தலைவர்களும் மற்றவர்களும் வைத்திருந்த நன்கு மதிப்பையும் சொல்லவேண்டாமன்றோ? இஃது இங்ஙனமாக.

குடந்தைக் காலேஜிக்கு வந்தது.

பிள்ளையவர்களுடைய மாணாக்கர்களில் முதல் மாணாக்கரும் சிறந்த வித்வானுமான ஸ்ரீமான் தியாகராஜ செட்டியாரவர்கள் இந்தக் காலேஜில் முதல் தமிழ்ப் பண்டிதராக இருந்தார்கள். அப்பொழுது பிரின்ஸிபாலாக இருந்த ராய் பஹதூர் T. கோபாலராவ் அவர்கள் செட்டியாரவர்களிடத்து மிக்க அன்புடையவர்கள். ராயரவர்கள் தமிழிலும் நல்ல ஞான முடையவர்கள்; அவர்களுடைய புஸ்தகங்களின் முதலில், 'அருமை யுடைத்தென்றசாவாமை வேண்டும், பெருமை முயற்சி தரும்' என்பது முதலிய சில குறள்களை ஞாபகத்திற்காக எழுதி வைத்திருப்பார்களாம். அவர்கள் ஒரு நாள் கிளாஸில் தமிழ்ப் பாடம் சொல்லும்பொழுது இலக்கண விஷயமாக ஒரு கேள்வி கேட்டார்களாம். மற்றப் பிள்ளைகளெல்லாம் விடை கூறாமலிருக்க, ஒரு பையன் எழுந்து சரியான விடை கூறினான். அதைக் கேட்டு ராயரவர்கள், 'நீ எந்த ஸ்கூலில் படித்தவன்? அங்கே தமிழ்ப் பண்டிதர் யார் ?' என்று கேட்டார்களாம். அந்தப் பையன், ' நான் ஸ்ரீரங்கம் ஹைஸ்கூலில் படித்தவன். அங்கே தியாகராஜ செட்டியார் என்று ஒரு சிறந்த வித்வான் இருக்கிறார்கள். அவர்கள் மாணாக்கர்களுடைய மனத்தில் நன்கு பதியும்படி விஷயங்களை எடுத்துச் சொல்லுபவர்கள்' என்று சொல்லியபோது, ராயரவர்கள் செட்டியாரவர்களை எழுதித் தருவித்துத் தாமே சில கேள்விகள் கேட்டுப் பரீக்ஷித்து அவர்களுடைய கல்வித்திறமையை அறிந்து சந்தோஷித்தார்கள். ராயரவர்கள் கேட்ட பல கேள்விகளுள் நன்னூலில், 'பலசிலஎனுமிவை என்னும் ஸூத்ரத்தில்

இன்ன இன்ன விஷயம் இன்ன இன்ன ஸூத்ர விதியினுல் அமைந்திருக்கிற தென்பதை எடுத்துக் காட்டி, இங்கே திரும்பவும் கூறியது, கூறியது கூறலென்னும் குற்ற மன்றோ? அதற்கு நியாயம் கூறுக' என்பது ஒரு கேள்வி. செட்டியாரவர்கள் அவற்றிற் கெல்லாம் தக்கப்படி நியாயம் கூறி விடையளித்ததன்மேல் ராயரவர்கள் செட்டியாரவர் களை இங்கே தலைமைத் தமிழ்ப் பண்டிதராக நியமித்தார் களாம். செட்டியாரவர்கள் புரொபஸர்களுக்கும், மாணுக்கர் களுக்கும் பரம திருப்தியுண்டாகும்படி நடந்து அவர்களு டைய நன்கு மதிப்பைப்பெற்று விளங்கினுர்கள்.

இப்படி யிருக்கையில், செட்டியாரவர்கள் பிராய முதிர்ச்சியாலும் சரீரத் தளர்ச்சியாலும் காலேஜை விட்டு விலகவிரும்பி அதனை ராயவர்களிடம் தெரிவித்தார்கள். ராயரவர்கள் செட்டியாரவர்களைப் போன்ற பண்டிதர்கள் கிடைப்பது அரிதாகையால் அனுமதியளிக்க மறுத்தார்கள். செட்டியாரவர்கள் தம்முடைய சரீரத்தளர்ச்சி முதலிய வற்றைப் பல முறை சொல்லி வற்புறுத்தியதன் மேல், ராய ரவர்கள், 'தங்களுடைய ஸ்தானத்திற்குத் தகுதியுள்ள ஒரு வரைத் தாங்களே பார்த்துக் கொடுப்பது தங்களுடைய பொறுப்பு' என்று சொன்னுர்கள். செட்டியாரவர்கள், 'என்னுடைய ஆசிரியர்களிடத்திற் படித்தவர்களும், சிறந்த வித்வானுமான ஒருவர் இருக்கிறுர். அவர் இப்பொழுது திருவா வடுதுறை ஆதீனத்தில் அநேகருக்குப் பாடஞ் சொல்லிக்கொண் டிருக்கிறுர். அவர்கள் கிடைப்பது மிக்க சிரமம். ஆனுலும், இயன்றவரை முயன்று பார்க்கிறேன். அவர்களை அழைத்து வந்த பிறகு, 'வேறு காலேஜில்

உள்ளவர் வருகிறார்; தட்டமுடியாத பெரியவர்கள் வேறு ஒருவரைப்பற்றிச் சிபார்சு செய்கிறார்கள்' என்று வேறொருவரை நியமிக்கக் கூடாது. இப்படித் தாங்கள் உறுதி சொன்னால் அவர்களை அழைத்து வருகிறேன்' என்று சொல்லி ராயரவர்களிடம் உறுதி வாங்கிக்கொண்டு திருவாவடுதுறைக்கு வந்தார்கள்.

அங்கே ஐயரவர்கள் இதனை ஸொப்பனத்திலும் எதிர்பார்த்தவர்களல்ல ராகையாலும் ஆதீனத்தைவிட்டுப் பிரிதற்குச் சிறிதும் மனமில்லாமையாலும் மறுத்துவிட்டார்கள். செட்டியாரவர்கள் இதிலுள்ள ஸௌகரியங்களை எடுத்துச் சொல்லிவிட்டு, தாம் வந்த காரியத்தை ஆதீனத் தலைவர்களும் கலாவிநோதர்களும் வள்ளலுமாகிய சுப்பிரமணிய தேசிகரவர்களிடம் தெரிவிக்க, அவர்கள் செட்டியாரவர்களுடைய அபிப்பிராயத்தைச் சிறிதும் ஏற்றுக் கொள்ளாமல், 'நமது ஆதீன ஆஸ்தான வித்வானா யிருக்க வேண்டுமென்று பல வருஷங்களாக எதிர்பார்த்து அப்படியே இப்பொழுது அந்த ஸ்தானத்தை வகித்து இடத்தைச் சிறப்பிப்பவர்களான ஐயரவர்களை ஒருபோதும் கொடுக்கமாட்டோம்' என்று கண்டிப்பாக மறுத்து விட்டார்கள். செட்டியாரவர்கள் அந்த ஸமயத்தை விட்டுவிட்டு, பின்னும் இரண்டொரு நாள் அங்கிருந்து, ஸமயம் பார்த்து, 'ஆதீனத்தில் படித்துத் தேர்ந்த பண்டிதர்கள் இந்தக் காலேஜில் இருப்பது ஆதீனத்திற்குப் பெருமை' என்றும், 'ஸமீபமான இடமாதலால் வாரந்தோறும் சனி ஞாயிறுகளில் அவர்கள் இங்கேயே இருக்கலாம்' என்றும், 'அவசியமானால் மற்ற நாட்களிலும் மாலைக் காலத்தில் வந்து காலை

யில் போகலாம்' என்றும், 'காலேஜில் படித்தவர்கள் பெரிய உத்யோகங்களிலும் பெரிய ஸ்தானங்களிலும் இருப்பார்களாகையால், ஆதீனத்திற்கு இது பெரிய பெருமையை உண்டு பண்ணும்' என்றும் சொல்லியும் வேறு முகாந்தரங்களைக் காட்டியும் பண்டார ஸந்நிதி அவர்களுடைய அநுமதியைப் பெற்றுக்கொண்டு ஐயரவர்களைக் குடந்தைக்கு அழைத்து வந்தார்கள். செட்டியாரவர்கள், ஐயரவர்களைக் குடந்தையில் ஸ்ரீமான் ராவ்பகதூர் ஸாது சேஷையரவர்கள் ஜாகைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே போகும் போது தமிழிலுள்ள ராமாயணம் பாரதம் ஸ்காந்தம் மற்றப் புராணங்கள் ஆகிய இலக்கிய நூல்களையும், திருக்குறள் முதலிய நீதி நூல்களையும், பிரபந்தங்களையும், பல இலக்கண நூல்களையும் கொண்டு போனார்கள். அங்கே, ஸ்ரீமான் R. V. ஸ்ரீநிவாஸ ஐயரவர்கள், B. ஹநுமந்தராயரவர்கள் முதலான புரொபெஸர்களும் வந்து கூடினார்கள். செட்டியாரவர்கள் அந்தப் புஸ்தகங்களைக் காட்டி, 'இவைகளில் எந்தப் புஸ்தகத்தில் எந்த இடத்தில் எந்த விஷயத்தை வேண்டுமானாலும் கேட்கலாம்' என்று சொல்லியபோது, அங்கிருந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு புஸ்தகத்தை எடுத்து ஒவ்வொரு பாகத்தைப் பிரித்துக் கொடுத்துப் படித்துப் பொருள் சொல்லும்படி கேட்டார்கள்; ஐயரவர்கள் படித்தபோதே அவர்களுடைய சாரீரத்தையும் செய்யுள்களைப் படிக்கும் அழகையும், பிறகு, பொருள் சொல்லுதலையும் பார்த்துப் பரம திருப்தி யடைந்தார்கள். அருகிருந்தவர்களில் சிலர் இப்படி நூல்களைப் படித்துப் பொருள் செய்வது தவிர, புதிதாகப் பாடும் பழக்க

மும் இருக்குமோ' என்று கேட்டார்கள். செட்டியாரவர்கள், 'ஐயரவர்களுக்குப் பாடுவதில் நல்ல திறமையுண்டு' என்றும், 'நீங்களே விஷயத்தைக் கொடுத்துப் பாடச்சொல்லிப் பார்க்கலாம்' என்றும் சொன்னபோது, ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றிப் பாடச் சொன்னார்களாம். R. V. ஸ்ரீநிவாச ஐயரவர்கள், 'செட்டியாரவர்கள் இங்குள்ள யாவருக்கும் ஆசிரியர். அவர்களைப்பற்றியே பாடலாம். அச்செய்யுளில், 'நீங்களும் நானும் ஒரே ஆசிரியரிடம் படித்தவர்கள்; ஆகையால் ஜேஷ்ட கனிஷ்ட முறையுடையேம். அதற்கேற்ப, நீங்கள் இதுகாறும் பார்த்து வந்த வேலையை எனக்கு உதவவேண்டும்' என்ற கருத்தமைய வேண்டும்; அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தத்தில் ஐந்து நிமிஷங்களுக்குள் பாடவேண்டும்' என்று சொன்னார்கள். ஐயரவர்கள்,

'வாய்ந்தபுகழ் படைத்திலங்கு
　　மீனாக்ஷி சுந்தரநா வலவன் பாலே
ஏய்ந்ததமி ழாய்ந்தமுறைக் கியைவுறநீ
　　இதுகாறும இனிதின் மேய
ஆய்ந்தவள நகர்க்குடந்தைக் காலேஜில்
　　நின்னிடம்ஏற் களித்த னன்றே
வேய்ந்ததமிழ் முதற்புலமைத் தியாகரா
　　ஜப்பெயர்கொள் மேன்மை யோனே'

என்னும் பாடலை 4 நிமிஷங்களில் பாடி முடித்தார்கள். எல்லாரும் கேட்டுப் பரம திருப்தி யடைந்தார்கள்.

செட்டியாரவர்கள் ஐயரவர்களிடத்தில் எல்லாரும் திருப்தி யடைய வேண்டுமென்னும் கவலை யுடையவர்களாதலால், இந்தச் செய்யுளைச் சொல்லிப் பொருள் கூறியவுடன், 'என்வயிற்றில் பாலை வார்த்தாரையா' என்று சொன்னார் களாம். பிறகு, எல்லாரும் அன்றுமாலை கோபால ராயரவர்கள் ஜாகைக்குப் போக நிச்சயித்து, அந்தப்படி அங்கே போனார்கள். அச்சமயம் ராயரவர்கள் மாடியின் மேல் இருந்தார்கள். அப்பொழுது, அதிபால்யரும் மிக்க புத்திசாலியும் சுறுசுறுப்புள்ளவருமான B. ஹனுமந்த ராயரவர்கள் மாடியின்மேலே விரைந்துசென்று எல்லோரும் வந்திருப்பதைத் தெரிவிக்க, ராயரவர்கள் அங்கே வந்தார்கள். ஐயரவர்களுடைய கல்வி வன்மை முதலிய வற்றைக் கேட்டுப் பரீக்ஷித்து ராயரவர்கள் பரம திருப்தி யடைந்தார்கள். அவர்கள் சிபார்சுசெய்து அந்த வேலையை ஐயரவர்களுக்குக் கொடுத்தார்கள்.

திருவாவடுதுறையிலிருந்து ஐயரவர்கள் குடந்தையில் வேலையை ஒப்புக்கொள்ளப் புறப்படும்போது, பண்டார ஸந்நிதியவர்கள் ஐயரவர்களுக்குப் பல மரியாதைகள் செய்து அனுப்பினார்கள். இது 1880-ஹ நடந்தது. இதற்கு, 2-வருஷத்திற்குமுன், அதாவது 1878-ம் வருஷத்தில், மதுரைக் கும்பாபிஷேகம் நடந்தபோது, ஒரு பெரிய மஹாசபை கூடியிருந்தது. அப்பொழுது, ஐயரவர்கள் பல பாடல்களைச் சொல்லி உபந்யாசம் செய்து கொண்டிருக்கையில் பண்டார ஸந்நிதியவர்களைப் பற்றி வேதநாயகம் பிள்ளையவர்கள் செய்த பல பாடல்களுள் ஒன்றாகிய,

'தடையில் கொடைச்சுப்பிரமணி
யையநிற் சார்ந்தவர்கொள்
கொடையை யவர்சொல வேண்டுங்கொ
லோவவர் குக்கி சொலும்
இடைசொலுங் கண்டமுங் காதுஞ்
சொலுமிறு மாப்புடைய
நடைசொலுங் கையிற் குடைசொலும்
வேறென்ன நாஞ்சொல்வதே'

என்னும் செய்யுளைச் சொல்லிப் பொருள் கூறும்போது, அந்தப் பாடலில் சொல்லிய விஷயங்களுக்கெல்லாம் தாமே ஓர் உதாரணமென்றும், ஆனால், 'அவசிய மில்லாமையால் குடை பிடித்துக் கொள்வதில்லை' என்றும், இறுமாப்புடைய நடை தமக்கு ஒருநாளும் வராதென்றும் சொல்லிப் பிரஸங்கித்திருந்தார்கள். பண்டார ஸந்நிதி அவர்கள், அவைகளை ஞாபகத்தில் வைத்திருந்து, ஐயரவர்களைக் குடந்தைக்கு அனுப்பும்பொழுது, 'இந்த ஊரில் குடை அவசியமில்லை, என்றும், 'குடந்தையில் காலேஜுக்குப் போகும்போது குடை பிடித்துக்கொள்ளுதல் அவசியமாயிருக்கும்' என்றும் சொல்லிச் சிறந்த ஒரு பட்டுக்குடை அளித்ததோடு, 'இனி ஜோடு போட்டுக் கொள்ள வேண்டுமாதலால், இயற்கையில் இறுமாப்பு இல்லாவிட்டாலும், அதைத் தரித்து நடக்கும்போது நடையில் சிறிது வேறுபாடு உண்டாகலாம்' என்று சமத்காரமாகச் சொல்லி விடைகொடுத்தனுப்பினார்கள். ஐயரவர்கள் காலேஜில் வேலையை ஒப்புக்கொண்டு எல்லாருக்கும் பரமதிருப்தி யுண்டாகும்படி பாடஞ் சொல்லியும்

பழகியும் வந்தார்கள். முதலில் சொல்லியபடி, ஐயரவர்கள் வாரந்தோறும் துறைசைக்குச் செல்லாம விருப்பதில்லை. வெள்ளிக்கிழமை ஸாயங்காலம் தம்பிரான்களும் மற்றவர்களும் ஐயரவர்கள் வரக்கூடுமென்று மேற்கே பார்த்த வண்ணமா யிருப்பார்களாம். அப்போது சின்னப் பட்டத்திலிருந்த ஸ்ரீமத் நமசிவாய தேசிக ரவர்களும், ஊற்றுமலை ஜமீன்தா ரவர்களுடைய அம்மானுன பெரிய சாமித் தேவரவர்களும் ஸுப்ரமணிய தேசிகரவர்களைப் பார்த்தபொழுது, 'ஐயரவர்களை ஏன் கும்பகோணத்துக்கு அனுப்பவேண்டும்' என்று கேட்டார்களாம். இவற்றுல், திருவாவடுதுறையிலுள்ளவர்களுக்கும் பிறருக்கும் ஐயரவர்களிடத்திலுள்ள அன்பும் அவர்களைக் குடந்தைக்கு அனுப்பியதில் விருப்பமில்லாமையும் நன்கு விளங்கும்.

ஐயரவர்கள் பாடஞ் சொல்லிக்கொண் டிருக்கும் பொழுது, அந்த வகுப்பிலுள்ள மாணுக்கர்க ளெல்லாரும் சித்திரத்தி லெழுதிய பதுமைபோல் அசையாமலும் சத்தஞ் செய்யாமலுமிருந்து கேட்பார்கள். மற்றப் பாடங்களில் முன்பின் னிருந்தாலும், தமிழ்ப் பாடத்திற்கு வெகு ஆவலோடு வகுப்பிற்கு வருவார்கள். ஐயரவர்கள் பாடஞ் சொல்லும்பொழுது அந்த வகுப்பு மாணுக்கர்கள் தவிர, வேறு மாணுக்கர்களும் வந்து கேட்டுக்கொண் டிருப்பதுண்டு. ராயரவர்கள் காலேஜைச் சுற்றிப்பார்த்து வருகையில் ஐயரவர்கள் பாடஞ்சொல்லுகிற தமிழ் வகுப்பில் வந்து சில நிமிஷம் நின்று கேட்பதுண்டு.

பிரஸிடென்ஸி காலேஜுக்கு மாற்றலானது.

ராய் பஹதூர் பூண்டி ரங்கநாத முதலியார், M. A. அவர்களை அறியாதாரில்லை. அவர்கள் கும்பகோணம் காலேஜிற்குச் செட்டியா ரவர்களுக்குப் பிறகு ஐயர வர்கள் வந்திருக்கிறார்க ளென்பதைக் கேட்டபொழுது, ஐயரவர்களுடைய பழக்கமில்லாமையினாலோ அல்லது பிரா யத்தை உத்தேசித்தோ, 'செட்டியாரவர்களுடைய ஸ்தா னத்திற்கு இவர்கள் தகுதியுடையவர்களோ' என்று ஸாது சேஷையரவர்களைக் கேட்டார்களாம். பிறகு, ஐயரவர்க ளுடைய பழக்கமுண்டானபின், ஐயரவர்களுடைய கல்விப் பெருக்கையும் குணாதிசயங்களையும் கண்டு மிக்க நண்பர்க ளாயினர். இரண்டுபேருக்கும் செய்யுள் வடிவமாகவே கடி தப் போக்குவரவுகள் நடப்பதுண்டு. முதலியாரவர்கள் ஐயரவர்களை ஸமீபத்தில் வைத்துக்கொள்ள வேண்டு மென்று விரும்பி, பிரஸிடென்ஸி காலேஜில் ஒரு ஸமயம் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்தானம் காலியானபொழுது ஐயரவர்களை அங்கே வருவித்துக்கொள்ள மிக முயன்றார் கள். அங்கே வந்துவிட வேண்டுமென்று ஐயரவர்களுக்கு வற்புறுத்தி எழுதினார்கள். ஐயரவர்களுடைய தந்தை யார்க்கு இந்தக் காவேரி ஸ்நானத்தையும் பூஜைக்குரிய ஸௌகரியங்களையும் விட்டுச் சென்னைக்குப்போக விருப்ப மில்லாமையால், ஐயரவர்கள் தமது தந்தையாருடைய கருத்தை முதலியாரவர்களுக்குத் தெரிவித்து அந்த ஸம யம் பிரஸிடென்ஸி காலேஜ் வேலைக்குப் போகாமல் நின்றுகொண்டார்கள்.

பிறகு, 1903-ம் வருஷக் கடைசியில் பிரஸிடென்ஸி காலேஜில் தமிழ்ப் பண்டிதர் ஸ்தானம் மறுபடியும் காலியா யிற்று. அந்த வேலையைப் பெறப் பலர் மிக்க முயற்சி செய்தார்கள். அப்போது சில அன்பர்கள் வற்புறுத்தின மையாலும், புஸ்தகப் பதிப்பு வேலையைக் கருதியும் ஐய ரவர்கள் மேலதிகாரிகளுடைய உத்தரவை ஏற்றுக்கொண்டு பிரஸிடென்ஸி காலேஜுக்கு வந்து வேலையை ஒப்புக் கொண்டார்கள். அதுமுதல் சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் மாணுக்கர்களுக்குப் பாடஞ் சொல்லிக்கொண் டும், பல நூல்களை ஆராய்ச்சிசெய்து வெளியிட்டுக்கொண் டும் பலரால் கொண்டாடப்பெற்று அங்கே விளங்கினார்கள். கும்பகோணம் காலேஜில் மாணுக்கர்கள் ஐயரவர்களிடம் எப்படி அமைதியுடன் பாடங்கேட்டு வந்தார்களோ அப் படியே பிரஸிடென்ஸி காலேஜிலும் மாணுக்கர்கள் கேட்டு வந்தார்கள்.

1912-ம் ஆண்டில் சென்னைக் கவர்னர் லார்டு கார்மி கேல் பிரபு அவர்கள் பிரஸிடென்ஸி காலேஜைப் பார்க்க வந்தபோது ஐயரவர்கள் பாடம் சொல்லும் கிளாஸிற்கு வந்து சிறிதுநேரம் தாமதித்துப் பழைய ஓலைச்சுவடிகள் சில வற்றைப் பார்த்து அவற்றின் விவரங்களை யெல்லாம் நன்கு தெரிந்துகொண்டு ஐயரவர்களுடைய அருமை பெருமை களை மிகப் பாராட்டிச் சென்றார். அதற்குச் சில தினங் களுக்கு முன்னர், அவர்கள் சிலாசாஸன ஆபீஸுக்குப் போனபொழுது அங்குள்ள பழைய பொருள்களின் வர லாறுகளைத் தெரிவிப்பதற்காக ஐயரவர்களை அங்கு வர விரும்பினார்கள். அந்தப்படி ஐயரவர்கள் போய்ப் பல

அரிய விஷயங்களை விளக்கிச் சொல்லிய பிறகு புகைப்படம் பிடிக்கையில், கவர்னரவர்கள் ஐயரவர்களைத் தமக்குப் பக்கத்திலிருக்கச் செய்து படம் எடுக்கச் செய்தார். பிறகு, 1919-ஆ ஐயரவர்கள் பிரஸிடென்ஸி காலேஜிலிருந்து பென்ஷன் பெற்று விலகினார்கள். அந்த வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் வெளியான "Everymans Review" என்னும் பத்திரிகையில் சென்னை அட்வகேட், ஸ்ரீமான் V. V. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள் ஐயரவர்களுடைய சரித்திரக் குறிப்பையும் நூலாராய்ச்சிகளையும்பற்றி மிக நன்றாக எழுதியிருக்கிறார்கள்.

சிதம்பரம் தமிழ்க்காலேஜில் பிரின்ஸிபாலானது

பிறகு, 1924-ம் வருஷத்தில் சிதம்பரத்தில் ஸம்ஸ்கிருதத்துக்கும் தமிழுக்கும் தனித்தனிக் காலேஜுகள் ஏற்படுத்தப்பட்டன. ஐயரவர்கள் அங்குவந்து தமிழ்க் காலேஜில் பிரின்ஸிபால் ஸ்தானத்தை வகித்தால், அதற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டென்று கருதி, கௌரவம் பொருந்திய ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரவர்கள் ஐயரவர்களை நிரம்பவும் வற்புறுத்தி அழைத்தார்கள். ஐயரவர்கள் நெடுங்காலமாகச் செய்துவரும் நூலாராய்ச்சி வேலைக்கு இடையூறு ஏற்படுமென்பதைக் கருதியும் வேறு காரணங்களைக்கொண்டும் முதலில் அதற்கு உடன்படவில்லை. காலேஜ் ஏற்படுங்காலத்தில் அவர்கள் அவசியம் அங்கு வந்திருக்க வேண்டுமென்றும், பிறகு சென்னைக்குத் திரும்பி வந்துவிடலாமென்றும், ராஜஸாஹேப் அவர்களும் வேறு சில அன்பர்களும் நிரம்பச் சொன்னார்கள். ஸ்ரீ

நடராஜமூர்த்தியின் தரிசனத்தை உத்தேசித்தும் மாணுக்கர்களுக்குப் பாடஞ் சொல்லுதலை விரும்பியும் ஐயரவர்கள் அதனை அங்கீகரித்துக்கொண்டு, 1924ஹு ஜூலைமாஸத்தில் சிதம்பரத்துக்கு வந்து தமிழ்க் காலேஜ் பிரின்ஸிபால் வேலையை ஏற்றுக்கொண்டு, 1927ஹு மார்ச்சுமாதம் வரையில் அந்த ஸ்தானத்தை அலங்கரித்து வந்தார்கள். அப்பால், ஐயரவர்களுடைய குமாரர் S. கலியாணசுந்தரமையரவர்கள், தம்முடைய பிதா அவர்கள் முதுமைக் காலத்தில் தம்மைப் பிரிந்து தனியே சிதம்பரத்தில் வசிப்பதில் மனங்கொள்ளாமல் அவர்களைத் திரும்பச் சென்னைக்கு வந்துவிட வேண்டுமென்று நிரம்பப் பிரார்த்தித்தார்கள். ஆனுல், ஐயரவர்கள் அதினின்று விலகுவதில் ராஜா ஸாஹேப் அவர்களுக்கு இஷ்டமில்லை. ஆயினும், கலியாணசுந்தர மையரவர்கள் ராஜாஸாஹேப் அவர்களிடம் நேரிலும் தக்க தனவான்கள் முகமாகவும் பலமுறை பக்குவமாகச் சொல்லி ஐயரவர்களைச் சென்னைக்கு வரும்படி செய்துகொண்டார்கள். ராஜா ஸர் செட்டியார் அவர்கள் ஐயரவர்களைப் பிரிய மனமில்லாமலே அவர்களுக்கு விடைகொடுத்தார்கள்.

நூலாராய்ச்சி.

ஐயரவர்கள் குடந்தைக்கு வந்தபொழுது, ஸ்ரீமான் சேலம் ராமஸ்வாமி முதலியாரவர்கள் இவ்வூரில் டிஸ்டிரிக்ட் முனிஸீபாக வந்திருந்தார்கள். அவர்கள் தமிழில் விசேஷ அபிமான முடையவர்கள். அவர்கள் ஐயரவர்களோடு அடிக்கடி கலந்து வார்த்தை சொல்வதுண்டு. "சீவக

சிந்தாமணி"யை படிக்கச் சொல்லிக் கேட்பார்கள்; அதனை ஆராய்ச்சி செய்து பதிப்பிக்க வேண்டுமென்று அடிக்கடி தூண்டி அதனை வெளியிடச் செய்தார்கள். அந்தச் "சீவக சிந்தாமணி" முதல் பதிப்பு 1887-ஆல் வெளிவந்தது. அந்தப் பதிப்பு வெளிவந்தவுடன், அது ஒரு பூர்ண சந்திரோதயம்போலாகி ஐயரவர்களுடைய புகழை உலக மெல்லாம் பரவச் செய்தது. சிந்தாமணிப் பதிப்பே மற்றச் சங்க நூல்களைத் தேடவும் அவற்றைப் பிரதி செய்து ஒப் பிட்டு ஆராய்ச்சி செய்யவும் பலவற்றை அச்சிட்டு வெளி யிடவும் காரணமாயிற்று. "சீவக சிந்தாமணி" இரண்டாம் பதிப்பு 20-வருஷத்திற்குப் பின் 1907-ம் வருஷத்திலும், மூன்றும் பதிப்பு அதற்கு 15-ம் வருஷத்திற்குப் பின் 1922-ம் வருஷத்திலும் வெளி வந்தன. முன்னம் விளங் காம லிருந்த பல அரிய விஷயங்கள் ஆராய்ச்சி செய்யச் செய்ய விளங்கினமையால், முதற்பதிப்பிற்கு இரண்டாம் பதிப்பும், இரண்டாம் பதிப்பிற்கு மூன்றும் பதிப்பும், பல வகையில் சீர்த்திருத்தம் அடைந்திருத்தலைப் பார்க்கலாம். இது, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய மற்ற நூல்களுக் கும் ஒக்கும். ஐயரவர்கள் ஜைன பௌத்த நூல்களிலுள்ள ஸந்தேகங்களை அந்த அந்த மதத்தில் வல்லவர்களைக் கேட் டுத் தெரிந்தே நிச்சயிப்பார்கள். அந்த அந்த நூல்களில் ஐயரவர்கள் செய்திருக்கிற ஆராய்ச்சிகளைப் பார்த்து அந்த அந்த மதத்திலுள்ளவர்களே ஆச்சரியப்படுவார்கள். ஐயர வர்கள் ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்ட பிறகுதான், சங்க நூல்களைப் பற்றிய விவரம் உலகத்திற்கு நன்கு தெரிந்தது. இப்பொழுது எல்லாரும் சங்க நூல்களைப் பற்றியே பேசுகி

ருர்கள். அந்தக் காலத்தில் ஒரு சிலரே யன்றிப் பலருக்குச் சங்க நூல்களைப்பற்றிய விவரம் தெரியாது. சில நூற்ருண்டுகளாகச் சங்க நூற்பயிற்சி குறைந்திருந்ததுபோலும், சங்க நூல்கள் பல கறையான் வாய்ப்பட்டு அழிந்துபோகும் நிலைமையி லிருக்கையில், ஐயரவர்கள் அங்கங்கே ஏடுகள் இருக்குமிடம் போய்த் தேடிப் பார்த்து அவைகளைப் பற்றிய விவரங்களை வெளியிடத் தொடங்கினுர்கள். ஏடு தேடுதற்காக ஐயரவர்கள் எடுத்துக்கொண்ட சிரமம் எல்லையில்லாதது. நகரங்களிலும் பெரிய ஊர்களிலுமுள்ள வித்வான்களின் வீடுகளில் போய்ப் பார்த்தது மாத்திரமன்று, செல்லக்கூடாத கஷ்டமான இடங்களிலும் சென்றிருப்பார்கள். 'நடுக் காட்டில் ஒரு ஜைன மடம் இருக்கிறது. அதில் சில ஏடுகள் உண்டு' என்று யாராவது சொல்லக் கேட்டால், அந்த இடத்திற்குப் போவார்கள். யாராவது சிறந்த வித்வானுடைய ஏடு ஸாமான்யரான ஒருவர் வீட்டிலிருக்கிற தென்று தெரிந்தாலும் அங்கே போய் அவருக்கு நல்ல வார்த்தை சொல்லியோ அல்லது பொருளைக்கொடுத்தோ அவருக்குத் திருப்தி வரச் செய்து ஏடுகளைப் பார்த்து வருவார்கள். ஐயரவர்கள் போய்ப் பாராத பழைய வித்வானுடைய வீடு இராதென்று நிச்சயமாகச் சொல்வேன். இப்படிப் பல இடங்களுக்கும் போய்ப் பல வகையான சிரமத்துடன் ஏடுகளைத் தேடிக்கொண்டே வருகிருர்கள். இன்னமும் எங்கேயாவது ஏடு இருக்கிறதென்று தெரிந்தால் அந்த இடத்திற்குப் போய்ப் பார்த்து வருவதில் மிக்க ஊக்கமுள்ளவர்கள். நமது ஐயரவர்களால் பழைய ஏடு

களுக்கு ஒரு கௌரவம் உண்டாயிற்று. அப்பாற் பலரும் ஏடுதேடத் தொடங்கினார்கள்.

பிறகு, பத்துப்பாட்டு நச்சினார்க்கினியர் உரையுடன் வெளியிடத் தொடங்கினார்கள். அவர்கள் முதலில் பத்துப் பாட்டை ஆராய்ச்சி செய்யத் தொடங்கியபொழுது மூல முள்ள புஸ்தகம் கிடைக்கவில்லை. உரையில் மூலத்திலுள்ள சொற்களையும் தொடர்களையும் எழுதி அவற்றிற்கு உரை எழுதி யிருந்ததைமையால், அதிலிருந்து மூலத்தை மாத் திரம் தனியே எழுதிச் சேர்த்தார்கள்; பல பிரதிகளை வைத்து ஒப்பு நோக்கி ஸித்தம் செய்தார்கள். பத்துப் பாட்டுச் செய்யுள்கள் சிரமமான அன்வயமுடையவை. பின் னுள்ள சொல் முன்னுள்ள சொல்லுடன் அன்வயிக்கும். முன்னுள்ள சொல் பல அடிகளுக்குப் பின்னுள்ள சொல் லுடன் அன்வயிக்கும். நச்சினார்க்கினியர் அங்கங்கே சொற் களின் முடிவைக் காட்டியிருப்பதோடு, ஒவ்வொரு பாட் டின் முடிவிலும் அந்தப் பாட்டு முழுதிற்கும் அன்வயித்து வினை முடிவுசெய்து காட்டி யிருப்பதால், அந்த உதவி யைக்கொண்டு பொருளை நிச்சயித்துக் கொண்டார்கள். ஆகவே, மூலம் முழுதும் திருத்தமாக அமைந்துவிட்டது. பிறகு, வேண்டிய ஆராய்ச்சிக் குறிப்புகளை எழுதி, 1889-ம் வருஷத்தில் வெளியிட்டார்கள்.

பிறகு, பஞ்சகாவ்யங்களில் ஒன்றும் இயல் இசை நாடகமென்னும் முத்தமிழ் விரவிய நூலுமாகிய சிலப் பதிகாரத்தை ஆராய்ச்சி செய்து வெளியிடத் தொடங்கி னார்கள். அதற்காக அவர்கள் பட்டபாடு சொல்ல முடியா

தது. இசைத் தமிழ் நாடகத் தமிழைப்பற்றிய விஷயங்களை விவரமாகத் தெரிவிக்கக்கூடிய நூல்களில்லை. பல பாகங்களுக்கு உரையில்லை. அந்தப் பாகங்கள் கிடைக்குமோ என்று தமிழ் நாட்டிலுள்ள பரம்பரை வித்வான்களுடைய வீடுகளிலும், தேசாந்தரங்களிலுள்ள கையெழுத்துப் புஸ்தகசாலைகளிலும் தேடிப்பார்க்கச் செய்து, கிடைத்த பிரதிகளைக் கொண்டு மிக முயன்று சிலப்பதிகாரத்தை 1892-ஷ வெளியிட்டார்கள். கடைச்சங்க காலம் இன்னதென்று ஊகிப்பதற்கு ஆதாரங்கள் கிடைத்தன. இது முதல் தமிழ்ப் பண்டிதர்களும் இங்கிலீஷ் சரித்திர ஆராய்ச்சிக்காரர்களும் சங்ககால ஆராய்ச்சியில் தம் கருத்தைச் செலுத்தலானார்கள்.

பிறகு, புறநானூறு 1894-ஷ வெளியிடப்பட்டது. அதனால், பல வித்வான்களுடைய பெயர்களும், பல அரசர்களுடைய பெயர்களும் வெளியாயின. பல ஆச்சரியமான சரித்திரங்கள் வெளியாயின. அதுவரையில் வெளிப்படாத பல அரிய விஷயங்கள் வெளியாயின. இந்தப் புஸ்தகம் பூர்த்தியாகி வெளிவந்தவுடன், பல தேசங்களிலிருந்து ஐயரவர்களுக்குப் பல வாழ்த்துக் கடிதங்கள் வந்தன. பிறகு, மணிமேகலையை ஆராய்ச்சி செய்து உரையுடன் வெளியிடத் தொடங்கினார்கள். அது 1898-ஷ வெளிவந்தது. மணிமேகலையில் பௌத்த ஸம்பிரதாய விஷயங்கள் பல கூறப்பட்டுள்ளன. அவற்றை யெல்லாம் தமிழ்நூல்களைக்கொண்டு தெரிந்துகொள்ளுதற்கு இடமில்லை. இங்கிலீஷிலுள்ள நூல்களைக் கொண்டும், ஸம்ஸ்கிருத நூல்களைக் கொண்டும் தெரிந்து நுட்பமான பல விஷயங்

களை விளக்கி உரை யெழுதி வெளியிட்டார்கள். பிறரால் செய்யமுடியாத மிக அரிய காரியத்தையே ஐயரவர்கள் செய்திருக்கிறார்க ளென்றாலும், பத்துப் பாட்டும், சிலப் பதிகாரமும், புறநானூறும், மணிமேகலையும், ஐங்குறு நூறும், பதிற்றுப்பத்தும் ஐயரவர்களுக்கு அதிக சிரமம் கொடுத்திருக்கக் கூடுமென்பது என்னுடைய எண்ணம். மணிமேகலைக்கு உரையெழுதி முடிப்பதற்குப் பல வருஷங் களாயின. ஐயரவர்கள் அப்பொழுது பல இரவுகள் தூங்காமல் உரை யெழுதி யிருப்பார்கள். அவர்கள் எப் பொழுதுமே இரவில் சிலமணி நேரந்தான் தூங்குவார்கள். சிறிதுநேரம் தூங்கிவிட்டுப் பிறகு எழுந்திருந்து வேலை செய்வதுண்டு. தமிழிற்கு உழைப்பதற்காகவே நித்திரை யையும் மற்ற ஸௌகரியங்களையும் குறைத்துக்கொண்டு விட்டார்கள். ஒரு புஸ்தகத்தை அச்சிடத் தொடங்கினால் அது ஸம்பந்தமாக என்னென்ன விஷயங்கள் கிடைக்கக் கூடுமோ அவ்வளவும் கிடைத்தாலன்றி, அதனை வெளியிட மாட்டார்கள். ஒரு புஸ்தகம் அச்சிட்டு முடிந்து விட்டா லும், அதில் குறைவா யிருக்கிற சில பகுதிகளை நிச்சயிப்ப தற்கு, 'வேறு பிரதி கிடைக்குமோ' என்று பல வருஷங் கள் காத்திருப்பார்கள். 'வேறு பிரதி இனிக் கிடைக்காது' என்று நிச்சயித்தால் தான் அந்தப் புஸ்தகத்தை வெளி யிடுவார்கள். உதாரணமாகப் பெருங் கதை இப்பொழு துள்ளபடி அச்சிட்டு முடிந்தபிறகும், கிடைக்காத பாகங் கள் கிடைக்குமோ என்று எதிர்பார்த்து அதனைப் பல வருஷங்கள் வெளியிடாமல் வைத்திருந்தார்கள். இனிக் கிடைக்காவென்று' நிச்சயமான பிறகே அதனை வெளியிட்

டார்கள். பஞ்ச காவியங்களில் கிடைத்த மூன்றும் எட்டுத்தொகை நூல்களுள் நான்கும், பத்துப்பாட்டும் புறப்பொருள் வெண்பாமாலை யுரை, நன்னூல் விருத்தியுரை முதலிய பல இலக்கண நூல்களும், பிற்காலத்து இலக்கியங்களாகிய பல புராணங்களும், கலம்பகம் உலா முதலிய பலவகைப் பிரபந்தங்களும் ஐயரவர்களால் ஆராய்ந்து வெளியிடப்பட்டுள்ளன. அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற நூல்களில் முன்னும் பின்னும் உள்ள ஆராய்ச்சிக் குறிப்புக்கள் விலைமதிக்கக்கூடாதவை. தமிழ் இலக்கிய இலக்கணங்களில் அச்சிட்டு வெளிவராதவையும், ஐயரவர்கள் ஆராய்ச்சிசெய்து திருத்தி வைத்திருப்பவையுமான நூல்கள் பல உண்டு. அவைகளை அச்சிட்டு வெளியிடுவதற்குப் போதிய ஸௌகரியங்க ளில்லாமையால், அவை வெளிவராம லிருக்கின்றன. அவைகள் அப்படி இருத்தற்குக்காரணம் தமிழ்நாட்டாருடைய அசிரத்தை என்பதைத் தவிர வேறு என்ன சொல்வது ?

சென்னை ஸர்வகலா சங்கத்தார்கள் விரும்பியபடி 1927-ம் வருஷத்தில் ஐயரவர்கள், 'சங்கத் தமிழும், பிற்காலத் தமிழும்' என்னும் விஷயமாக 10 பிரசங்கங்கள் செய்தார்கள். அவை புஸ்தக ரூபமாக வெளிவந்துள்ளன. அவற்றால் இதுவரையில் தெரியாத பல அரிய விஷயங்கள் விளங்கும்.

ஸமீபத்தில் பெரிய புராணமும், கம்பராமாயணமும் குறுந்தொகையும் முறையே ஐயரவர்களுடைய பதிப்பாக வெளிவருமென்று குறிப்பாகத் தெரிகிறது. அவை

அப்படியே வெளிவருமானால் தமிழ் மக்களுக்குப் பெரும் பயனளிப்பன வாகும். எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் இனிது அருள்புரிக.

யூனிவர்ஸிடி முதலிய இடங்களில் பண்டிதர்கள் நன்மைகள் அடைந்து வருவதற்குக் காரணம் ஐயரவர் களே.

வித்வான் தாண்டவராய முதலியார், விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர், மகாலிங்கையர் முதலியவர்கள் தமிழ் நூல்களை வெளியிடத் தொடங்கிய வர்கள். இவர்களுடைய புஸ்தகங்களில் பெரும்பாலும் அதிகப் பிழை யிருப்பதில்லை. பிறகு, ஆறுமுக நாவலரவர் கள் பல நூல்களைத் திருத்தமாக அச்சிட்டு வெளியிட்டார் கள். ஐயரவர்கள் மூலத்தைத் திருத்தமாக அச்சிட்டு வெளிப்படுத்துவதன்றி, நூல்களையும் உரைகளையும் மேல் திசையாருடைய முறைப்படி பலவகை ஆராய்ச்சிக் குறிப்பு களுடனும் வெளியிடத் தொடங்கினார்கள். சில நூல்களில் மேற்றிசையாருடைய ஆராய்ச்சிக்கு மேற்பட்ட சில புதிய விஷயங்களும் இவர்களுடைய பதிப்பில் காணப்படும். ஒரு நூலில் வந்துள்ள உதாரணங்களை இன்ன இன்ன நூலி லிருந்து வந்தவை யென்று எடுத்துக் காட்டுவதுண்டு. ஐய ரவர்கள் இந்த நூலிலுள்ள விஷயங்களும், ஒத்தகருத்துக் களும் வேறு எந்த எந்த நூல்களில் வந்துள்ளன என்பது போன்ற வேறு பல விஷயங்களும் வெளியிட்டிருக்கிறார் கள்; இது ஸாமான்யமான காரியமன்று.

ஐயரவர்கள் உறுதியான சைவப்பற்றுடையவர்களாயினும், தமிழ்ப் பாஷையிலுள்ள பற்றினுல் அந்தப் பாஷையின் பெருக்கத்தை நினைந்து இதர மத நூல்களில் சிறிதும் வெறுப்பில்லாதவர்கள். ஜைனபௌத்த நூல்களை ஆராய்ச்சி செய்து வெளியிடுதலே அதனை நன்கு விளக்கும். வைஷ்ணவ பிரபந்தங்களிலும் அவற்றின் வியாக்கியானங்களிலும் சைவத் திருமுறைகளிற் போலவே ஐயரவர்களுக்கு விசேஷ பாண்டித்யமும் ஈடுபாடும் உண்டு.

தக்கவர்களுடைய பழக்கம்.

நம்முடைய ஐயரவர்களுக்குத் தமிழ்நாட்டிலுள்ள மடாதிபதிகளும், அரசர்களும், ஜமீந்தார்களும், பெரிய உத்தியோகஸ்தர்களும், தனவந்தவர்களுமான பலர் பழக்கமுண்டு. மாட்சிமை தங்கிய ஸேதுபதி மன்னரவர்களும், பாலவநத்தம் ஜமீன்தாரும் மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபகருமாகிய ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்கள் ஊற்றுமலை ஜமீன்தாராகிய ஸ்ரீமான் ஹ்ருதயாலய மருதப்பத் தேவரவர்கள் முதலான பல ஜமீன்தார்களும், பிரஸித்தி பெற்றவர்களான ஸ்ரீமான் பட்டாபிராம பிள்ளையவர்கள் முதலிய பலரும் ஐயரவர்களுடைய ஜாகைக்கு வந்து ஸல்லாபஞ்செய்து போவதுண்டு. ஐரோப்பிய கனவான்கள் பலர் ஐயரவர்கள் சேர்த்து வைத்திருக்கிற கையெழுத்துப் புஸ்தகங்களை வந்து பார்த்ததுண்டு. ஐயரவர்கள் பென்ஷன் பெற்றுக்கொண்டு விலகியதினத்திற்கு அடுத்த நாள், உலகப் பிரஸித்தி பெற்றவர்களான ரபீந்த்ரநாத் டாகூரவர்கள் ஐயரவர்களுடைய ஜாகைக்கு வந்து அவர்கள் செய்திருக்கிற வேலைகளையெல்லாம் பார்த்துப் பரம திருப்தி

யடைந்தார்கள். ஸ்ரீமான் A. சேஷையா சாஸ்திரிகளவர்கள், ஸ்ரீமான் டாக்டர் சுப்பிரமணிய ஐயரவர்கள், ஸ்ரீமான் V. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள், ஸ்ரீமான் P. R. ஸுந்தரம் ஐயரவர்கள், ஸ்ரீமான் Sir P. S. சிவஸ்வாமி ஐயரவர்கள் முதலான கனவான்களுக்கு ஐயரவர்களிடத்தில் விசேஷ கௌரவமும் அபிமானமும் உண்டு. V. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களிடத்து யாராவது தமிழ் தெரியுமென்று சொல்லிக்கொண்டு போனால், அவரவர்கள், 'ஐயரவர்களைத் தெரியுமா? அவர்கள் உம்மைப்பற்றிச் சொல்லுவார்களா?' என்று கேட்பார்கள். அவர்கள் வேறு வித்தைகளைப்பற்றி வார்த்தை சொல்லும்பொழுதும், 'படிப்பென்றால் சாமிநாதயரவர்களுடைய படிப்பைப்போல் இருக்கவேண்டும்' என்று இவர்களை உபமானமாகச் சொல்லுவார்கள். P. R. ஸுந்தராமையரவர்களை நான் நீலகிரியில் ஒருமுறை பார்த்தபொழுது, அவர்கள், 'நான் கேட்டுக்கொண்டதன் மேல், ஐயரவர்கள் ஒரு ஜாப்தா கொடுத்திருக்கிறார்கள். அதில் உம்முடைய பெயர் இருக்குமா?' என்று கேட்டார்கள். இவற்றால், பெரிய கனவான்கள் ஐயரவர்களிடத்தில் வைத்திருந்த நம்பிக்கை நன்கு விளங்குமன்றோ? தேசாந்தரங்களிலுள்ள பலர், ஐயரவர்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதுவதுண்டு. டாக்டர் G. U. போப் அவர்களும், பிரான்ஸிலுள்ள ஜூலியன் வின்ஸன் அவர்களும், அவர்களுடைய மாணவர்களும் ஐயரவர்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டே இருப்பார்கள். கொழும்பு, யாழ்ப்பாணம் முத

லிய இடங்களிலுள்ள பிரபுக்களும், வித்வான்களும் ஐயரவர்களிடத்தில் மிக்க அன்பு பாராட்டுவராயினர். Hon'ble P. குமாரஸாமி முதலியவர்கள், Sir P. ராமநாதம் அவர்கள், Sir P. அருணாசலம் அவர்கள் முதலான கல்வியும் செல்வமும் ஒருங்கு வாய்ந்த கனவான்கள் பலர் ஐயரவர்களிடத்தில் மிக்க கௌரவம் வைத்திருந்தார்கள். Hon'ble P. அருணாசல முதலியாரவர்கள் ஐயரவர்களைப் பார்ப்பதற்காக ஒருமுறை குடந்தைக்கு வந்திருந்தார்கள். கொழும்பிலுள்ள ஸ்ரீமான் ஸ்ரீகாந்த முதலியாரவர்கள் இன்றைக்கும் ஐயரவர்களிடத்து மிக்க அன்புகொண்டு அடிக்கடி கடிதம் எழுதுபவர்கள்.

பட்டங்களும் பரிசுகளும்.

ஐயரவர்கள் செய்துவந்த நூலாராய்ச்சி விஷயத்தை நன்கு மதித்து, நமது சென்னைக் கவர்ன்மெண்டார், 1905-ம் வருஷத்தில் ரூபா 2000 நன்கொடை யளித்து ரூபா 1000-த்தை உடனே கொடுத்துவிட்டு, மற்ற ரூபா 1000-த்தையும் இரண்டு நூல்களை வெளியிட்டு இரண்டு தடவைகளில் வாங்கிக்கொள்ளும்படி உத்தரவு செய்தார்கள். பிறகு, எத்தனையோ நூல்களை வெளியிட்டார்களானும், பாக்கி ரூபா 1000-த்தையும் ஐயரவர்கள் இன்னும் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. 1906௵ ஜனவரிமீ நமது இந்தியா கவர்ன்மெண்டார், ஐயரவர்களுக்கு, 'மஹாமஹோபாத்யாய' என்னும் பட்டம் அளித்தார்கள். 1917௵ பிப்ரவரிமீ பாரத தர்ம மண்டலம் என்னும் ஸபையார் ஐயரவர்களுக்கு, 'திராவிட வித்யாபூஷ

ணம்' என்னும் பட்டம் அளித்தார்கள். மதுரை அட்வகேட் ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களுடைய முயற்சியினால் ஐயரவர்களிடத்தில் மிக்க அபிமானமுள்ள பல கனவான்கள் சேர்ந்து ரூ. 5000 அடங்கிய பண முடிப்பை 1925ஆம் ஜூன்மாதத்தில் மதுரைத் தமிழ்ச் சங்க வருஷோற்சவ காலத்தில் கொடுத்தார்கள். அதே சமயத்தில், கும்பகோணம் ஸ்ரீ காமகோடிபீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளவர்கள், ஐயரவர்களுக்கு, 'தாக்ஷிண்ணாத்ய கலாநிதி' என்னும் விருதுப்பெயரும், சால்வை, தோடாமுதலிய சில பரிசுகளும் அளித்தார்கள். சென்னை யூனிவர்ஸிடியில் தவிர, காசி, மைஸூர் முதலிய இதர யூனிவர்ஸிடிகளிலும் ஐயரவர்களை மெம்பராக விரும்பிச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

சில பொருத்தங்கள்.

ஐயரவர்கள் தமிழ்ப்பாஷை படிப்பதற்காக முன் ஜன்மத்தில் நல்ல புண்ணியத்தைச் செய்து வரத்தைப்பெற்று வந்தவர்களோ என்று தோன்றுகிறது. அவர்களுடைய பிதா வேங்கடஸுப்ரமணிய ஐயரவர்கள் என்று பெயருடையவர்கள். இந்தப்பெயரில், தமிழ்நாட்டின் வட எல்லையாகிய வேங்கடத்தின் பெயரும் அகஸ்தியருக்கு இலக்கணம் உபதேசித்த சுப்பிரமணியருடைய பெயரும் அமைந்திருப்பதும், அந்தத் தந்தையாரிடத்து இவர்கள் முதலில் வித்யாப்யாஸம் செய்ததும், இவர்களுடைய தாயாருக்கு, கல்விக்குத் தேவதையான ஸரஸ்வதி என்று பெயர் அமைந்திருப்பதும் அகஸ்தியருக்குத் தமிழிலக்கண முபதேசித்த

குமாரக்கடவுளின் பெயராகிய ஸ்வாமிநாதனென்பது ஐயரவர்களுக்குப் பெயரா யமைந்திருப்பதும், அவர்களுடைய இனிய குணத்திற்கேற்ப, அவர்களுடைய குணமாகிய மனைவியாருக்கு மதுராம்பா என்று பேர் அமைந்திருப்பதும், அவர்களுடைய தமிழாசிரியருக்கு மதுரையில் சங்கப் புலவர்களோடு தாமும் ஒரு புலவராயிருந்து தமிழாராய்ந்த சோமசுந்தரக் கடவுளுடைய பெயராகிய மீனாக்ஷிசுந்தரம் என்னும் பெயர் வாய்ந்திருப்பதும், அதனை நன்கு விளக்கும். ஐயரவர்களுடைய குடும்பத்தில் பூஜையிலிருக்கிற ஸ்வாமிக்கு மீனாக்ஷி சுந்தரேசுவரர் என்று பெயர். அந்தப் பெயருடையவர்களே ஐயரவர்களுக்குத் தமிழாசிரியரா யமைந்தது ஓர் ஆச்சரியம். அவர்கள் பிறந்த வருஷம் ஊர் முதலியவைகளும் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளன. அவர்கள் பிறந்த வருஷம் ஆனந்தஹு என்பது. அவர்களுடைய ஊர் உத்தமதானபுரம் என்பது. இவற்றால் அவர்கள் எல்லாருக்கும் ஆனந்தத்தை விளைவிக்கக்கூடிய இன்குணம் வாய்ந்தவர்க ளென்பதும் உத்தமோத்தமமாகிய வித்யாதானத்தைச் செய்பவர்களென்பதும் நன்கு விளங்கும்.

இந்தக் காலேஜ் ஸம்பந்தமாக (Diamond Jubilee) கொண்டாடுவதுபோல இந்த ஸமயம் ஐயரவர்கள் ஸம்பந்தமாகச் சில ஜூபிலிகள் கொண்டாட நியாயமுண்டு. ஐயரவர்களுக்கு மஹாமஹோபாத்யாய பட்டம் அளிக்கப்பட்டது 1906ஹு. அதிலிருந்து இப்பொழுது 25ஹு ஆகிறபடியால் அதனைநோக்க, இது (Silver Jubilee) ஆகும். கவர்ன்மெண்டு உத்தியோகம் கிடைத்து இப்பொழுது

50-ஆவது ஆகிறபடியால், அந்த வகையில் இது (Golden Jubilee) ஆகிறது. (Golden Jubilee) க்குமேல் 10-ஆவது ஆனால் அதை (Diamond Jubilee) என்று கொண்டாடுகிறார்கள். ஐயரவர்கள் ஜனனத்திலிருந்து இப்பொழுது 75-ஆவது ஆகிறபடியால், அந்தவகையில் இது (Diamond Jubilee) க்கு மேற்பட்டதான ஒரு (Jubilee) ஆகக்கொண்டாடப்படவேண்டும். இவையெல்லாவற்றிற்கும் மேல், ஐயரவர்கள் ஸமீபத்தில் மிக்க அஸௌக்யத்தை அடைந்து, கவலைக்கிடமாயிருந்து, இப்பொழுது ஆரோக்யத்தை அடைந்து வருகிறார்கள். அதனால், அந்தக் கொண்டாட்டம் எல்லாவற்றிற்கும் மேலாகக் கொண்டாடப்பட வேண்டிய ஒரு மஹோத்ஸவ மாகிறது.

குணாதிசயங்கள்.

ஐயரவர்கள் அன்பு, அருள், அடக்கம், வாய்மை முதலிய உத்தம குணங்களெல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவர்கள். அவர்கள், 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால், என்ன பயத்ததோ சால்பு' என்பது முதலிய பல திருக்குறள்களை எழுதித் தாமுட்காருமிடத்தில் எதிரே தொங்கவிட்டிருப்பார்கள். அவர்கள் ஒருவரிடத்து ஒரு சிறிய உபகாரம் பெற்றாலும் அதை மிகப் பெரிதாகப் பாராட்டும் உத்தமகுணம் வாய்ந்தவர்கள். 'காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது' 'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக், கொள்வர் பயன்றெரி வார்' 'உதவி வரைத்தன் றுதவி யுதவி, செய்யப்பட்டார் சால்பின் வரைத்து' என்னும் திருக்குறள்

களுக்கு இலக்கியமாக விளங்குபவர்கள் ஐயரவர்களே. முதலில் அரியிலூரில் சில நூல்கள் பாடம் சொன்ன சட கோபாசாரியரவர்களுடைய மனைவியார் இன்னமும் இருக் கிறார்கள். ஐயரவர்கள் சடகோபாசாரியரவர்களுடைய சிராத்தத்துக்கு வருஷந்தோறும் பணம் கொடுத்து வருவ தல்லாமல் அந்த அம்மாளுக்கு அப்போதப்போது வேண் டும் செலவுகளுக்கும் அனுப்பி வருகிறார்கள். பிள்ளையவர் கள் தமக்குப் பாடம் சொல்லி உபகரித்ததற்காக இப் பொழுது அவர்களுடைய பேரர்காலத்திலும் அவருடைய குடும்பத்துக்கு வேண்டிய உதவி செய்து வருகிறார்கள். தாம் அப்போதப்போது இயன்ற உதவிகளைச் செய்துவந்த தல்லாமல், பிள்ளையவர்களுடைய குடும்போபகார நிதி யென்று ஒன்று ஏற்பாடு செய்து தக்க கனவான்களின் உத வியைக்கொண்டு பொருள் சேகரித்துப் பிள்ளையவர்களு டைய குமாரரிடம் கொடுத்து உதவினார்கள். இன்னமும் அந்தக் குடும்பத்தினுடைய க்ஷேமத்தில் மிக்க நாட்ட முடையவர்களாக இருக்கிறார்கள். செட்டியாரவர்கள் தமக்குக் காலேஜ்வேலை கிடைக்கும்படி செய்ததற்கு அவர்களிடத்து விசேஷ நன்றிபாராட்டித் தமது கிருகத் திற்குத் 'தியாகராஜ விலாஸ' மென்று பெயர் வைத்ததுமல் லாமல், இந்தக் காலேஜில் அவர்கள் பெயரால் ஒரு ஸ்கா லர்ஷிப் வைத்து வருஷம் ரூ. 48 வீதம் சைவ மாணவர் ஒருவருக்குக் கொடுத்தும் வருகிறார்கள். ஐயரவர்களு டைய உறவினர்களில் அவர்களுடைய உதவியைப் பெறாத வர்கள் பெரும்பாலும் இல்லை. அவர்களிடம் படிப்பவர்க ளெல்லாம் அவர்களுடைய உதவியைப்பெறுபவர்களாகவே

இருப்பார்கள். அவர்களாகத் தெரிவித்தாலன்றி ஐய ரவர்கள் அதனைச் சிறிதும் தெரிவிக்கமாட்டார்கள்; ஆனால் அதிகம் உபகரிப்பதற்கு இல்லையே யென்று மன வருத்த மடைவார்கள். ஸ்வல்ப வரும்படியுள் இவற்றை யெல்லாம் எப்படிச் செய்கிறார்க ளென்பது ஆச்சரியப்படத்தக்கது. தாம் படாடோபம் ஒன்றும் வைத்துக்கொள்வதில்லை தமக்கென அதிக ஸௌகர்யங்களை எதிர்பார்ப்பதில்லை. வருகிற வரும்படியைக்கொண்டு ஒழுங்காகச் செலவு செய்து வருதலால் அவர்களுக்கு இவையெல்லாம் ஸாத்ய மாகின்றன.

ஐயரவர்கள் பேசுவனவெல்லாம் அரிய நூற் கருத்துக் களாகவே யிருக்குமாதலால், அவர்களுடன் அளவளாவுவ தும் ஒருபடிப்பே யாகும். பலவருஷங்கள் சிரமப்பட்டும் அறிந்துகொள்ளக் கூடாத பல அரிய விஷயங்களை அவர் களுடன் சிலநேரம் பழகுவதால் எளிதில் அறிந்துகொள்ள லாம்.

ஆதீனங்களின் அபிமானம்.

திருவாவடுதுறைக்குப் படிக்க வந்த காலம் முதல் அந்த இடத்திலுள்ளவர்களுக்கும் இவர்களுக்கும் நெருங் கிய பழக்கமுண் டென்பது சொல்லாமலே அமையும். அங்கே எந்த விசேஷத்திற்கும் இவர்கள் போகாமலிருக்க மாட்டார்கள். இவர்கள் எப்பொழுதும் அந்த இடத்தின் ஞாபகமாகவே இருப்பார்கள். அந்த இடத்திலுள்ள ஒவ் வொருவரும் ஐயரவர்களிடத்தில் பரமப்ரீதியும் கௌரவமு

முள்ளவர்கள். இப்பொழுது அங்கே தலைவர்களாக வீற்றிருக்கிற மஹா கனம் பொருந்திய ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகரவர்கள், ஆதீன பரிபாலனத்திலும் வித்யா பரிபாலனத்திலும் மிக்க சிரத்தையுடையவர்கள்; நம்முடைய பரம்பரையான பழைய ஸம்பிரதாயங்களைப் பரிபாலிப்பதில் கண்ணும் கருத்துமா யிருப்பவர்கள். அவர்களுக்கு நம் ஐயரவர்களிடத்தில் விசேஷ அபிமானமும் கௌரவமும் உண்டு.

அப்படியே, திருப்பனந்தாள் ஆதீனத்திலும் ஐயரவர்களுக்குப் பழமையான ஸம்பந்தமும் பற்றுதலுமுண்டு. அங்கே தலைமை ஸ்தானத்திலிருந்த ஒவ்வொருவரும் ஐயரவர்களிடத்தில் விசேஷ அன்பும் அபிமானமுமுடையவர்கள். அவர்களுள் குமாரஸாமித் தம்பிரானவர்கள் ஐயரவர்களுடைய ஸகபாடிகளென்பது முன்னமே சொன்னேன். அவர்களுக்குப் பின்னிருந்த பலரும் ஐயரவர்களுக்கு வேண்டியவர்களே. ஸமீபத்திலிருந்து காலஞ்சென்ற ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சொக்கலிங்கத் தம்பிரானவர்கள் ஐயரவர்களிடத்தில் சிலகாலம் படித்துக்கொண் டிருந்ததுண்டு. தம்பிரானவர்கள் அதனை அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார்கள். மணிமேகலையை ஆராய்ச்சி செய்து அச்சிடும்பொழுது உடனிருந்து உதவிசெய்தவர்களுடைய பெயர்களில் தம்பிரானவர்களுடைய பெயர் இருப்பதைப் பார்க்கலாம். இப்பொழுது ஆதீனத் தலைவர்களாயிருக்கிற ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாதத் தம்பிரானவர்களும் ஐயரவர்களிடத்தில் பரம கௌரவமும் அன்பும் உள்ளவர்களென்பது ஐயரவர்களுடைய இந்த உருவப்படம் அவர்கள்

அளித்திருக்கிறார்க ளென்பதனாலேயே நன்கு விளங்கும். அவர்கள் பாஷாபிவ்ருத்தியை மிக ஆதரித்து வருகிறார்கள். அவர்களின் பேருதவியால் பல அரிய நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. யூனிவர்ஸிடியில் வருஷந்தோறும் வித்வான் பரீக்ஷையில் முதன்மையாகத் தேறுகிறவர்களுக்கு ரூ. 1000 பரிசளித்து வருகிறார்கள். இன்னமும், வருஷம் 5000 ரூ. வீதம் அறிவு வளர்ச்சிக்குரிய காரியங்கள் செய்யும்படி யூனிவர்ஸிடியாரிடம் கொடுக்க ஏற்பாடு செய்துகொண் டிருக்கிறார்கள்.

ஐயரவர்களுக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்யத்தையும் அளித்து இன்னும் பல நூல்களை ஆராய்ந்து வெளியிடச்செய்து தமிழுலகத்திற்குப் பெரிய நன்மையைச் செய்யும்படி எல்லாம் வல்ல ஸர்வேசுவரன் இனிது அருள் புரிய வேண்டும்.

'தமிழ்தமதாக் கொண்டொழுகும் சாமிநா தப்பேர்
அமிழ்தகுண அந்தணரேற் றாயுள்—இமிழ்திரைநீர்
வேலை மணலின் மிகுகவென நாளும்
மூல முதற்போற்று வோம்'

என்று அவர்கள் க்ஷேமத்திற்காக எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்திப்போமாக.

MAHAMAHOPADHYAYA
Brahmasri V. SWAMINATHA AIYAR
—A SKETCH.

மகாமகோபாத்தியாய

பிரமஸ்ரீ வே. சாமிநாதய்யர்

அவரது ஜீவியசரிதை.

BY MR. T. S. KOTHANDARAMA AIYAR, B.A.,

Rd. Chief Sub-Editor, The "Swadesa Mitran," Madras.

கும்பகோணமாங் கோதின்மாநகர்
நம்பனையொளிர் ஞானமூர்த்தியை
அம்பைதன்னொடு மமர்ந்த செல்வனை
உம்பர் வாழ்வினை யுவந்து போற்றியே.

சொல்லுவேனறிவான் மூன்றுஞ் சொற்றிற முடையான் றன்னை
எல்லினை விளைவித்தோங்கி யெழுகின்ற கதிர்போல்வானை
அல்லன மனத்தின் மாசை யகற்றியே யாள்கின்றானைப்
புல்லொடு மரனும் போற்றிப் புகழ்சாமி நாதக் கோவை.

மகாமகோபாத்யாய வே. சாமிநாத ஐயர் இச்சோழ நாட்டிற் பிறந்த ஒரு சிறந்த தமிழ் வித்துவான். அவர் கும்பகோணத்துக்கு மேற்கே 10 மைல் தூரத்திலுள்ள உத்தமதானபுரம் என்னுங் கிராமத்தைச் சேர்ந்தவர். ஐயரின் தகப்பனார் ஸ்ரீ வேங்கட சுப்பையர் என்ற திருநாமம்

பூண்டவர். அவர் ஒரு பெரிய சிவபக்தர். அவரைப்பற்றி ஐயர் அவர்களே ஒரு சமயம்,

"மெய்யார நீறணிந்து விழிமணி மாலிகைபூண்டு,
கையார மலரேந்தி கசிந்துருகித் தினந்தோறு(ம்),
மையாரு மணிமிடற்று மாதேவை யருச்சிக்கும்
ஐயா

எனச் சொன்ன துண்டாகையால், அவர் ஒரு பெரிய சிவ பக்தர் என்பதிற் சந்தேகமேயில்லை. அவர்களின் தாயாருக்கு சரஸ்வதியம்மாள் என்று பெயர்.

பண்டை நாட்களில் பிள்ளைகளைப் படிக்க வைப்பதை ஒரு சந்தோஷ தினமாகக் கொண்டாடுவது வழக்கம். குக் கிராமங்களில் தெருத் திண்ணைப் பள்ளிக்கூட வாத்தியார்களாயிருப்பவர்களுக்கு அந்தத் தினத்தில் சிறிது வரும்படியும் கிடைக்கும். அந்த வழக்கத்தை யனுசரித்து நம் ஐயர் உத்தமதானபுரம் தெருத்திண்ணைப் பள்ளிக்கூடத்தில் அட்சராப்பியாசம் செய்து வவக்கப்பட்டார். அப்பள்ளிக் கூடத்தில் அவர் வாசித்துக்கொண் டிருந்தபோது அவருக்கு வீட்டில் அவர் தகப்பனார் ஸ்ரீ வேங்கடசுப்ப ஐயர் சங்கீதஞ் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வந்தாரென்று தெரிகிறது. ஸ்ரீ வேங்கடசுப்ப ஐயர் சங்கீதத்தில் நல்ல தேர்ச்சியுள்ளவர். அவர் திருச்சி ஜில்லாவைச் சேர்ந்த உடையார்பாளையம் சமஸ்தானத்திலும் அரியிலூர் ஜமீனிலும் சங்கீத வித்துவானா யிருந்தவர். அவர் அரியிலூரில் சங்கீத வித்துவானா யிருந்துவரும் காலத்தில்தான் நம் ஐயர் ஸ்ரீ சடகோபாச்சாரியார் என்ற ஒரு பெரியவரிடம்

சில தமிழ் நூல்கள் பாடங் கேட்டதாய்த் தெரிகிறது. ஸ்ரீ வேங்கடசுப்ப ஐயருக்குத் தம்முடைய குமாரர் சங்கீதம் பயில்வதிலும் தமிழ் கற்பதிலும் ஊக்கமுடையவரா யிருத்தலைப் பார்த்து அன்னாருக்குத் தம்மாலியன்ற மட்டில் தமிழிலும் சங்கீதத்திலும் நல்ல பாண்டித்திய முண்டாகும்படி செய்து வைத்துவிட வேண்டுமென்ற நோக்கம் அதிகமாயிற்று. அதற்கிணங்க அவரும் அங்கங்கே தமிழில் சிறிது பயிற்சியுள்ள வர்களென்று தமக்குத் தெரிந்தவர்களிடம் நம் ஐயரைத் தமிழ் வாசிக்க விட்டு வந்தார். இதற்குள் ஐயருக்கு 16 வயதாயிற்று. அவருடைய நற்காலத்துக்கேற்ப அவரை அக்காலத்தில் தமிழில் மகா வித்வான் என்னும் பிரசித்தி பெற்று யாவராலும் புகழப்பட்டு வந்த திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் தமிழ் வாசிக்கும்படி கொண்டுபோய் விட்டுவிடுவதே நலமென்ற உறுதி அவர் தந்தைக் குண்டாயிற்று. அவ்வுறுதியை நழுவவிடாமல் அத்தந்தையார் தம் குமாரரை அச்சமயம் மாயூரத்தில் சிலருக்குப் பாடஞ்சொல்லிக் கொண்டிருந்த ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களிடம் தமிழ் பயிலக் கொண்டுபோய்ச் சேர்த்தார். ஆனால் அதுவரையில் தம் புதல்வரை விட்டுப் பிரிந்தறியாத ஸ்ரீ வேங்கட சுப்ப ஐயருக்கு அவரைவிட்டுப் பிரியும்போது கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிற்று. 'அச்சமயம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், "நீங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம். கடவுள் பாது காப்பார்" என்று ஐயரின் தந்தையாருக்கு ஆறுதல் சொல்லி யனுப்பினர். தமிழ்ப்பாஷையும் பழைய தமிழ் நூல்களுஞ் செய்திருந்த நல்ல அதிர்ஷ்

டத்தாலேயே ஸ்ரீ வெங்கடசுப்ப ஐயர் தம் குமாரரைத் தமிழைக் கற்றுவர மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களி டம் கொண்டுபோய்ச் சேர்ந்தாரென்று நாமிங்குச் சொல் லாமல் இருக்க முடியவில்லை. தம் தகப்பனார் தம் விஷ யமாய் அக்காலத்தில் செய்த நன்றியை ஐயர் பிற்காலத் தில் மிகப் பாராட்டிப் பேசியுள்ளது பின்வரும் பாடலால் விளங்கும்:—

பற்றலெங்கே செந்தமிழைப் பற்றிக்கற் றோர்பலர்பால்
துற்றலெங்கே மீனாட்சி சுந்தரநல் லாரியன்பால்
கற்றலெங்கே கற்றுக் கவலையொரீஇ அவ்வழியே
நிற்றலெங்கே யின்றவரை நீயருள்செய் யாவிடினே

அதுமுதல் நம் ஐயர் பிள்ளையவர்களைச் சாயைபோல் விடா துபற்றி இருவென இருந்து சொல்லெனச் சொல்லி அவர் பால் தமிழில் பலநூல்களைப் பாடங்கேட்டு வருவராயினர். அப்பொழுதும் ஐயர் சங்கீதம் பயிலுவதை நிறுத்திவிட வில்லை. நந்தன் சரித்திரம் பாடிய கோபாலகிருஷ்ண பாரதி யென்ற சங்கீத வித்துவானொருவரிடம் அவர் வாய்ப்பாட்டு பயின்று வந்ததாய்த் தெரிகிறது. ஆனால் அப்படி அவர் சங் கீதத்தையும் உடன் பயின்றுவரச் சௌகரிய படாமற் போயிற்று. ஏனெனில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு ஐயர் சங்கீதமும் பயின்று வருவது தெரியவரவே அவர், "ஐயா நீர் ஏக காலத்தில் தமிழும் சங்கீதமும் பயின்று வரு, வது சாத்தியப்பட மாட்டாது. சங்கீதம் பயிலுதல் தமி ழில் பாண்டித்தியம் அடைவதற்குப் பெருந்தடையாக முடியக் கூடும். நீர் சங்கீதம் பயில்வதை விட்டு உம் கருத்

தையும் காலத்தையும் முழுதுமே தமிழ் கற்கச் செலுத்துவது தான் விழுமிதாகும்" என்று வற்புறுத்தினதாயும் அப்புத்தி மதியை நம் ஐயர் உச்சிமேற்கொண்டு போற்றி அது முதல் சங்கீதம் பயில்வதை யொழித்துத் தமிழ் கற்பதில் தமது முழுக்கவனத்தையும் செலுத்தத் தலைபட்டதாயும் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள் மாயூரத்தில் தங்கித் தம்மிடம் பாடங் கேட்போருக்குப் பாடஞ்சொல்லி வந்தாராயினும் அவர் திருவாவடுதுறை மடத்துப் பண்டார சந்நிதியாயிருந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் காலமுதலே அவ்வாதீனத்து வித்துவானா யிருந்து வந்தாராகையால், அவர் அடிக்கடி திருவாவடுதுறைக்குப் போய் வருவதுண்டு. அவர் அவ்வூருக்குப் போகும்போதெல்லாம் ஐயரும் அவர் கூடவே போய் வருவார். அச்சமயங்களில் அந்த ஆதீனத் தலைவராயிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் ஐயரின் இளம்பிராயத்தையும் அவ்விளம் பிராயத்திலேயே அவர் தமிழில் அடைந்திருந்த தேர்ச்சியையும், அவரது நற்குணத்தையும் அடக்கத்தையும், கண்டு அவரிடம் அன்பு பாராட்டத் தலைப்பட்டார். ஐயரும் ஸ்ரீலஸ்ரீ தேசிகர் அவர்களின் பேரன்புக்குத் தம்மை உரியராக்கிக் கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றது பின்னால் விளங்கும்.

இப்படிச் சிறிதுகாலம் கழிய ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருவாவடுதுறைப் பண்டார சந்நிதியின் வேண்டுகோளுக் கிணங்கி அம்மடத்துத் தம்பிரான்களுக்

கும், அம்மடத்தின் ஆதரவில் தமிழ் பயின்றுவந்த வேறு சிலருக்கும் தமிழில் பாடங்கள் சொல்லத் திருவாவடுதுறைக்கே வரவழைத்துக் கொள்ளப்பட்டார்கள். அப்போது ஐயரும் அவர்கூடவே திருவாவடுதுறை போய்ச் சேர்ந்தார். அவர் என்று அம்மடம் போய்ச் சேர்ந்தாரோ அன்றே அவருக்கு விசேஷ நற்காலம் பிறந்ததாய்ச்சொல்ல வேண்டும். பிற்காலத்தில் அவருடைய முன்னேற்றத்துக்கு அவர் திருவாவடுதுறைக்குப் பிள்ளையவர்களுடன் கூடப் போய்ச் சேர்ந்ததே காரணமாகும். திருவாவடுதுறை மடத்தில் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் ஐயருடன் பாடங் கேட்டவர்கள் திருப்பனந்தாள் ஆதீனத் தலைவராகவிருந்த ஸ்ரீ குமாரசாமித் தம்பிரான், திருவண்ணாமலை ஆதீனத் தலைவராகவிருந்த ஸ்ரீ ஆறுமுக தேசிகர், ஸ்ரீ ராமலிங்கத் தம்பிரான், ஸ்ரீ பழனிக் குமாரத் தம்பிரான், ஸ்ரீமான் மேலகரம் சண்பகக் குற்றாலக் கவிராயர் என்பவர்களும் வேறு சிலருமெனத் தெரிய வருகிறது.

இப்படி ஐயர் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பால் வாசித்து வருகையில் பிள்ளையவர்கள் சிவபதம் அடைந்தார்கள். அப்பொழுது ஐயருக்குண்டான வருத்தம் சொல்லுந் தரமின்று. ஆனால் அச்சமயம் மடாதிபதியாயிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் ஐயருக்கு மிக்க தைரியஞ்சொல்லி அவர் மனக்கிலேசத்தையாற்றி ஐயர் அவ்வளவு சிறுவயதிலேயே தமிழில் அடைந்திருந்த தேர்ச்சியை நன்கு அறிந்திருந்தாராதலால் அவருக்கு, " நீர் சிறிதும் கவலைப்பட வேண்டாம். இன்னும் கேட்க வேண்டியனவாயிருக்கிற பாடங்களை நம்மிடமே

கேட்டுக் கொள்ளலாம்; இம்மடத்தில் படிக்க வருகிறவர்களுக்கு நீர் பாடஞ் சொல்லியும் வரலாம்; இங்கே சகல சௌகரியங்களும் செய்து கொடுக்கப்படும்" என்று சொல்லி ஐயரைத் தைரியப்படுத்தித் திருவாவடுதுறையிலே அவருக்கு ஒரு வீடு கட்டிக்கொடுத்து வருஷாசனமுங் கொடுத்து வந்தார்கள். இத்தகைய சௌகரியங்களைப் பெற்று சில வருஷங்கள் படிக்க வருகிற பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்லி வந்தார்கள். இத்தகைய கியாதியை ஐயர் பெற்றதற்கு ஸ்ரீலஸ்ரீ தேசிகரின் பேரன்புக்கு ஐயர் ஆதிமுதலே தம்மை உரியராக்கிக் கொண்டதுதான் காரணம்.

ஆகவே, திருவாவடுதுறை மடத்திலே அக்காலத்தில் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்பால் தமிழ் வாசித்தவர்கள் பலரென்றும், அவர்களுள் தமிழ் வித்துவான்களெனக் கியாதிபெற்றவர்கள் சிலரென்றும், அன்னாருள் நம் ஐயர் அம்மடத்தில் பாடஞ் சொல்லும் பாக்கியத்தைப் படைத்தாராதலால், விசேஷக் கியாதி பெற்றவரென்றும் நாம் சொல்லத் துணிவோம். இத்துணைப் பிரசித்தி பெற்றிருந்தவரைப் பிள்ளையவர்களின் மாணாக்கர்களில் முதல் மாணாக்கரும் சிறந்த தமிழ் வித்துவானுமான ஸ்ரீ தியாகராஜ செட்டியார் அவர்கள் அறியாதிருத்தல் சாத்தியமாகுமா? ஆகாதன்றோ? ஸ்ரீ தியாகராஜ செட்டியாருக்கு ஐயரை நன்றாய்த் தெரியும். செட்டியார் அவர்கள் கும்பகோணம் காலேஜில் தலைமைத் தமிழ்ப் போதகராய் அக்காலத்தில் இருந்து வந்தவர். அவர் பிள்ளையவர்களிடம் படித்தவராதலால் அவர்களைப் பார்க்க

அடிக்கடி திருவாவடுதுறைக்குப் போவதுண்டு. அங்கே நம் ஐயர் அவருக்கு அறிமுகமும் பழக்கமுமாயினர். அவ்வறிமுகமும் பழக்கமுமே ஐயர் பிற்காலத்தில் கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்போதகர் பதவியைப் பெறுவதற்குக் காரணமாயிருந்த தெனலாம்.

இப்படி யிருந்துவரும் நாளில் ஸ்ரீ தியாகராஜ செட்டியார் தமது வயது முதிர்ச்சியையும், சரீரத் தளர்ச்சியையும் கருதித் தாம் வேலையினின்றும் நீங்கிக்கொள்ளப் பிரியப்படுவதாய் அக்காலத்தில் அந்தக் காலேஜ் பிரின்ஸிபாலாயிருந்து வந்த ராய் பகதூர் டி. கோபாலராயரிடம் தெரிவித்துக் கொண்டார். அதற்கு ராயர் அவர்கள், "நீர் வேலையைவிட்டு விலகிக்கொள்ளுதல், எப்படி எளிதில் சாத்தியப்படும்? உம்முடைய ஸ்தானத்தை வகிக்கக்கூடிய யோக்கியதையுள்ள தமிழ்ப் பண்டிதர் எளிதில் கிடைக்க மாட்டாராதலால், நான் உமது வேண்டுகோளுக் கிணங்கமுடியாதவனாக விருக்கிறேன்" என்று சொல்லிச் செட்டியார் காலேஜை விட்டு நீங்க இரண்டொரு சமயம் சம்மதித்தாரில்லை. ஆனால் தம்தேகத் தளர்ச்சியைப் பலமுறையும் எடுத்துச் சொல்லிச் செட்டியார் கேட்டுக்கொள்ளவே, ராயர் அவர்கள் "அப்படியானால் உம்முடைய ஸ்தானத்துக்கு மிகவும் தகுதியுள்ளவ ரொருவரை நீரே தெரிந்தெடுத்து வைத்து விட்டுப் போகவேண்டும். அந்தப் பொறுப்பு உம்மைச் சேர்ந்ததாகும்" என்றார். அதற்குச் செட்டியார் உடன்பட்டுத் திருவாவடுதுறையிலுள்ள ஐயர் அவர்களைத் தமது ஸ்தானத்தில் அமர்த்தி விடுவதாகத் தமக்குள்ளேயே தீர்மானஞ் செய்துகொண்டார்.

ஸ்ரீ தியாகராஜ செட்டியார் தாம் ஏற்றுக்கொண்ட பொறுப்பை நிறைவேற்றக் கருதி உடனே திருவாவடு துறைக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்குப்போய் ஐயர் அவர்களிடம் தமது உள்ளக்கருத்தை வெளியிட, அவர் ஆதீனத்தை விட்டுப்பிரிய மனமில்லாமல் தமக்குக் கும்ப கோணம் காலேஜ் தமிழ்ப்போதகர் பதவி வேண்டா மென்று மறுத்தனராம். அப்பால் செட்டியார், "ஐயர் சொல்லுவதிருக்கட்டும், நாம் பண்டார சந்நிதிகள் அவர் களையே வேண்டிக்கொண்டு காரியத்தைச் சரிப்படுத்திக் கொள்ளுவோம்" என்று அவர்களிடம் விண்ணப்பஞ் செய்துகொள்ள அவர்களும், "ஐயரையோ நாம் பிரிவது? ஒருகாலும் நாம் அனுப்பமாட்டோம்" என்று வெகு கண்டிப்பாய்ப் பதில் சொன்னார்களாம். ஐயோ! பாவம்! செட்டியார் என் செய்வார்! திகைப்பு மேலிட்டவரானார். ஆயினும் இன்னும் ஒரு முறை கேட்டுப் பார்ப்போம் என்ற எண்ணம் மேலிட்டவராய்த் தக்க சமயம் பார்த்துப் பின்னுமொருமுறை பண்டார சந்நிதிகளின் மனதில் படும்படி சிற்சில சௌகரியங்களை யெடுத்துக் காட்டி ஐய ரைக் கும்பகோணம் காலேஜுக்கு அனுப்பச் சம்மதிக்கும் படிச் செய்து உடனே ஐயரைத் தம்முடன் கும்பகோணத் துக்கு அழைத்துவந்தார். கும்பகோணம் வந்து சேர்ந்த தும், செட்டியார் ஐயரை அப்போது காலேஜ் போத கர்களாயிருந்த ஸ்ரீ சாது சேஷையர் ஸ்ரீ ஆர். வி. சீனிவாஸ ஐயர் இவர்களிருவருக்கும் தாம் ஐயரை அழைத்து வந்திருக்கும் செய்தியைத் தெரிவிக்க, அவர் களிருவரும் ஐயருக்குத் தமிழிலுள்ள தேர்ச்சியையும்

அவர் தமிழ்ப் பாடஞ் சொல்லும் திறமையையும் பரீட்சித்தறிந்து ஐயர் காலேஜ் தலைமைப் போதகர் ஸ்தானத்தைப் பெறத் தகுதி யுடையாரரெனத் தீர்மானித்துத் தங்கள் அபிப்பிராயத்தைப் பிரின்ஸிபால் ராவ் பகதூர் டி. கோபாலராயரிடம் ஐயரை நேரில் அழைத்துச் சென்று தெரிவித்தார்கள். அவர் தாமும் சிறிது பரீட்சித்துப் பார்த்து ஐயர் அவர்கள் பலவிதத்திலும் தகுதி யுடையவரே யாவரெனத் தீர்மானித்து ஐயரைத் தியாகராஜ செட்டியார் ஸ்தானத்துக்குச் சிபார்சு செய்தார்கள். அச்சிபார்சை யனுசரித்து ஐயர் செட்டியாருக்குப் பதிலாகத் தலைமைத் தமிழ்ப் போதகராக நியமனம் பெற்றார். நமது ஐயர் செட்டியார் அவர்கள் தமக்குச் செய்த பேருதவியை இன்றைக்கும் ஞாபகத்தில் வைதுப் போற்றி வருகிறார். சென்னைத் திருவட்டீசுவரன் பேட்டையிலுள்ள தமது வீட்டுக்கு 'தியாகராஜ விலாஸ்' என்று பெயரிட்டிருப்பதே இதற்குச் சான்றாகும்.

இந்தச் சந்தர்பத்தில் ஒரு விஷயத்தை முக்கியமாய்க் குறிப்பிட விரும்புகிறோம். ஐயர் அவர்கள் தங்கள் முன் பாடல்களை எடுத்து வாசிப்பதையும் அவைகளுக்குப் பொருள் கூறுவதையும் பார்த்து வியந்த கும்பகோணம் காலேஜ் போதகர் ஸ்ரீ ஆர். வி. சீனிவாச ஐயர், ஐயரை நோக்கி 'நீரும் நானும் ஒரே ஆசிரியரிடம் வாசித்ததற்கிசை நீர் கும்பகோணம் காலேஜில் வகித்துவந்த ஸ்தானத்தை எனக்குக் கொடுத்துவிட்டுப் போதல் சால்புடைத்தாகும்' எனப் பொருள்படும்படி ஒரு பாடல் பாடும்படிக் கேட்டுக் கொள்ள, ஐயரவர்கள் ஐந்து நிமிஷத்துக்குள் மேலே குறிப்

பிடப்பட்டிருக்கும் பொருள்படும்படி பின்வரும் பாடலைச் சொன்னார் :—

வாய்ந்தபுகழ் படைத்திலங்கு மீனாட்சி
 சுந்தரநா வலவன் பாலே
ஏய்ந்ததமி ழாய்ந்தமுறைக் கியைவுறநீ
 யிதுகாறு மினிதின் மேய
ஆய்ந்தவள நகர்க்குடந்தைக் காலேஜி
 (ல்) நின்னிடமெற்களித்தனன்றே
வேய்ந்ததமிழ் முதற்புலமைத் தியாகரா
 ஜப்பெயர்கொள் மேன்மையோனே.

ஐயர் அவர்கள் கும்பகோணம் காலேஜ் தலைமைத் தமிழ்ப் போதகராக 1880-ம் வருஷம் பிப்பரவரி மாதத்தில் நியமனம் பெற்று வந்தார். அப்போது அவருக்கு வயது 25-க்கு மேலில்லை. அந்தக் காலேஜ் வகுப்புகளில் தமிழ்ப் பாடஞ் சொல்ல எவ்விதத்திலும் தகுதியுடையவரேயாவரென்று முன்னரே தெளியப்பட்டுப்போ யிருந்த தானாலும் அவர் காலேஜ் வகுப்பொன்றில் சொல்லிய முதல் பாடத்தை பிரின்ஸிபால் ராய்பகதூர் டி. கோபால ராயர் அவர்களும், காலேஜ் போதகர்களில் ஒருவராகிய ஸ்ரீ ஆர். வி. சீனிவாஸ ஐயரும் கூடவே யிருந்து கேட்டு மட்டற்ற சந்தோஷ மடைந்தார்கள். அவர்களே சந்தோஷமடைந்தார்களெனின், அவ்வகுப்பு மாணவர்கள் சந்தோஷ மடையக் கேட்பானேன்? ஐயர் அவர்களது திவ்விய சரித்திரக் குறிப்பை எனக்குத் தெரிந்தமட்டில் எழுதப் புகுந்துள்ள நான் அந்த வருஷத்தில் அந்தக் காலேஜ் ஹைஸ்கூல் ஐந்

தாவது கிளாஸில் (அதனை இப்போது பாரம் என்று வழங்குகிறார்கள்) மிஸ்டர் R. சக்கரவர்த்தி ஐயங்காரின்கீழ் வாசித்துக்கொண் டிருந்தேன். நான் அப்போது வயதிற் சிறியவனானாலும் புதியவராய் வந்திருக்கும் தலைமைத் தமிழ்ப் போதகர் பாடஞ் சொல்லுவதைக் கேட்க வேண்டு மென்ற ஆசை மேலிட்டவனாய், என் வகுப்பைவிட்டு வெளியேபோய் ஐயர் பாடஞ் சொல்லுவதைக் கேட்டு மெய்ம்மறந்து வகுப்புக்குப் போகவேண்டுமென்ற ஞாப கமே யில்லாமல் அங்கேயே நின்றுவிட்டேன். ஐயர் பாடல் களை எடுத்து அச்சமயம் வாசித்த இன்பம் சொல்லுந் தர மன்று. அவர் பாடல்களிலிருந்து தேனொழுகித் தித்திக்க வாசித்தார்கள்.

அதுமுதல் இடைவிடாமல் 23-வருஷ காலம் நம் ஐயர் அந்தக் காலேஜிலேயே தமிழ்ப்போதகராயிருந்து வந் தார். இடையே ஒரு சமயம் அவரைச் சென்னைப் பிரெஸி டென்ஸி காலேஜுக்கு வரவழைத்துக்கொண்டு விட வேண்டுமென்று அந்தக் காலேஜ் போதகர்களிலொருவரும் தமிழில் நல்ல தேர்ச்சியுள்ளவரும் ஐயரிடம் விசேஷ மதிப்பு வைத்திருந்தவரும் ஆகிய ராய்பகதூர் பூண்டி ரங்க நாத முதலியார் அவர்கள் முயற்சி செய்ததுண்டு. ஆயி னும், அச்சமயம் பிரெஸிடென்ஸி காலேஜுக்குப் போவ தைக் குடும்ப சௌகரியங்களைக் கருதி ஐயர் விரும்பவில்லை; ஆனால் எவ்வளவு காலந்தான் அவர் தமிழ்ப் போதகரா யிருந்துவரும் ஏகதேச உரிமையைக் கும்பகோணம் காலேஜ் ஒன்றே பெற்றிருக்கக் கூடும். 1903-ஆம் வரு ஷத்தில் அச்சமயம் கல்வி இலாகாத் தலைவரா யிருந்த

மிஸ்டர் ஸ்டூவர்ட், ஐயரை அக்காலேஜை விட்டுப் பிரெஸிடென்ஸி காலேஜுக்கு மாற்றினார். ஏனெனில் மிஸ்டர் ஸ்டூவர்ட் தாம் கும்பகோணம் காலேஜ் பிரின்ஸிபாலா யிருந்தபோதே ஐயரின் திறமையை விசேஷமாய் அறிந்து வைத்திருந்தவர், அவர் ஐயரைச் சென்னைப் பிரெஸிடென்ஸி காலேஜில் தமிழ்ப் போதகராய் வைத்துப் பார்க்க வேண்டுமென்ற ஆசை மேலிட்டவராயிருந்தது பற்றித் தக்க சமயம் வாய்ப்பதை எதிர்பார்த்துக்கொண்டேயிருந்து 1903-ல் ஐயரை அந்தக் காலேஜுக்கு மாற்றினார்.

1903-ல் ஐயர் சென்னைப் பிரெஸிடென்ஸி காலேஜுக்கு மாற்றப்பட்டபோது ராய்பகதூர் அரங்கநாத முதலியார் அவர்கள் அவரை, "பிரஸிடென்ஸி காலேஜுக்கு வந்துவிடுங்கள், நான் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன்" என்று முன்னொருமுறை வற்புறுத்திக் கேட்டுக்கொண்ட சமயத்திலிருந்த குடும்ப அசௌகரியம் அவருக்கிருக்கவில்லை. ஏனெனில் கும்பகோணத்திலேயே வாசஞ்செய்து காலங்கழிப்பதை விரும்பிய அவரது தந்தையார் அதற்குள் காலமாய்விட்டார்; தவிரவும் தாம் மேற்கொண்டிருந்த புத்தகப் பதிப்பு வேலைக்குச் சென்னைவாசம் சௌகரியமா யிருக்குமென்றும் ஐயருடைய மனத்திற்பட்டது. அதுபற்றி ஐயர் அவர்கள் 1903-ஆம் வருஷக்கடைசியில் பிரெஸிடென்ஸி காலேஜுக்குத் தாம் மாற்றப்பட்டிருந்த உத்தரவை யேற்றுக்கொண்டவராய் வந்து சேர்ந்தார். அந்தக் காலேஜில் அவர் சில வருஷங்களே தமிழ்ப் போதகரா யிருந்தாரென்று சொல்லுவ

தற்கில்லை ; அதிலும் அவர் 16-வருஷம் வேலைபார்த்தார். ஆகவே அவர் கும்பகோணம் காலேஜிலும் பிரெஸிடென்ஸிக் காலேஜிலுமாக 39-வருஷகாலம் போதகராயிருந்து வந்தது சாதாரணமாய் நிகழும் சம்பவமன்று. அந்த 39 வருஷங்களின் பின்பாகத்தில் தமிழ்ப் பாடஞ் சொல்லுவதிலுள்ள ஊக்கம் அவருக்குக் குறைந்து வரவுமில்லை. அவர் செய்துவந்த நூலாராய்ச்சி காரணமாக அவர் பாடஞ் சொல்வது விசேஷ சோபிதத்தை யடைந்து வந்தது. அவ்விரண்டு காலேஜ்களிலும் அவர் தமிழ் வகுப்பு மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லும் திறமையைப்பற்றி நான் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அந்தக் காலத்தில் கும்பகோணம், பிரஸிடென்ஸி காலேஜ்களில் ஆங்கிலப் போதகர்களா யிருந்துவந்த ராய்பகதூர் கோபால ராவ், மிஸ்டர் ஸ்டூவர்ட், மிஸ்டர் பில்டர்பெக், மிஸ்டர் ஸ்டோன், ராவ்பகதூர் சாது சேஷையர், மிஸ்டர் ஹென்ஸ்மன் ஆகிய இவர்கள் எவ்வளவு திறமையுடன் ஆங்கிலம் போதிப்பார்களோ அவ்வளவு திறமை காட்டி ஐயரும் தமிழ்ப் பாடஞ் சொல்லுவார். அவருடைய தமிழ் வகுப்புக்களில் பிள்ளைகள் ஒழுங்குத்தப்பான செய்கைகளை ஒருபொழுதும் செய்யமாட்டார்கள். சித்திரப்பாவையைப் போல அடங்கியிருந்து பாடங்கேட்பார்கள். அவர் பாடஞ் சொல்லுவதை நிறுத்துகிறாரேயென்று சில சமயங்களில் வருந்துவதுமுண்டு. அவர் பாடஞ் சொல்லும்போது பிள்ளைகள்,

"செவிக்குணவில்லாத போழ்து
சிறிது வயிற்றுக்கு மீயப் படும்"

என்ற ஆன்ரோர் மொழிக்கே இலக்கா யிருப்பார்கள். சுருங்கச் சொல்லுமிடத்து, அவருடைய மாணுக்கர்கள் தாங்கள் செய்த தவத்தின் பயனுகத் தங்களுக்குக் கிடைத்த தமிழ்த் தெய்வம் என அவரைக் கொண்டாடுவது வழக்கம்.

மகாமகோபாத்தியாய ஐயர் அவர்கள் 1919-ம் வருஷம் ஏப்பிரல் மாதத்தில் வேலையை விட்டு நீங்கினுர். ஆனுலும் காலேஜ்களில் தமிழ்ப்பாடஞ் சொல்லும் வேலே அதனுேடு அவரைவிட்டு நீங்கவில்லே. அவர் பென்ஷன் பெற்று வேறு கவலேயின்றி நூலாராய்ச்சி செய்வதும் பழையதமிழ் நூல்களேப் பதிப்பிப்பதுமாயிருந்து வருகையில் (இப்போது செட்டிநாட்டு ராஜாவாயும்) அண்ணுமலே யூனிவர்ஸிடியின் ஸ்தாபகராயும், அந்த யூனிவர்ஸிடியின் புரோ-சான்ஸலராயுமுள்ள ராஜா ஸர் எஸ். ஆர். எம். எம். ஏ. அண்ணுமலேச் செட்டியார் அவர்கள் தாம் சிதம்பரத்தில் 1924-ஆம் வருஷத்தில் ஸ்தாபித்த தமிழ்க் காலேஜுக்கு நம் ஐயரைப் பிரின்ஸிபாலாக நியமித்தார். செட்டியார் அவர்கள் விரும்பிச்செய்த நியமனத்தை மறுப்பதற் கில்லாமல் அப்பதவியை நம் ஐயர் 3-வருஷகாலம் வகித்துவிட்டு இனியேனும் ஓய்வெடுத்துக்கொண்டு சுகஜீவியா யிருப்போமென்று சென்னேக்குத் திரும்பினுர். அவர் சுகஜீவியா யிருப்பதென்பதற்கு எப்போதும் நூலாராய்ச்சி செய்து கொண்டிருப்பது என்று நாம் பொருள் செய்துகொள்ள வேண்டும். ஏனெனில், இந்தத் தள்ளாத பருவத்திலும் அவர் நூல்களே ஆராய்வதிலேயே கண்ணுங்கருத்துமா யிருந்து வருகிருர். பிறருடன் பேசுவதையும் வீண்காலப்போக்காய் மதிப்பார்.

மகாமகோபாத்தியாய ஐயர் அவர்கள் கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்போதகராய் நியமனம் பெற்றுச் சேர்ந்த போதே பழைய தமிழ் நூல்களின் ஆராய்ச்சிக்கு முகூர்த்தம் செய்யப்பட்டு விட்டதாக நான் சொல்லுவேன். ஏனெனில் அவர் அந்தக் காலேஜ் போதகராயிருந்து வருகையில் தமிழ்ப்பெருங்காப்பியங்களாகிய சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை இவைகளையும், வேறு சங்க நூல்களையும் ஆராய்ச்சி செய்து ஏட்டுப்பிரதிகளிலிருந்து பிழையற வெடுத்தெழுதி தமிழுலகத்துக்குப் பயன்படும்படி அச்சிடுவிக்கும் பொறுப்பை மேற்கொண்டார். முதலில் அவர் சீவகசிந்தாமணியை அச்சிடத் தொடங்கினார். அவ்வேலையைச் செய்வதில் அவருக்கு ஊக்கம்பிறக்கும்படி செய்தவர் அந்தநாளில் கும்பகோணம் டிஸ்டிரிக்ட் முன்சீப்பாயிருந்தவரும் தமிழில் விசேஷ அபிமானமுள்ளவருமான சேலம் ராமசாமி முதலியார் அவர்களாவார். அவர் தாம் முதலில் தம்மிடமிருந்த சீவகசிந்தாமணி ஏட்டுப்பிரதியை ஐயர் அவர்களுக்குத் தந்து அதனைத் தமக்குப் பாடஞ் சொல்ல வெண்டுமென்று கேட்டுகொண்டு அவரைக் கூட வைத்துக்கொண்டு அதனைப்படித்தவர். முதலியார் அவர்கள் தாம் கும்பகோணத்தில் வகித்துவந்த டிஸ்டிரிகட் முன்சீப்பதவியை விட்டுவிட்டு மறுபடியும் வக்கீல் தொழிலுக்குத் திரும்பிவிடும் யோசனையோடு அவ்வூரைவிட்டுப் போகும்போது "சீவகசிந்தாமணியை நீங்கள் பிழையறச் சோதித்து அச்சிற் பதிப்பிக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். முதலியார் செய்துகொண்ட வேண்டுகோள் வீண்போக வில்லை. ஐயர் அவர்கள் அதனைப் பதி

ப்பிப்பதில் ஊக்கஞ்செலுத்தி உழைப்பாராயினர். அதனை அச்சிட்டு வெளியிட அவர்பட்ட சிரமம் சொல்லுந்தரமன்று. உள்ள படியே ஏட்டுப்பிரதிகளை வைத்துக் கொண்டு பழைய நூலொன்றைச் சோதித்துப் பெயர்த் தெழுதிப் போதிய குறிப்புகளுடன் அச்சிடுவிக்கும் சிரமம் பெரிதாகும். அப்படியிருக்க, ஐயர் மேற்கொண்ட முயற்சி ஒழுங்காய் முடிவுபெறு வண்ணம் இடையே இரண்டொருவர் தடையாய் நின்றதுண்டு. அவர்கள் ஐயர் அவர்களுடைய பெருமுயற்சியாகிய பெருங்காற்றில் பஞ்சாய்ப்பறந்து போயினர். **சீவகசிந்தாமணியும்** 1887-ஆம் வருஷத்தில் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியருரையுடன் ஐயரால் பரிசோதிக்கப்பட்டபடி அச்சாகி வெளிவந்தது.

சீவகசிந்தாமணியின் முதற்பதிப்பு வெளி வந்ததும், தமிழ் உலகம் முற்றுமே அதனைப் புகழ்ந்து பேசத் தலைப்பட்டது. ஸ்ரீ தியாகராஜ செட்டியாருடைய உள்ளம் பூரித்தது. அப்பழைய நூலை ஏட்டுப் பிரதிகளை வைத்துக்கொண்டு சோதித்து அச்சிற் பதிப்பிக்கும்படி ஐயர் அவர்களைப் பன்முறையும் வேண்டிக்கொண்ட சேலம் ராமசாமி முதலியார் அது வெளிவந்தவுடன் அடங்கா மகிழ்ச்சி அடைந்தனர்; திருவாவடுதுறை யாதீனத் தலைவராகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரின் மனப்பான்மை அச்சமயம் இவ்விதமா யிருந்திருக்குமென்று என்னாற் சொல்லவியலாது. தமிழ்ப்பாஷையில் பற்றுள்ளவர்களும் அதன் அருமைகளைத் தெரிந்தவர்களும்,

ஆடினார் சிலர்சிலர் ஐயர் வான்புகழ்
பாடினார் சிலர்சிலர் பரிந்து சேணெறி
கூடினார் சிலர்சிலர் முகமன் கூறுவான்
ஓடினார் சிலர்சிலர் உவகை நீடினார்

என்று சொல்லும்படி சீவகசிந்தாமணியையும் அதனை அச்சிட்டுதவிய ஐயரையும் போற்றிப் பேசினார்கள்; ஐயருடைய பெயர் நாற்றிசையும் பரவியது.

சிந்தாமணியை அச்சிடுவதற்குக் குறைந்தது ஐந்து வருஷங்கள் ஐயர் அல்லும்பகலு முழைத்திருப்பார். அவர் கும்பகோணம் காலேஜ் வந்து சேர்ந்த ஏழாவது வருஷத்தில் அது வெளியாயிற்றென்றால் அதற்குமுன் ஐந்து வருஷங்களேனும் அவர் அதனை அச்சுக்குச் சித்தம் செய்து பதிப்பிக்கப் பிடித்திருக்க வேண்டும். இப்படி அல்லும் பகலு முழைத்து சிந்தாமணியை அச்சிற் பதித்த ஐயரை சில அற்பர்கள், யாதொரு தக்க காரணமுமின்றி வீணுக்கு இழித்துப் பேசினார்கள். அப்போது ஐயர் தமக்குண்டான மன வேதனையை சகிக்க மாட்டாதவராய்ச் சுவாமி மலையில் (திருவேரகத்தில்) திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளைத் தியானித்துப் பின்வரும் பாடல்களைச் சொன்னார்:—

மலர்கொண்டுனையே வழிப்பட்டிடுவேன்
அலர்கொண்டு விளங் கலைவாவிகள் சூழ்க்
கலர்கண்டறியாக் கவி னேரக! வெற்
பலர்கண் டிகழும்படி வைத்ததெனை?

தனைதீஞ் சுவைநற் றமிழ் பாடியுளம்
பதையா துறையும்படி வைத்தருள்வாய்
உத யாதிபனே ரொளியா யளியாய்
சிதையா துறையுந் திருவேரகனே.

அதேமாதிரி வருஷக்கணக்காய் வேலைசெய்தே சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் வெளி யிட்டார். 1887-லிருந்து ஐந்து வருஷங்கள் கழிந்தபின், அதாவது 1892-ல் சிலப்பதிகாரம் அச்சாகி வெளிவந்தது. அதற்குப் பிறகு ஆறு வருஷங்கள் கழித்து, அதாவது 1898-ல் மணிமேகலை வெளியாயிற்று. மூன்று பெருங் காப்பிய நூல்களையும் வைத்துக்கொண்டு ஓய்வொழிவின்றி ஏறக்குறைய 16-வருஷங்கள் ஆராய்ச்சி செய்த ஐயரின் தளரா ஊக்கத்தை யார்தான் பாராட்ட மாட்டார்கள்? அவர் ஆராய்ச்சிக்கு வேண்டிய ஏட்டுப் பிரதிகள் எளிதிற் கிடைத்தனவா? இல்லை. அவருக்குதவக் கூடியனவாயிருந்த ஏட்டுப் பிரதிகள் அங்கங்கே சிலரிடத்திலிருந்தன. அவைகளை வைத்திருந்தவர்கள் அவற்றைக் கொடுத்துதவப் பிரியமில்லாதவர்களாயிருந்தார்கள். கேட்டவுடன் கொடுத்தார்களில்லை; அவர்களிடம் நல்ல வார்த்தை சொல்லியும், சிப்பார்சுகள் கொண்டு போயும் நம் ஐயர், அவர்களிடமுள்ள ஏட்டுப் பிரதிகளைப் பெறுவார். அவர் ஏட்டுப் பிரதிகள் சேகரிக்கக் கும்பகோணம் காலேஜ் கோடை விடுமுறைக் காலத்திற் போவது வழக்கம், அப்போது அவர் இன்றைக்கிருந்த ஊரில் நாளைக்கிருக்கமாட்டார். அக்காலத்தில் இப்போதுள்ள பிரயாண வசதிகளுமில்லை. பல அசௌகரியங்களுக்கும் ஈடுகொடுத்துக் கொண்டுதான் ஊர்விட்டு ஊர்ப்

பிரயாணஞ் செய்யவேண்டும், சிற்சில சமயங்களில் சென்ற இடங்களில் சாப்பாடுங் கிடையாது. இவைபோன்ற அசௌகரியங்களை யெல்லாம் அனுபவித்துக்கொண்டு ஐயர் ஏட்டுப் பிரதிகள் சேகரித்து வருவார். கும்பகோணம் காலேஜில் ஐயருக்குப் பிற்காலம் தமிழ்ப்பண்டிதராயிருந்த ஸ்ரீமான் ம. வீ. ராமானுஜாசாரியார் (தமிழ் மகாபாரதப் பதிப்பாசிரியர்) "நடுக்காட்டில் ஒரு ஜைன மடமிருக்கிறது; அதனில் ஏடுகள் கிடைக்குமென்று யாரேனும் சொன்னால் அங்கே ஐயர் அவர்கள் போய் வருவார்கள்" என்று ஒரு சமயம் சொன்னார். அவர் சொன்னது உள்ளபடி பொருந்தும்.

சீவகசிந்தாமணியைப் பிழைகளின்றிச் சோதித்துப் பார்த்து அச்சிட ஐயர் பட்ட சிரமத்தைவிடச் சிலப்பதிகாரத்தைச் சோதித்து அச்சிட அவர் பட்ட சிரமமதிகம். மணிமேகலையில் பௌத்தமத சம்பந்தமான விஷயங்கள் பல சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றைத் தமிழ் நூல்களின் உதவியைக்கொண்டு தெரிந்து கொள்ள வழியில்லாமல் ஐயர் சிரமப்பட்டபோது கொழும்பு நகரத்து ஆனரபிள் பொ. குமாரசாமி முதலியாரவர்களும் ஆங்கிலமும் சமஸ்கிருதமும் ஒருங்கேயுணர்ந்தவரும், கும்பகோணம் காலேஜிலும் ராஜமகேந்திரபுரம் காலேஜிலும் முதலில் சாஸ்திர போதகராயிருந்து விட்டுப் பிற் காலத்தில் பிரெஸிடென்ஸி காலேஜில் சமஸ்கிருத போதகாசிரியர் ஸ்தானத்தை வகித்த புரொபெஸர் எம். ரங்காச்சாரியார் அவர்களும் அவருக்கு ஒரு பெரிய ஊன்றுகோலாய்க் கிடைத்தார்கள். ரங்காச்சாரியார் அவர்கள் பௌத்தமத சம்பிரதாய

விஷயங்களைப் பௌத்தமத நூல்களில் சொல்லியிருந்தபடி ஐயருக்கு விளங்க வைத்தார்கள். நம் ஐயர் மணிமேகலைப் புத்தகத்தின் முகவுரையில் பின் வருமாறு கூறியிருக்கிறார்: 'கிடைத்த பிரதிகளைக்கொண்டு ஒப்பு நோக்கி ஆராய்ந்து வந்தபொழுது எழுதுவோர்கள் பிரதிகளில் செய்திருந்த வேறுபாடுகளாலும், இது பௌத்த சமயக் காப்பியமாதலால் அச்சமயக் கொள்கைகளைக் கூறும் பாகங்களையெல்லாம் எளிதில் தெரிந்து கொள்ளல் கூடாமையாலும், அவற்றை ஒழுங்காகப் புலப்படுத்தும் பழைய தமிழ்ப் பௌத்த நூல்கள் பண்டைக் காலத்திலிருந்தும், பாதுகாப்போரின்மையால் இக்காலத்தில் இறந்தொழிந்தமையாலும், அக் கொள்கைகளை விளங்கச் சொல்லுவோர் அகப்படாமையாலும், பிழைகளைப் பிழைகளென நிச்சயித்துக் களைந்து திருத்தமான பாடங்களைத் தெரிந்து கொள்வதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியும் கழித்த காலமும் அடைந்த வருத்தமும் அளவுபடுவனவல்ல.

"பழைய செந்தமிழ் நூல்பரிபாலகரும் இவ்வாராய்ச்சியால் எனக்கு மனச்சோர் வுண்டாகாத வண்ணம் அடிக்கடி ஊக்கமளித்து வருபவரும் கொழும்பு நகரத்துப் பிரபு சிகாமணியுமாகிய ஆனரபில் பொ. குமாரசாமி முதலியாரவர்கள் இந்நூலிற் சிற்சில விடங்களில் முன்னம் நிகழ்ந்த ஐயங்களை நீக்கிக் கொள்ளுதற் பொருட்டு யான் எழுதிக் கேட்ட வினாக்களுக்கு இலங்கையிலுள்ள பௌத்த வித்தியோதய பாடசாலைத் தலைவராகிய ஸ்ரீ சுமங்களர் அவர்களைக்கொண்டு விடைகள் எழுதுவித்து அனுப்பிப் பேருதவி செய்து வந்தார்கள்.

"இப்படி யிருக்கையில் ஹிந்து தேச பாஷைகளிலும், ஆங்கிலேய பாஷையிலும் மிகப் பயிற்சியடைந்து விளங்கும் மஹாஹா ஸ்ரீமத் உ. வே. அரங்காசாரியார் அவர்கள் M. A., பௌத்தசமய நூல்களிலும் பாண்டித்திய முள்ளவர்களென அறிந்து கொண்டு உரியகாலங்களில் அவர்களிடத்துச் சென்று வினவிவந்தேன்; வருகையில் முன்பு எனக்கிருந்த ஐயங்களிற் பெரும்பாலன நீங்கின. நீங்கவே இந் நூலைப் பரிசோதித்தலில் என்மனம் ஊக்கம் பெற்றது. ஆச்சாரியார் அவர்களுடைய பேருதவி யில்லாதிருப்பின் மணிமேகலையில் வந்துள்ள துடிதலோகம், பாரமிதை, அரூபப்பிரமர், உரூபப்பிரமர் முதலிய சொற்களுக்குங் கூட உள்ளவாறே பொருள் கொள்ளுதல் எனக்கு மிக அரிதாயிருந் திருக்கும். தமக்குரிய அரிய வேலைகள் பலவிருந்தும், பழைய இத்தமிழ் நூல் வெளியேவந்து உலாவுவதையே பயனாகக் கருதி, யான் செல்லும் காலங்கள்தோறும் சிறிதும் சலிப்பின்றி அவர்கள் செய்துவந்த பேருதவி ஒரு பொழுதும் மறக்கற் பாலதன்று; அம்மகோபகாரி விஷயத்தில் இத் தமிழ்நாட்டினேமாகிய நாமெல்லாம் நன்றி பாராட்டுதற்கு உரியவர்களாக விருக்கிறோம்"

என்று ஐயர் அவர்கள் மணிமேகலையின் முகவுரையில் எழுதியிருப்பதனால் அவர் அப் புத்தகத்தை அச்சிட்டு வெளியிடுவதில் பட்ட சிரமத்தை அறியலாம்.

மேலே சொல்லிய மூன்று நூல்களையும் அவர் அச்சிற் பதித்திருக்கிறார். சிந்தாமணியை அச்சிட்ட ஒரு வருஷத்

துக்குள் பத்துப்பாட்டு வெளியிடப்பட்டது. அதன் மூலப் பிரதி கிடைக்கவில்லை. உரையை வைத்துக் கொண்டு மூலத்தை ஐயர் உருவாக்கினர். அதுவெகு சிரமசாத்திய மான வேலையென்றும், ஐயரையன்றி ஏனையோருக்கு மூலத்தை உருவாக்க சாத்தியப் பட்டிராதென்றும் திட்ட மாய்ச் சொல்லலாம். 1889-ல் பத்துப்பாட்டு வெளிவந்த பின்னர் 1894-ல் புற நானூறு வெளியாயிற்று. இச்சங்க நூல்களை யன்றிப் பிற்காலத்து இலக்கிய நூல்கள் சிலவும் வெளிவந்துள்ளன. ஐயர் அவர்கள் வெளியிட்டுள்ள புத்த கங்க ளிவையென்பது ஐயர் பிரசுரங்களின் பட்டியைப் பார்த்தால் தெரியவரும்.

சுருங்கச் சொல்லுமிடத்து ஏட்டுப் பிரதிகளில் சிதைந் தும் உருமாறியும் அடிகளை மாற்றப்பட்டும் கிடக்கும் பாடல்களை ஒத்துப் பார்த்து ஆக்கியோன் பாடல் இம்மா திரி தானிருக்க வேண்டுமென்று பெயர்த்தெடுத் தெழுது வதிலும், அவைகளுக் கெழுதப் பட்டிருக்கும் உரைகளின் நுட்பத்தை யறிந்து அவைகளை விளங்கவைப்பதிலும் மேற் கோள்கள் இன்ன நூல்களிலிருந்து எடுக்கப்பட் டிருக்கின் றனவென்று கண்டு பிடிப்பதிலும், உள்ள கஷ்டம் சாமானி யமானதன்று; பழைய நூல் ஆராய்ச்சியில் பழகியவர்க ளுக்கே அக்கஷ்டமித் தன்மையதாகு மென்பது தெரிய வரும்.

இப்படி ஐயர் கஷ்டப்பட்டு ஆராய்ச்சி செய்வதும் ஆராய்ச்சி செய்து முடித்த நூல்களை அச்சிடுவதுமாயிருந்த காலத்தில் அவருக்கு உற்ற பற்றுக் கோடாயிருந்து வந்த

வர்கள் ஒருவர் பின் ஒருவராய்க் காலமாயினர். 1888-ல் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் சிவபதமடைந்தனர். அப்பால் சேலம் ராமசாமி முதலியார் அவர்கள் காலஞ்சென்றார். அவருக்குப் பிறகு 1893-ல் ஐயரின் தந்தையார் ஸ்ரீ வேங்கட சுப்பையர் காலமானார். அப்போது ஐயரவர்கள் தமது தந்தையாரின் பிரிவை ஆற்றாது பின்வரும் இரங்கற்பாக்களைச் சொல்லிப் பிரலாபித்தார்:—

மெய்யார நீறணிந்து விழிமணிமாலிகை பூண்டு
கய்யார மலரேந்திக் கசிந்துருகித் தினந்தோறு (ம்)
மய்யாரும் மணிமிடற்று மாதேவை யருச்சிக்கும்
அய்யா வென்னய்யா வென்னய்யா வெங்கதன்றனையே.

விண்ணாறு தலைமடுத்த வேதியன்பால் அன்பினொடுங்
கண்ணாறு புனல்பெருகக் கசிந்துருகித் துதிகள்பல
பண்ணாறும் படிநவிலும் பயன்படைத்தோ யெனதுமனப்
புண்ணாறும் படியொரு காற்புகுந்து முகங்காட்டாயோ.

விளங்குறு நின்னுடனிருத்தல் வீட்டின்ப மென்றிருந்தேன்
களங்குறு மற்றெனைத் துறத்தல் காணஃதென் றகன்றனைபால்
அளங்குறு மென்றரும் பானேனல்லலெ வரறிந்திடுவர்
துளங்குறு நல்லொழுக்க முடைச்சுகுண கருணாநிதியே.

பற்றலெங்கே செந்தமிழைப்பற்றிக் கற்றோர் பலர்பால்
துற்றலெங்கே மீனாக்ஷிசுந்தர னல்லாரியன்பாற்
கற்றலெங்கே கற்றுக்கவலை யொரீஇயவ்வழியே
நிற்றலெங்கே யின்றுவரை நீயருள் செய்யாவிடினே.

நின்கடமை யெல்லாம் நினைந்தியற்றிநீ பிரிந்தாய்
என்கடமை யொன்று மியற்றாதிருந் தொழிந்தேன்

வன்கண்ண ரென்போல்வார் மற்றெவரே மாதேவன்
தன்கமல பாதம் தலைகொள்ளுஞ் சாம்பவனே.

அத்தா நினது பிரிவல்லற் கடலழுத்திப்
பித்தாக்கி யென்னைப் பெரிதும் வருத்துறுமால்
எத்தானஞ் சென்று யிதுவோ நின்றண்ணளியே
சத்தான வின்பமுற சங்கீத சாகரமே.

அன்போடு சிவபூசை யாற்றுமிடத் தொடுநீ
இன்போடு பாடியிருக்கு மிடமுந் தமியேன்
துன்போடும் படிவார்த்தை சொல்லுமிடத்தானுமந்தோ
என்போடு முள்ளுருக வென்னை வருத்துறுமால்

அதேவருஷத்தில் ராய்பகதூர் பூண்டி ரங்கநாத முதலியார் அவர்களும் காலஞ்சென்றார்கள். இவர்கள் காலஞ் சென்றதனுல் தமக்கு அப்போதப்போ துண்டான ஆற்றுத் துயரத்தையும் சகித்தவராகவே ஐயர் அவர்கள் தாம் மேற் கொண்ட ஆராய்ச்சி வேலையையும், புத்தகப் பதிப்பு வேலையையும் நடத்தி வந்தார்.

ஐயரவர்கள் ஆராய்ச்சி செய்து அச்சிட்டுக் கொடுத்துள்ள நூல்களைப்பற்றி இதுவரையிற் பொதுவாய்ப் பேசினேன். அவர் செய்துவந்துள்ள வேலையைச் சிறப்பித்துக் கூறுமிடத்து, தமிழ் மாதுக்கு இனி என்றுமே சிந்தியும் உதிர்ந்தும் போகா மலிருக்கக்கூடிய சிந்தாமணி யென்னும் ரத்தினபரணத்தை முதலிற் செய்து அவள் தலையணியாக அமையவைத்தார் என்பேன்; மணிமேகலையைப் பழுது பார்த்து அவள் இடையை அலங்கரிக்கும் மேகலாபரணமாக அவளுக்குப் புனைந்துள்ளார் என்பேன்; சிலப்பதிகார

மென்பது அம்மாதுக்கு அவர் புதுப்பித்து அணிவித்திருக்கும் பாதச்சிலம் பென்பேன்.

நம் ஐயர் திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக விளங்கிவந்த சொற்ப காலத்திலேயே அவரை இத்தமிழ் நாட்டுப் புலவர்கள் ஒரு பெரிய வித்துவானாய் மதிக்கத் தலைப்பட்டு விட்டார்கள். அவர்களைப்போலவே அவரிடம் தென்னாட்டு ஜமீன்தார்களும், காலஞ்சென்ற ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடன் அவர் மதுரை கும்பாபிஷேகத்துக்குப் போயிருந்த சமயம் முதல், மதிப்பு வைக்கத் தலைப்பட்டார்கள். தேசிகர் அவர்களுடன் ஐயர் போயிருந்த போது அவருடைய தமிழ்ப்புலமையைப் பாண்டி நாட்டு ஜமீன்தார்களும் கண்டு வியந்தார்கள். அவர்கள் அவருக்கு விசேஷமாய் அறிமுகமுமானார்கள். அப்பால் பழைய எட்டுப் பிரதிகள் தேடிவரச் சென்று வந்தபோதும் தமிழ் நாட்டில் ஐயரின் பெயர் வெகு பிரபலமாயிற்று. இத்தென்னிந்தியாவைச் சேர்ந்த தமிழ் நாட்டில் மட்டுமேயன்றி, ஸிலோன் நாட்டைச் சேர்ந்த யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் அவர் பெயரும் புகழும் பரவின. ஸிலோன் வாசிகளான ஸர் P. ராமநாதம், ஸர் P. அருணாசலம், ஆனரபில் மிஸ்டர் குமாரசாமி முதலியார் இவர்களும், வேறு சிலரும் ஐயரையும் அவர் அச்சிட்டுள்ள நூல்களையும் விசேஷமாய்ப் பாராட்டினார்கள். ஐரோப்பியர்களில் டாக்டர் போப்பும், மான்ஷியர் ஜூலியன் வின்ஸனும் ஐயரிடம் பெருமதிப்பு வைத்தவர்கள். உண்மையிலே ஐயரிடம் பெரு மதிப்பு வைத்திருந்தவர்களும் வைத்திருப்போரும் பலராவர். அப்படிப் பெரு மதிப்பு வைத்திருந்தவர்களில்

அவருக்குத் தம்மாலியன்ற பொருளுதவியைச் செய்தவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் போஷகராயிருந்த ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவராவார். "மணிமேகலையைக் கவலையின்றி ஆராய்ந்து பதிப்பித்து வெளிப்படுத்துதற்குப் பொருளுதவி செய்த பாலவனத்தம் ஜமீன்தாரவர்களாகிய ராமநாதபுரம் ம-ா-ா-ஸ்ரீ பொ. பாண்டித்துரைத் தேவரவர்களுடைய தண்ணளியும் பெருந் தகைமையும் ஒரு பொழுதும் மறக்கற்பாலன அல்ல; மிகவும் பாராட்டற்பாலன" என்று நமது ஐயர் அவர்கள் மணிமேகலையின் முகவுரையில் எழுதி யிருப்பதைக் காண்க.

ஒரு சமயம் மதுரை அட்வோகேட் ம-ா-ா-ஸ்ரீ T. C. சீனிவாஸ அய்யங்காரின் பெரு முயற்சியால் பொருளாதரவு கிடைத்ததுண்டு. ஐயருக்குச் செய்யப்பட்ட பொருளுதவியைப்பற்றிப் பேசுகையில் இச்சென்னைக் கவர்ன்மெண்டார் அவருக்குச் செய்த பொருளுதவி குறிப்பிடப்பட வேண்டியதவசியமே. ஆனால் அது ரூ. 1000-க்கு மேற்போகவில்லை யாகையால், அதனைப் பெரிதும் பாராட்ட இயலவில்லை. அந்த ரூ. 1000 சொற்பகாலம் வருஷந்தோறும் கொடுக்கப்பட்டு வந்திருக்கலாம். அப்படிக் கவர்ன்மெண்டார் கொடுத்து வந்திருப்பார்களானால், அது அவருக்குக் கவர்ன்மெண்டால் செய்யப்பட்ட பேருதவியாயிருந்திருக்கும்.

தற்காலம் ஐயருக்கு அப்போதப்போது நூல்களின் பதிப்புக்காகப் பொருளுதவி செய்து வருபவர் திருப்பனந்தாள் ஆதீனத் தலைவராகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத்

தம்பிரான் அவர்கள் ஆவர். இந்த வருஷம் ஜனவரிமாதக் கடைசியில் கும்பகோணம் 'காலேஜ் வைரஜூபிலிக்' கொண்டாட்டம் நடந்தேறியபோது ஐயர் அவர்களின் உருவப் படமொன்று அந்தக் காலேஜில் திறந்து வைக்கப்பட்டது. அது ஸ்ரீலஸ்ரீ சாமிநாதத் தம்பிரான் அவர்கள் செய்தனுப்பிய படமேயாகும்.

அன்றியும் திருவாவடுதுறை ஆதீனத்தின் உதவி என்றென்றைக்கும் அவருக்கு இருந்துவந்திருக்கிறது. திருவாவடுதுறைப் பண்டார சந்நிதி யவர்களைப்பற்றி மாயூரம் முன்சீப்பாகவிருந்த தமிழ் வித்துவான் ஸ்ரீ வேதநாயகம் பிள்ளையவர்கள் சொன்ன பல பாடல்களுள் ஒன்றாகிய,

" தடையில் கொடைசுப்பிரமணி
 யையகிற் சார்ந்தவர்கொள்,
கொடையை அவர் சொலவேண்டுங்
 கொலோ அவர் குக்கிசொலும்,
இடைசொலுங்கண் டமூங்காதுஞ்
 சொலுமிறு மாப்புடைய
நடைசொலுங் கையிற் குடைசொலும்
 வேறென்ன நாம் சொல்வதே "

என்ற பாடலுக்கு மதுரையில் கூடியிருந்த பெரிய சபையொன்றில் பொருள் கூறிவரும்போது நம் ஐயர் அப் பாடலிற் சொல்லியுள்ள பல விஷயங்களுக்கும் தாமே இலக்காவதாக, அதாவது, அவ்விஷயங்கள் பலவும் தமக்கு ஒக்கும் என்பதாகச் சொன்னதே அதற்குச் சான்றாகும்.

நம் ஐயரைப்பற்றி இதனினும் விஸ்தாரமாக எழுதலாம். ஆயினும் அவரைப்பற்றி நான் எழுதப் புகுந்த இந்த வியாசத்தை இன்னும் இரண்டொரு விஷயங்களைக் குறிப்பிட்டுவிட்டுப் பூர்த்தி செய்கிறேன். இச் சென்னைக் கவர்ன்மெண்டார் ஐயரின் தமிழ்ப் புலமையையும், தமிழ் நூல் ஆராய்ச்சியையும் மிகவும் மெச்சி அவருக்கு "மகாமகோபாத்யாய" என்னும் பட்டம் அளித்திருக்கிறார்கள். இச் சென்னை யூனிவர்ஸிடியாரும் ஐயரின் தமிழ்ப் புலமையையும் தமிழ்த் தேர்ச்சியையுங் கருதி "டாக்டர் ஆவ் லிடரேசர்" என்னுங் கௌரவப் பட்டத்தை 1932ஞு ஆகஸ்ட்டுமீ 3-வ நடந்த யூனிவர்ஸிடி ஸ்பெஷல் கான்வோகேஷனில் அவருக்கு அளித்தார்கள். அங்ஙனம் செய்ததில் யூனிவர்ஸிடியார் ஐயரவர்களைமட்டுமே யன்றித் தங்களையும் பெருமைப் படுத்திக்கொண்டார்க ளென்று நாம் சொல்லவும் வேண்டுமோ?

CONFERMENT OF HONORARY DOCTORATES

BY

DIWAN BAHADUR SIR K. RAMUNNI MENON,

Vice-Chancellor, Madras University.

[At a Special Convocation held for the third time in the history of the Madras University on August 3, 1932, to confer Honorary Doctorate Degrees on twelve distinguished personages at the Senate Hall, Madras, under the presidentship of the Chancellor, His Excellency Sir George Frederick Stanley, Diwan Bahadur Sir K. Ramunni Menon, *Vice*-Chancellor, spoke of Mahamahopadhyaya V. Swaminatha Aiyar, as follows):—

Mahamahopadhyaya V. Swaminatha Aiyar is, to use a zoological term, a persistent type. He belongs to the traditional type of scholar and pandit which has come down through the centuries and is now adapting itself to the somewhat uncongenial conditions of modern life. He received his early training under a reputed Tamil scholar and became a successful and respected Pandit in various educational institutions and later, Principal of the Tamil College, Chidambaram. As a member of various University bodies he has directed his efforts to the promotion of Tamil studies in the University and to the maintenance of

high standards of teaching and examination. He has edited on modern lines a number of old and rare classics aud other Tamil works and has also written several original works. By his indefatigable labours, he has placed the world of Tamil culture under an irredeemable debt. In recognition of his scholarship, he has received numerous titles and honours, the most notable of which is the title of Mahamahopadhyaya conferred by the Government. His literary productions and the outstanding position which he occupies in the world of indigenous learning mark him out as eminently worthy of the University's honour. The decision of the University to confer the Honorary Degree of D. Litt., on him has been acclaimed throughout the Tamil country and gratefully acknowledged as a valuable testimony to the University's deep interest in Oriental scholarship.

மஹாமஹோபாத்தியாய

உ. வே. சாமிநாத ஐயரவர்கள்

(ஸ்ரீமான் டி. எஸ். இராமச்சந்திர ஐயர்,
மானேஜிங் எடிடர், " கலைமகள் ", மதராஸ், எழுதியது.)

தமிழெனும் அளப்பருங்கடல் கடைந்து பன்னூல்களாம் அமுதினை அருளினர் அருங்கவிப் புலவோர். அவ்வமுதினை யருந்தித் தாம் இன்புற்றவண்ணம் உலகமும் இன்புறுமாறு வெளியிட் டருளிப் பேருதவிபுரிந்த பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி சாமிநாத ஐயர் அவர்களை அறியாதார் இத்தமிழுலகில் இல்லை. ஐயரவர்கள் இளம்பிராயத்திலேயே அதிக ஊக்கத்துடன் பல பண்டிதர்களிடத்துத் தமிழ் பயின்றார்கள். பின்னர் மஹாவித்வானாகவும் விஸ்தார கவியாகவும் விளங்கிய மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களிடத்தில் படித்தார்கள். அவர் காலத்திற்குப்பின் திருவாவடுதுறை மடத்தில் பலருக்குக் கல்வி பயிற்றி வந்தார்கள். பிறகு, கும்பகோணம் கவர்ன்மெண்டு கலாசாலையிலும் சென்னை இராஜதானிக் கலாசாலையிலும் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக இருந்தார்கள். பின்பு சிதம்பரம் மீனாக்ஷி தமிழ்க் காலேஜில் பிரின்சிபாலாக இருந்தார்கள். இப்பொழுது வயசு முதிர்ச்சியினால் அவ்வேலைகளினின்று நீங்கித் தம் காலமுழுமையும நூலாராய்ச்சியிற் செலுத்தி வருகிறார்கள்.

ஐயரவர்கள் சுமார் 50 வருஷ காலமாகத் தம்முடைய ஆசிரிய வேலைகளோடுகூட அருமை வாய்ந்த பல சங்க நூல்களையும், பழைய காப்பியங்களையும், பிரபந்தங்களையும் நன்கு ஆராய்ந்து பிழையறப் பதிப்பித்துத் தமிழருக்குச் செய்துவரும் உபகாரம் மறக்கற்பாலதன்று. அவர்களுடைய கல்விப் பெருமையையும் ஆராய்ச்சித் திறத்தையும் பாராட்டாதார் தமிழ்நாட்டில் ஒருவரும் இல்லை. கவர்ன்மெண்டாரும் இதுகாறும் தமிழ் வித்வான்கள் பெறப்படாத மஹாமஹோபாத்தியாயரென்ற பட்டத்தை அளித்திருக்கின்றனர். ஐயரவர்கள் இப்பெருஞ் சிறப்பும் புகழும் அடைவதற்கு ஆதாரமான அவர்களுடைய நற்குணங்கள் இன்னவையென்று தெரிந்து அவைகளை யாவரும் பின்பற்றுதல் தக்கதேயாம். சுமார் 25-வருஷகாலமாக ஐயரவர்களிடத்தில் யான் பழகியதனால் எனக்குத் தெரிந்த அவர்களுடைய மேலான குணங்களைச் சிறிது எடுத்துரைக்கலாமென்று நினைக்கிறேன்.

ஐயரவர்களிடத்திற் பாடங் கேட்கும் பாக்கியம் பெற்றிலனாயினும் அவர்கள் கற்போர் மனத்தைக் கவரும்படி சொல்லும் சக்தி வாய்ந்தவர்களென்பதை அவர்களுடைய மாணாக்கர்கள் பலராலும் கேள்விப்பட் டிருக்கிறேன். அவர்கள் இலக்கண பாடஞ் சொல்லும் பொழுதுகூட மாணாக்கர்கள் அதிக விருப்பத்தோடு கவனித்துக் கேட்பார்களென்று பலர் கூறுவர். இவ்வாறானால் அவர்கள் இராமாயணம் முதலிய நூல்களைப் பாடஞ் சொல்லுகையில் எவ்வாறிருக்கு மென்பது சொல்லாமலே விளங்கும். ஐயரவர்கள், பாடல்களைத் தக்க இசையுடன் படிக்கும்

பொழுதே அவற்றின் சுவை பிள்ளைகளின் மனத்தில் நன்ருய்ப் பதியுமென்ருல் அவர்கள் பொருள் விரித்துக் கூறின், எவ்வாறிருக்கு மென்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஆழ்ந்து ஆராயும் தன்மையினுல் பாடஞ்சொல்லும் நூல்களில் ஐயமறப் பொருளுணர்த்திக் கற்போர் மனத்திற் கலக்கமின்றிச் செய்வார்களென்றும், தமிழின் சுவையைக் கேட்போர்கள் என்றும் மறவாதிருக்கும்படி செய்வார்களென்றும் பலர் கூறியுள்ளார்.

தவிர, நான் நேரில் அவர்களிடத்திற் பழகியதனுல் அறிந்த தென்னவெனில், நூல்களை ஆராயுங் காலத்தில் ஆசிரியரின் கருத்து இன்னதென்று நன்ருய்த் தெரிந்து கொள்ள வேண்டுமென்றே பாடுபடுகிருர்களென்பதும், இக்காலத்தில் உள்ள வேறு சில வித்துவான்களைப்போல் தமக்குத் தோற்றிய பொருள்களை நூலின்கண் ஏற்றி யுரைப்பதில்லை யென்பதும் ஐயரவர்களுடைய சிறப்புக்குப் பெரிய காரணமாகுமென்பதே. அன்றியும், காலத்தைச் சிறிது கூட வீண் போக்காமல் எப்பொழுதும் நூலாராய்ச்சியிலேயே உற்சாகத்தோடு வேலைசெய்து அநேக நூதன விஷயங்களைத் தேர்ந்தெடுத்து உலகிற்குப் பயன்படுமாறு வெளியிடுகிருர்கள். பேசுங் காலத்தில் அவர்கள் சொல்லும் வார்த்தைகளாலும் விஷயங்களாலும் அவர்களது கல்வித்திறம் நன்கு விளங்கும். ஒப்புயர்வற்ற இக்கல்விச் சிறப்பு வாய்ந்திருந்தும் பிறரிடத்து அதைக் காட்டாமல் அதி வினயத்தோடு பேசுவார்கள். ஆயினும், யாரேனும் தமிழ் நூல் விஷயமாகப் பிழையான அபிப்பிராயங்களைக் கூறின் அவற்றைப் பொறுக்க மாட்டாமல் வினயத்துடன்

மறுப்பார்கள். அவர்களுக்குப் பெருங் காப்பியங்களி லுள்ள பழக்கத்தால் அவர்களுடைய சம்பாஷணைகளெல்லாம் மிகவும் ஆழ்ந்த பொருளைக் குறித்தே யிருக்கும். அவர்களிடத்திற சிறிதுநேரம் பேசினபோதிலும் அறியாதனவெல்லாம் அறிந்தோமென்னும் இன்பம் யாவருக்கும் உண்டாகும். வயசு முதிர்ச்சியினால் தேகம் தளர்ச்சியடைந்தபோதிலும், அறிவு கொஞ்சமேனும் தளராது அவர்கள் தமிழிற்கு உழைத்து வருகிறார்களென்பது எல்லாரும் வியக்கத்தக்கதே. அவர்கள் இப்பத்திரிகை வெளியிடுவதை அவசியமெனக் கருதி இதற்குக் கலைகளைக் குறித்து எழுதி யிருத்தல் தமிழின் அபிவிருத்தியில் அவர்களுக்குள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது. அவர்கள் தமிழிற்குச் செய்திருக்கும் உபகாரத்திற்குத் தமிழபிமானிகள் செய்யவேண்டிய கைம்மாறென்னவெனின், அவர்களுடைய நற்குணங்களையும் விடா முயற்சியினையும் பின்பற்றித் தமிழை விருத்தி செய்வதேயாம்.

இதுகாறும் ஐயரவர்கள் வெளியிட்ட நூல்களேயன்றி இன்னும் வெளியிட வேண்டியவை அநேகம் இருக்கின்றன. அவர்களுக்கு நீடித்த ஆயுளையும் தேக ஆரோக்கியத்தையும் கடவுள் அளிக்கவேண்டுமென்று பிரார்த்திப்போமாக.

—"கலைமகள்", மதராஸ்.

AN APPRECIATION

ஒரு புகழுரை

BY MR. K. G. SESHA AIYAR, B.A., B.L.,
Rd. Judge, High Court, Trivandram.

பொன்னி வளந்தரு புனனுடதனுள்
உன்னும் உத்தம தான புரத்தினன்;
மக்கட் குரிய மாண்குண மனைத்தும்
மிக்கநல் வேதியன்; விழுத்தமிழ்க் கலையில்
தக்க தேர்ச்சியில் தன்னிக ரிலனென
மிக்க சீர்த்தி மேவுறு மேன்மையன்;
கனிதமிழ்க் கல்வி கற்பவர்க் களித்து
நனிமீக் கூறு நறுமலர் சூடினேன்;
மன்னு தீந்தமிழ் வளர்ப்பா ரின்றித்
தன்னெழில் குன்றித் தளர்வுறு காலை,
இலக்கிய இலக்கணச் சுவடிகள், தேடுழித்
தலத்துறு தடைகட்குத் தான்சலி யாது;
மடுத்தவா யெல்லாம் வலமுறு பகடென
இடுக்கண் எவையும் இடர்பட வென்று
நுணுகியா ராய்ந்து நூல்களச் சியற்றிப்
புணரிசூழ் புவிக்குப் புரிந்த உதவியன்;

பேணுதா க்ஷிணாத்ய கலாநிதிப் பெற்றியும்
மாணுறு மகாமகோ பாத்தியாய பட்டமும்
இருபெரு வரிசைமுன் எய்திடப் பெற்றோன்;
பொருவற நன்சொற் பொழிவு நிகழ்த்துவோன்;
இயற்கை யறிவின் இடையறு ஊக்கின்
செயற்கரிய செய்து சிறந்து விளங்குவோன்;
தன்பணி யறியுந் தமிழபி மானிகள்
நன்பொற் கிழிமுன் நல்கிடப் பெற்றோன்;
கல்வித் துறையில் கைதேர்ந் தவர்க்கு
நல்கு நலத்தின் முன்னதாம் வரிசையென்
றியம்புறு கௌரவ இலக்கிய டாக்டராம்
நயம்பெறு மகுடம் நாலா றுண்டுமுன்
எய்துதற் குரியன் இந்நாட்பெற் றுனெனுஞ்
செய்தி செவிபுகத் தென்மொழி நாடெலாம்
பெருமகிழ் எய்தப் பிறங்கும் பெருமையன்;
திரு. வே. சாமிநாதையனுஞ் சீரியன்
இன்னும் இம்மா நிலமிசை இசையொடு
தன்னவா நிறைவுறத் தழைத்து வாழியவே!

—“ செந்தமிழ்,” மதுரை.

Necklace of Nine Gems

நவமணி மாலை

BY MR. V. MUTHUSWAMI AIYAR, M.A., L.T.,
Dy. Inspector of Schools, Polur.

[சென்னைச் சர்வகலா சங்கத்தார், ப்ரும்மஶ்ரீ மஹா மஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி உ. வே. சாமிநாதையர், D. LITT., அவர்களுக்குக் "கலாநாயகம்" (DOCTOR OF LITERATURE) என்னும் ஆங்கிலப் பட்டம் சூட்டியது கேட்டு, அன்னார் அருமை பெருமைகளைப் பாராட்டி அந்தாதித் தொடையிற் பாடிய நவமணி மாலை.]

நேரிசை வெண்பா.

1. தக்க'கலா நாயக'மாச் சார்பட்டம் சென்னை நகர்த்
தொக்ககலா சங்கத்தார் சூட்டினரால்—மிக்க கலை
தேர்ந்த புலவர் சிகாமணி ! நின் சீரிந்நாள்
ஓர்ந்துசீர் உற்ற துலகு.

---

1. தொக்க - கூடிய; இப்பட்டம் அளித்தற்கென்றே விசேஷக் கூட்டம் (Special Convocation) கூடிய என்றபடி.

கலிநிலைத்துறை.

2. உலக மெங்கணும் ஒண்கலைக் கதிர்விரித் தோங்கும்
அலகில் பானுவை அணிவிளக் குபசரிப் பதுபோன்ம்
பலக லைப்பெரும் பொருள்படி புகழ்மிகப் பரந்தே
இலகு நிற்கிவர் அளித்தசொற் றுடைச்சிறப் பிசைந்தே.

அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

3. தேவா லயம்பு திதொன்றுகனி சிறப்ப எடுத்த லினும்சீர்த்தி
காவா தழியும் ஒன்றைநலம் கவினத் திருத்தல்; ஆங்கதுபோல்
நாவார் புலமைப் புண்ணிய!எந் நாளுந் தமிழ்த்தொன் னூல்
[பலவா
ஓவா நலத்திற் பதித்துள்ளம் உவந்தாய் கலைமா விற்பனனே

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

4. விற்பணி வீர மாண்பும் விளங்குசீர்க் காட்சி யோங்கும்
கற்பணிக் கோவில் மாண்பும் காண்டகு தொண்ட ராற்றும்
நற்பணி மாண்பும் சான்ற நம்தமிழ் நாட்டில் தொன்னூற்
சொற்பணி மாண்பு கூட்டித் தொகுத்தனை போற்றி அம்மா !

---

2. போன்ம் - போலும். சூரியனைக் கைவிளக்கால் ஆராதிப் பதுபோலும், பொருணலம் மிக்க நூற்புகழ் சிறந்தவரைச் சொற் றொடைப் பட்டத்தாற் சிறப்பித்தது என்க.

3. புதியகோவில் கட்டுதலைவிடப் பழையதொன்றைத் திருத் திப் பரிபாலித்தல் சிறந்த தருமமாம். அத்தகையதே, புதுநூல்கள் இயற்றலைவிடப் பழந் தமிழ்நூல்களைப் பரிபாலித்தலும்.

4. தமிழ்நாட்டில் வீரர் பெருமையும் கோவில் மாட்சியும் அன்பர் பணியும் மல்கியிருப்பதோடு ஐயரவர்கள் ஆற்றிய சொற் பணியும் (புத்தகப் பணியும்) சேர்ந்து விளங்குதல் சுட்டப்பட்டது.

கட்டளைக் கலித்துறை.

5. போற்றி மகிழ்வாய் புராரிபொற் பாதம் பொருந்தலர்க்கே
ஆற்றி மகிழ்வாய் அரும்பொறை சாமிநா தைய!மெய்யே
தேற்றி மகிழ்வாய் தினம்பல சீடரைச் செந்தமிழ் அச்(சு)
ஏற்றி மகிழ்வாய் பலசங்கத் தூயநூல் எத்துறவே.

கோச்சகக் கலிப்பா.

6. தூய அருள் மீனாட்சி சுந்தரர்பால் நைந்திளகி
நேயமுரு குள்ளமுடை நின்மலனே ! நீள்சங்கம்
மேயதமிழ் அமுதூட்டி மேதினியெல் லாம்புரக்கும்
தாயினுநற் றயையுடையாய் சாற்றுவதென் கைம்மாறே.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

7. மாற்றரிய தபோநிதியாம் வரகுருசங்
கராசார்யர் மதிக்கும் கீர்த்தி

---

5. புராரி - திரிபுரத்தை அழித்த சிவபிரான் ; பொருந்தலர்-பகைவர்.

6. மீனாக்ஷிசுந்தரர்—தமிழ்த் தெய்வமாகிய மதுரைச் சிவபிரான் ; இதுவே நமது ஐயரவர்களுக்கு வித்யாகுருவான திரிசிரபுரம் மகாவித்வான் பிள்ளையவர்கள் பெயரும். சங்கம் , சிலேடை, தாய் பாலூட்டும் சங்கு என்றும், தமிழ்ச்சங்கம் என்றும் பொருள் படும்.

7. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்து ஜகத்குருவாய் விளங்கும் சங்கராசார்ய சுவாமிகள், . ஐயரவர்களுக்கு தாக்ஷிணாத்ய கலாநிதி எனப் பட்டம் அளித்துள்ளது குறிப்பிடப்பட்டது. ஒரு நிதியே யன்றிப் பல நிதிகளாக விளங்குதல் பின்னிரண்டடியிற் காண்க.

சாற்றரிய தாக்ஷிணாத் தியகலா
நிதியேநிற் சார்வார்க் கென்றும்
ஏற்றறிய குணநிதியே! இணையில்லாக்
குருநிதியே! யாவ ராலும்
போற்றரிய புலநிதியே! புகல்நிதியே!
முத்தமிழ்க்குப் புலவ ரேறே!

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

8. முச்சங்கம் திகழ்ந்ததமி ழகத்தே வந்து
முன்னாள்தொட் டிலகுபல முடிசார் மன்னர்
மெச்சுபெரு வள்ளன்மார் புலவோர் வீரர்
வியன்வரலாற் றியல்துருவிப் பல்லோர் இந்நாள்
இச்சையுடன் செயும்சரித நூலாராய்ச்சி
இன்னவெலாம் நீயருளின் நிறைவா லிட்ட
பிச்சையின்நல் விளைவன்றோ? நச்சி நாளும்
பெரியோர்தம் உச்சியிற்கொள் விச்சைவாழ்வே.

கலிவிருத்தம்.

9. வாழ்க மாமஹோ பாத்தியா யர்வளம்
வாழ்க செந்தமிழ் வண்கலை நாளுமே
வாழ்க சென்னை வளர்கலா சங்கம்சீர்
வாழ்க வையகம் தக்கவர் வாழ்கவே.

—"செந்தமிழ்," மதுரை.

---

8. பற்பல தமிழ்நாட்டுப் பெரியார் சரித்திர ஆராய்ச்சிக்கு ஐயரவர்கள் பதிப்பு நூல்களே பெரிய ஆதாரமென்பது கூறப்பட்டது.

9. ஈற்றடியில் தக்கவர் என்பது முதற்கவியின் முதற்சொல்லாகிய 'தக்க' என்பதோடு மண்டலித்து நிற்கும்.

MAHAMAHOPADHYAYA

DR. V. SWAMINATHA AIYAR

BY

MR. T. S. KOTHANDARAMA AIYAR, B.A.,
Editor, The "Educationist", Madras.

(Now that we are on the eve of the opening of the Tamil Lovers' Conference, a more fitting opportunity cannot present itself, it seems to me, for placing before the public a short sketch of the life and career of Mahamahopadhyaya Dr. V. Swaminatha Aiyar, the Chairman-elect of the Reception Committee of the Conference. I have, therefore, much pleasure in contributing an upto-date sketch to the pages of this Symposium about that distinguished Tamil scholar, however unequal to the task I may be found to be by gentlemen that happen to know more of him.)

Mahamahopadhyaya Dr. V. Swaminatha Aiyar is a distinguished Tamil scholar of this Chola Nad. He belongs to Uthamathanapuram, a small village that lies close to Papanasam in the Tanjore District. His father was one Sri Venkatasubbier that was well-known for his piety and musical learning. As soon as young Swaminatha reached his boyhood, Sri Venkatasubbier did not think of giving English education to his boy as, in those days, that idea was a wholly remote one in the rural areas.

He thought, it used to be said, of giving a good musical education to his boy as he himself was a good musician; but that was not to be. Eventually he resolved to take his son to Sri Minakshisundaram Pillai to learn Tamil as in the meantime young Swaminatha had acquired a fairly good knowledge of it having had access to a few Pandits of local fame in and around Ariyalur and learnt that language under them.

In those days Sri Minakhisundaram Pillai was the *Atheenam Vidwan* of the Tiruvavaduthurai Mutt, and under him Mr. Aiyar learnt his Tamil. There were no doubt a few others that read along with him, but he stood top-most in the estimation of his teacher. With Mr. Aiyar's entrance into the Mutt dawned the date of a new epoch in his life; for ere long the Pandit Swaminatha of the Mutt blossomed into the Professor Swaminatha of the College. This was how it happened. The days of Mr. Aiyar's tutelage under Sri Minakshisundaram had closed, and Mr. Aiyar himself was occupying the place of the *Atheenam Vidwan* after the demise of his *Guru* when Mr. Thyagaraja Chettiar, the Senior Tamil Pandit of the Kumbakonam College in those days, began to set his eyes upon Mr. Aiyar as the person pre-eminently fitted to step into his shoes in the College, and suggested to the Principal the idea of calling in the *Vidwan* of the Mutt to fill the Tamil Pandit's place after his retirement. Rai Bahadur T. Gopala Rao that was then acting as the Principal of the College, readily fell in with the view of Mr. Chettiar, recommended Mr. Aiyar to the Director of Public Instruction as the only man that could and that would worthily

fill Mr. Chettiar's place in the College, and got young Swaminatha appointed as the Senior Tamil Pandit. This was in 1880. In faithful recognition of the permanent good that Mr. Chettiar did, Mr. Aiyar has named his house in Tiruvatteeswaranpet, Madras, as "**Thyagaraja Vilas**", and kept Mr. Chettiar's memory ever green.

From 1880 Mr. Swaminatha Aiyar was the Tamil Pandit of the Kumbakonam College for 23 years when he was transferred to the Presidency College, Madras. During his regime as the Director of Public Instruction, Mr. G. H. Stuart, a former Principal of the Kumbakonam College, that knew Mr. Aiyar very intimately, got him transferred to the Presidency College, as if it was the place where he ought to have been for a long time in the past. At the Presidency College also Mr. Aiyar was the Tamil Pandit for 16 years. It might therefore be said to his credit that he held the post of Tamil Pandit for 39 long years. But could it be said that during the latter part of this period he was lacking in his energy and enthusiasm as a teacher? No. He brought to bear upon his teaching the fund of all the additional knowledge he had acquired as the result of his researches in the field of Tamil literature to which I shall presently refer.

It will not be out of place if I say here a few words about Mr. Aiyar's teaching. A Pandit's class is a pandemonium, it used to be said, very commonly. But Mr. Aiyar's class was no such thing. His was not the prosaic teaching of the ordinary Pandits; it was of a very high order. There was something very enthusing in his personality. This trait in him was heightened all the more by that rare

talent of his which kept his pupils spell-bound when he was lecturing to them. It is no encomium but only solid truth to say that his Tamil class was the embodiment of discipline. Though he taught only Tamil, he took his place and rank with the great English masters of those days, namely, Rai Bahadur T. Gopala Rao, Mr. G. H. Stuart, Mr. J. B. Bilderbeck, Rao Bahadur S. Seshayya and Mr. J. M. Hensman. His Tamil pupils considered themselves to be a favoured lot and worshipped him as their Tamil " Thaivam."

Even after retirement our Aiyar had to keep on the academic robe for some time. Sir Annamalai of Annamalai University fame thought of utilising his services as soon as he retired, and appointed him Principal of the Tamil College, Chidambaram. Its headship he retained for a short span of three years. From there he returned to Madras to take—so to say—his well-earned rest.

This is a brief resume of his career as a Tamil lecturer, and now I pass on to consider the research work he has already done in Tamil and which he still continues to do in spite of his advanced age. The books he has edited and published—I shall not be wrong in saying he has brought back to life—*Chintamani*, *Silapathikaram*, *Manimekhalai*. etc., are monumental works. He has worked at them in the spare moments of an otherwise strenuous life, and done them to perfection with unremitting toil, unabated vigour, and unflinching courage. He has had as his life's work the rejuvenation of old Tamil literature that had been left to decay for ages in the past. He set his heart upon the resuscitation of the old Tamil

classics and worked at them daily for many a long hour not knowing at times even the dawn of day or the fall of night.

Every one will admit that it is a difficult task to edit and publish old works that are to be had only in cadjan leaves with letters eaten away by white ants, with words altered or left out, with lines run into one another, with alliterative marks mutilated, with no dots over consonants and with no devices to differentiate the poetical lines given in illustration from the *original* that is being deciphered. All these difficulties Mr. Aiyar has encountered and surmounted not for a year or two or three, but for the last 50 years and more and placed his Tamil works within our easy reach.

His intellectual worry apart, I have to refer to the physical discomfort also he put himself to many a time. During College vacations he used to tour to distant places to collect cadjan copies when he would be moving from one place to another almost incessantly. For the first few days he would be at Madura, for the next few days in Chettinad, and for the remaining portion of the vacation in far-off Tinnevelly. One day he would be at Vembathur, the next day at Ramnad, the day after at Ettayapuram, and the day succeeding at Seitur. Be it remembered that in those days there were no facilities of railway communication in the parts in which he toured. At times he would even forego his midday meal or supper. But all these privations were nothing to him as compared with the pleasure he was going to derive from the publication of the ancient Tamil classics.

The question may arise as to whether in consideration of the stupendous work he has been doing all these years Mr. Aiyar had any help from the Government. He got a small sum, no doubt, of a thousand rupees. Had this been a recurring grant, it would have been of invaluable help to him.

I am afraid I shall be accused of writing at great length and so I conclude. But before doing so I would gladly refer here to the title of "Mahamahopadhyaya" conferred on him 27 years ago, to his connection with the Madras University as a member of the Board of Studies in Tamil as well as of the Tamil Lexicon Committee, to the series of Tamil lectures he delivered under the auspices of the University sometime back, and make very prominent mention about the Madras University conferring upon him, in recognition of the superhuman work he has been doing in the field of Tamil literature, the honorary degree of *Doctor of Literature* at the Special Convocation held in 1932. Need I say that in so doing our University took a bold step in the right direction so as to reflect much credit upon itself?

TEL : "HIDUNESAN", MADRAS. TELE : 2052.

The "HINDU NESAN"

THE LEADING TAMIL WEEKLY NEWSPAPER IN SOUTH INDIA

PUBLISHED EVERY SATURDAY

Subscription : Rs. 6/- per annum ... (Inland)
do. „ 10/- do. ... (Foreign)

It commands a decent circulation throughout the Tamil Districts also in Burmah, Ceylon, S. S., F. M. S., British South Africa, Jamaica, U. S. A., The United Kingdom and Mauritius.

Contains News of varied interest,

Stands as a best medium for advertising.

A great many people don't know what they want in this world until they see it advertised. Other people know what they want, but don't know where to get it. Advertising in the "**Hindu Nesan**" tells them.

L. ANANTAIYAR,
Editor & Proprietor, The "Hindu Nesan",
65, Armenian St., Madras (India).

THE "HINDU NESAN"

ANNUAL SUPPLEMENT

As one of the Leading Tamil Newspapers of Madras, **The Hindu Nesan** has been maintaining its prestige and popularity for the past 32 years. At the request of some of our customers, who have realized the benefits of having recourse to our advertisement columns, we have been, for some years past, issuing an Annual Supplement with special articles from eminent contributors and special advertisements from business people. The Supplement will be bilingual, and thoroughly illustrated. It will be in Demy Folio size and will contain a number of pages and a coloured wrapper. We are issuing 5,000 copies of this Supplement. If you should choose to avail yourself of this opportunity, as we trust you would, you will find the same as a first class medium advertising.

For Rates apply to :—

L. ANANTAIYAR,

Editor and Proprietor, The "Hindu Nesan,"

65, ARMENIAN STREET, MADRAS E.

Kabeer & Sons. Printers, Vepery, Madras.